www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 15 ஏப்ரல் 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 112



[illegible]

# பேரினவாதத்தை அச்சுறுத்தும் இந்திய மக்களின் ஆதரவு!

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வையன்றி சமாதான நடவடிக்கைகளினூடே அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்று இந்தியாவின் இடதுசாரிகள் வலியுறுத்திக் கூறிவருகின்றனர். அதற்கான அழுத்தத்தை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும் என்றும் அவை கூறியுள்ளன. இந்திய அரசாங்கம் ஆசியாவின் இஸ்ரேலாக செயற்படக் கூடாது என்றும் இடதுசரிகள் இந்திய அரசாங்கத்தை விமர்சித்துள்ளனர். இந்தியா இலங்கை அரசாங்கத்தின் 'இராணுவ தீர்விற்கு' உதவுவது இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் இஸ்ரேலாக செயற்படுவதாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். அமெரிக்காவிற்கு சார்பாக இந்தியா செயற்பாடுவதனால் இப்பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியதினை நிலைநிறுத்துவதாகும். அதனால் இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாட்டு முற்போக்கு சக்திகளும் அமெரி க்க ஏகாதிப த்தியத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்துள்ளன.

இந்தியாவிலுள்ள எல்லா இடதுசாரிக் கட்சிகளும் எல்லா காலகட்டங்களிலும் சரியான நிலைப்பாட்டை எடுத்தன என்று கூறுவதற்கில்லையாயினும் தமிழ் நாட்டிலுள்ள சில

பக்கம் 2

# மலையகத்தில் ஜே. வி. பி இனவெறிக் கூச்சல்!

## பு.ஜ.கட்சி உறுப்பினர் சாட்டை

வலப்பனை, ஹங்குரான்கெத்த ஆகிய பிரதேசங்களில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு தோட்ட தொழிலாளர்களைப் பலாத்காரமாக வெளியேற்றியாவது இடம் வழ ங்க அரசாங்கம் முன்வர வேண்டும். கடந்த ஒரு வருடகாலமாக அநாதைகளாக உள்ள இம் மக்களுக்கு இடம் வழங்க தோட்டங்களில் உள்ள சிலரும் தொழிற்சங்கத் தலைவர்கள் சிலரும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர். ஆகவே அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பலாத்காரமாகத் தொழிலாளர்களை வெளியேற்றி இடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கடந்த மார்ச் 31ம் திகதி நடந்த வலப்பனை பிரதேச சபையின் கூட்டத்தில் ஜே.வி.பி உறுப்பினர் மத்தும பண்டார பேசுகையில் குறிப்பிட்டார்.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலம் வழங்குவதில் உள்ள சிக்கல் குறித்து விவாதிக்கப்பட்ட போதே அவர் மேற்படி கூறினார். இவரின் கூச்சலுக்கு பதில் அளித்துப் பேசிய புதிய- ஜனநாயக கட்சியின் வலப்பனைப் பிரதேச உறுப்பினர் தோழர். ச. பன்னீர்ச் செல்வம் ஜே.வி.பி உறுப்பினரின் உரைக்கு கடும் கண்டனம் தெரிவித்து உரையா ற்றினார். அவர் தனது உரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலமும் உரிய நிவாரணமும் வழங்க வேண்டும். அற்கான எமது ஆதரவை இச்சபையில் ஏற்கனவே தெரிவித்துள்ளோம். ஆனால் இங்கு பேசிய ஜே.வி.பி உறுப்பினர் கூறியவாறு தோட்டத் தொழிலாளர்களைப் பலாத்காரமாக வெளியேற்றி நிலம் வழங்க நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. ஜே.வி.பியின் இனவெறிக் கூச்சலுக்கு நாம் அடிபணியப் போவதில்லை. இம்மண்ணில் இருந்து யாரும் எங்களை வெளியேற்ற முடியாது. இது நாங்கள் வாழ்ந்து வந்த பூமி. இப்போதும் வாழுகின்ற மண். இதில் இருந்து எங்களை வெளியேற்ற அரசாங்கத்திற்கு

பக்கம் 4

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல்

## பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல்

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாத உள் நோக்கங்களை முன்னெடுக்கும் ஒரு கருவியாகவே முன்னெடுக்கப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினை இருந்து வருவதை நிராகரித்து யுத்தம் முன்னெடுக் கப்படுவதை வலியுறுத்தியே இத் தேர்தல் நடாத்தப்படுகிறது. வடக்கு கிழக்குத் தமிழ் மக்களைப் பிரிக்கவும் தமிழ்- முஸ்லீம் மக்களிடையே மோதல்களை உருவாக்கவும் இத் தேர்தல் பயன்படப் போகின்றது. ஆதலால் அர்த்தமற்ற இக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் எமது புதிய- ஜனநாயக கட்சி எவ்விதத்திலும் பங்கு கொள்ளவில்லை.

இவ்வாறு புதிய- ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் கிழக்கு மாகா

பக்கம் 4

## புரட்சிகர மேதினம்

★ யுத்தைத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண வற்புறுத்தி.
★ பொருளாதார நெருக்கடியைத் தடுத்து வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தக் கோரி.
★ ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் நசுக்கப்படுவதை எதிர்த்து.
★ உழைக்கும் மக்கள் அனைவரினதும் உரிமைகளையும் ஐக்கியத்தையும் வற்புறுத்தி.
புரட்சிகர மேதினத்தில் அணிதிரள்வோம்!

### புதிய- ஜனநாயக கட்சியின் மேதினக் கூட்டங்கள்

அட்டன் யாழ்ப்பாணம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

### ஆழ்கடல் ஆராய்வும் ஆயுதக் கடத்தலும்

மார்ச் 19ம் திகதி காலை ஆறுமணிக்கு சக்தி எவ். எம்மில் ஒரு செய்தி அறிவித்தல் கேட்டது. பிரபல விஞ்ஞானி ஆத்தர் சி. கிளாக் அதிகாலை காலமானார் என்ற தகவலைத் தொடர்ந்து அவர் ஆயுதக் கடத்தல் தொடர்பாக 1950களில் இலங்கைக்கு வந்து இங்கேயே தங்கிவிட்டார் என்று சொல்லபபட்டது. எனக்கு இது புதினமாயிருந்தது. சில நிமிடங்கள் கழித்து மீண்டும் அதே மரணச் செய்தி. இம்முறை ஆத்தர் கிளாக் ஆழ்கடல் ஆராய்சி தொடர்பாக வந்து இலங்கையில் தங்கிவிட்டதாகக் கூறப்பட்டது.

முதலிற் சொன்னது தவறு என்றோ அதற்காக மன்னிக்க வேண்டுகிறோம என்றோ ஒரு சொல்லேனும் கூறப்படவில்லை இது தான் அந்த நிறுவனத்தின் ஊடகப்பண்பாடா? இன்று ஊடகங்களில் ஒரு பொதுவான பிரச்சனை உண்டு. செய்தி வாசிப்பவர்கட்கு முறையான மொழிப் பயிற்சியோ அறிவித்தல் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. செய்தியை எழுதுகிறவர்கள் கூட உலக அறிவு போதாதவர்களாக உள்ளனர். எதையும் வானொலியில் அறிவிக்க முதல் வெள்ளோட்டமாக ஒரு தடவை வாசித்துப் பார்க்கிற பழக்கமே இல்லை என்பதைப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் முதல் செய்தி அறிக்கை வரை காண முடிகிறது. இதற்கு ஊடக நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும்.

பணம் வந்தால் போதும் என்பதற்காக எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற நிலையில் எப்படித்தான் வாசித்தால் என்ன?

### சகவாழ்வுச் சம்பாத்தியம்

என். ஜி. ஓக் குபேரர் குமார் ரூபசிங்ஹவின் இன்னொரு கம்பனி சகவாழ்வு மன்றம். அதனுடைய நோக்கம் மொழிப் பிரச்சனையைத் தீர்ப்பது. அதைத் தீர்த்தால் போர் முடியும் சமாதானம் மலரும் தேசிய இனப்பிரச்சினை தீர்ந்து விடும். அவ்வையார் 'வரப்புயர' என்று சொன்னமாதிரி இது ஒரு எளிமையான சூத்திரம். அதை எப்படிச் சாதிப்பது என்றால் அதற்கு ஆதரவாக ஒரு லட்சம் கை ஒப்பங்களைச் சேகரித்துச் சனாதிபதியிடம் சமர்ப்பிப்பது. சனாதிபதி அதனால் மனமிளகித் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்று யார் நம்பினாலும் விட்டாலும் கவலையில்லை நம் என்.ஜி.ஓ குபேரரின் இலக்கு வேறு. அவர் ஏற்கெனவே ஒரு கையொப்பத்துக்கு இத்தனை என்று அவருக்கு நிதி வழங்குகிற பன்னாட்டு என்.ஜி.ஓ நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்திருப்பார். இந்தப் பணி முடிந்தால் இன்னொரு பணி தொடங்கப்படும். நாட்டில் போரும் இனப்பிரச்சனையும் தொடரும் வரை என்.ஜி.ஓப் பிழைப்புக்குக் கேடேது.

### கனிமொழியின் சுவடு

காலஞ் சென்ற எழுத்தாளர் சுந்தரராமசாமியின் குடும்பச் சொத்தான காலச்சுவட்டுக்கு இரண்டு இலட்சியங்கள் உண்டு. ஒன்று சுந்தர ராமசாமியை பாரதிக்கும் புதுமைப் பித்தனுக்கும் ஈடானதும் அவர்கட்குப் பிந்திய அதியுயர்ந்த இலக்கியச் சிஹரமாகக் காண்பிப்பது. மற்றது வெறும் வியாபாரம். அதேவேளை தனது மாக்ஸிய விரோத அரசியலைத் "தலித்திய" "திராவிட" இயக்க லேபல்கள் கொண்ட அடியாட்கள் மூலமும் முன்னெடுப்பதில் அதற்குச் சிறப்பான ஆற்றல் உண்டு.

கருணாநிதியின் மகள் கனிமொழி முற்றிலும் குடும்ப அரசியல் மூலம் டெல்கிப் பாராளுமன்றத்திற்குப் போனவர். வேறு யாராகவும் இருந்திருந்தால் காலச்சுவடு நக்கலடித்தே அவரை நாறடித்திருக்கும். கனிமொழி கதை வேறு. அவர் வேண்டப்பட்டவர்களுள் ஒருவர். டில்லிப் மேலவையில் அவரது முதலாவது உரையைப் பக்தி பூர்வமாகக் காலச்சுவடு இவ்வருட முதற்பகுதியில் வெளியிட்டு இருந்தது

கனிமொழி பரிந்துரைத்த விடயங்கள் என்ன? அந்நிய முதலீட்டின் வருகை அமெரிக்க- இந்த அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஆதரவு இவை போன்ற இந்திய மக்கள் விரோதக் கொள்கைகள் தான். இவற்றுக்காகக் காலச் சுவடு கனிமொழியைக் கண்டிக்குமா? அது மிகவும் ஐமிச்சமான விடயம்.

### கபட நாடகங்கள்

செ. யோகநாதனின் மறைவையொட்டிப் போட்டி போட்டுக் கொண்டு இரங்கற் கூட்டம் ஏற்பாடு செய்தார் ஒரு சின்னத்தனமான சஞ்சிகையின் ஆசிரியர். அதுவும் போதாமல் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காகச் செயற்படுகிறதாகச் சொல்லிக் கொள்ளுகிற அமைப்புக்கள் எல்லாம் காலந்தாழ்த்தியே அஞ்சலி செய்தன என்று அவர் சார்பாக வீறாப்பாக ஒரு பிரபல நாளேட்டின் வாரப்பதிப்பிலும் எழுதப் பட்டது. யாருக்கு யார் முதலில் அஞ்சலி செலுத்தி விளம்பரந் தேடுகிறார்கள் என்பதை விட யார் நெஞ்சுக்கு நேர்மையாக நடந்து கொள்கிறார்கள் என்பது முக்கியமானது.

மேற் குறிப்பிட்ட முதலாவது அஞ்சலிக் கூட்டப் புகழ் சஞ்சிகை ஆசிரியர் அதே யோகநாதன் இறப்பதற்குச் சில மாதங்கள் முன்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த "படித்ததில் பிடித்தது" நிகழ்சியிற் பேசிய போது குந்தவையின் ஒரு சிறு கதையை மிகவுஞ் சிலாசித்துப் பேசினார். அக் கதை யோகநாதனின் மீதானது அப்பட்டமான தனிப்பட்ட தாக்குதல். அவரைத் தாக்குகிற சில வரிகளைச் சப்புக் கொட்டிச் சுவைத்து வாசித்துப் பகிர்ந்து கொண்ட அந்த மனிதர் தான் இன்று தான் முதலாவதாக முதலைக் கண்ணீர் வடித்தேன் என்று பெருமை பேசிக் கொள்கிறாரா?



# விசாரணை செய் அல்லது விடுதலை செய்!

## புதிய - ஜனநாயக கட்சியின் கோரிக்கை

எமது புதிய- ஜனநாயக கட்சித் தோழர்களான வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன் ராஜ், என். கிருஷ்ணப்பிரியன் ஆகியயோர் கைது செய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகி உள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட அவர்கள் இன்றுவரை நீதிமன்ற விசாரணைக்கு நிறுத்தப்பட வில்லை. மலையகப் பிரதேசத்தில் நமது கட்சி வாலிபர் இயக்கம் தொழிற்சங்கம் என்பனவற்றின் வளர்ச்சிக்காக முன்னின்று அரசியல் பணியாற்றியவர்கள் மேற்படி தோழர்கள். மூன்று ஆசிரியர்களும் இரண்டு ஆசிரிய நியமனம் கிடைத்தவர்களுமான எமது தோழர்கள் அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்குடனேயே விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத் தோழர்கள் செய்த குற்றம் என்ன? கொலை செய்தார்களா? கொள்ளையடித்தார்களா? பிற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டனரா? இல்லவே இல்லை. அவர்கள் செய்த ஒரே "குற்றம்" மலைய மக்களின் சமூக மாற்றத்திற்கான மாக்சிச லெனினிசக் கொள்கைகளைக் கொண்டிருந்தமைதான். அதற்காக மலையகத்தில் கடுமையாக வேலை செய்து வந்தமை தான். பிறபோக்கு சக்திகளையும் ஆளும் வர்க்கத்தையும் எதிர்த்து மக்கள் மத்தியில் அரசியல் விழிப் புணர்வை ஏற்படுத்தி வந்தமைதான். ஆதலால் நமது கட்சியினதும் மக்களினதும் கோரிக்கை எமது தோழர்களை நீதிமன்ற விசாரணைக்கு நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்பதேயாகும். விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற எமது கட்சி யின் நிலைப்பாடு எமது தோழர்களுக்கு மட்டு மல்ல. அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக அரசியல் கைதிகள் அனைவருக்குமாக முன்வைக்கும் கோரிக்கையாகும்.


## வெளிவந்து விட்டது

இரண்டாவது பதிப்பு




விநியோகம்
வசந்தம் புத்தகசாலை
இல 44, 3 வது மாடி
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி
கொழும்பு- 11 தொ. பேசி : 2335844


1ம் பக்க தொடர்ச்சி

### பேரினவாத அச்சு

தமிழ்க்கட்சிகள் அவற்றின் இருப்பிற்கு இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதுபோன்று இந்திய இடதுசாரிகட்சிகளுக்கு தேவை இருக்கவில்லை. ஆனால் தற்போது அவை காட்டிவரும் கரிசனையும் அக்கறையும் கவனத்திற்குரியன.

இந்திய மக்களிடையே குறிப்பாகத் தமிழக மக்களிடையே இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவான நிலைப்பாடு என்றுமே இருந்து வந்துள்ளது. அவற்றை இந்திய ஊடகங்கள் அவற்றின் தேவைக்கு ஏற்ப உரத்தும் அடக்கியும் வாசித்து வந்துள்ளன. அண்மைக்காலமாக தமிழக மக்களின் இலங்கைத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை பெரிதாக காட்டி வருகின்றன. இதனால் இப்போது தமிழகத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான அலை அதிகரித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

இருப்பினும் இந்தியாவில் புலம்பெயர்ந்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்கள் இந்தியப் பொலிசாரால் துன்புறுத் தப்படுவதை கண்டு கொண்டதாக இல்லை. ஆனால் ஊடகங்களின் ஆதிக்கத்தையும் கடந்த நிலையில் இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாடு ஒருங்கிணைப்புகளை நோக்கிய நகர்வதாக தெரிகிறது. தமிழக கட்சிகள் பல ஐக்கியப்பட்டு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து வருகின்றன.

தமிழக மககளின் இந்த உணர்வலைகளை சிம்மசொப்பனமாகவன்றி "வெறும் தோசை மசாலவடை" என்றே இலங்கையின் பேரினவாதம் அலட்சியம் செய்கிறது. இராணுவ நடவடிக்கைகளை மேலும் உக்கிரமாக முன்னெடுத்துவருகிறது. ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்களையும் இலங்கை அரசாங்கம் அலட்சியம் செய்தே வருகிறது.

இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆரவான உணர்வலைகள் இந்தியா, ஐரோப்பா போன்றவற்றை கடந்து தென்னாபிரிக்கா, ஏனைய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் எழத் தொடங்கியுள்ளன. இது கடந்த மாதம் லண்டனில் நடைபெற்ற உலகெங்கும் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களின் அக்கறைகள் பற்றி மாநாட்டில் எதிரொலித்துள்ளது.

இதேபோன்று கடந்த மாதம் நடைபெற்ற ஐ.நா. சபையின் மனிதஉரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மீது பலவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைளால் நேரடியாக தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்பட்டுவிடாது. ஆனால் அவை பேரினவாததிற்கு சவாலானவை என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்விடயங்கள் கருத்தில் கொள்ளப்படாது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் பேரினவாதத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து அனுமதிக்கப்படுமானால் முழு இலங்கையும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டமே உருவாகும். இதனால் இப்பிராந்தியத்தின் அமைதியை குலைக்கும் வகையில் இலங்கையின் தேசிய இன விவகாரத்தை கொண்டு வல்லரசுகள் தலையிடலாம் ஏற்கனவே அதற்கான சகுனங்கள் தென்படத் தொடங்கிவிட்டன.

ஐ.நா தலைமீடு மூலம் அமெரிக்க- மேற்குலக வல்லரசுகளின் வருகையா? அல்லது 13வது திருத்தத்தின் அடிப்படையில் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்தின் மீள் வருகையா? தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் முன்னையது நிர்ப்பந்தத்தின் வழியாகவும் பின்னையது அரவணைப்பின் ஊடாகவும் இடம் பெறுவதற்கான சூழல்களே அதிகரித்து வருகின்றன.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக வங்கியின் ஆலோசனையால் விவசாயத்துறை பாழடிக்கப்பட்டது.

இலங்கையில் 1977ல் இருந்து திறந்த பொருளாதார முறைமையே உள்ளது. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆலோசனை திணிக்கப்பட்ட மூன்றாமுலக நாடுகள் இன்று பெரு நெருக்கடியில் மூழ்கியுள்ளன. உலக சனத்தொகையான 600 கோடியில் 300 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்றனர். முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் வறுமையைப் போக்க முடியாதென்பதற்கு இதை விட வேறு உதாரணம் தேவை இல்லை.

உலகில் 210 கோடி மக்கள் தினமொன்றிற்கு இரண்டு டொலர்கள் வருமானத்திலேயே அவர்களது வாழ்க்கையை ஓட்டுகின்றனர். மேலும் 88 கோடி மக்கள் தினமொன்றிற்கு ஒரு டொலர் வருமானத்தையே பெறுகின்றனர். இந்த வறிய மக்களில் 86 விதமானவர்கள் கிராமப்புறத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நமது நாட்டில் 72 விதமான மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கின்றனர். அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நெற்செய்கையில் ஈடுபட்டவர்களுள் 17 இலட்சம் பேர் சிறு தோட்ட உரிமையாளர்கள். பெருந்தோட்டத்துறையில் சிறு தோட்ட உரிமையாளர் 12 இலட்சம்பேர். நெற்பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் 62 விதமானவர்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவான காணியையே உடைமை கொண்டுள்ளனர். ஒரு ஏக்கருக்கும் இரண்டு ஏக்கருக்குமிடைப்பட்ட நெற்காணிகளை உடைமை கொண்டுள்ளவர்கள் 17 விதமானவர்கள். இரண்டு ஏக்கருக்குச் சற்று அதிகமாக நெற்காணிகளைக் கொண்டுள்ளவர்களும் சிறு உரிமையாளர்கள் என்ற வரையறைக்குள் அடங்குவர். எவ்வாறாயினும் விவசாயிகளில் 90 வீதமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நெற் செய்கைக்கு நிலத்தைத் தயார்படுத்துவதற்கு தேவையான யந்திரங்கள், அறுவடை, போரடித்தல் தூற்றுதல் மருந்தடித்தல், விதை, பசளை, கிருமி நாசினிகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். ஒரு புசல் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு ரூபா 300/= க்கு மேற்படாது என்ற போதும் அதன் தற்போதைய விலை ரூபா 800/=க்கு மேலாகவுள்ளது. நெல் உற்பத்தியின் போது நிலத்தைத் தயார்படுத்தப் பயன்படுத்தப்படும் யந்திரங்களுக்கான செலவு உற்பத்திச் செலவின் 18-20 வீதமாக இருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறு காணிச் சொந்தக்காரர் உழுவதற்கு ராக்டர்கள் வாடகைக்கு பெற வேண்டியுள்ளது. பல ராக்டர்கள் வயற் காணிகளில் மண்ணை அகலமான தகடுகளைப் பொருத்திய ராக்டர்களால் உழுவதே சிறந்தது. மிகச் சிறிய தொகையினரே அதைச் செய்கின்றனர். மிகப் பெரும்பாலான ராக்டர்காரர் நிலத்தை வேசாகக்கிளறும் கருவிகளையே பொருத்தியுள்ளனர். இந்த வகையிலும் ஏகப்பட்ட விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். நஷ்டமடைகின்றனர்.

முன்பு தமது உற்பத்திப் பொருள்களை வளர்ச்சியடையும் நாடுகளில் கொண்டு வந்து கொட்டுவதற்காக, விவசாயத்துறைக்கு வழங்கிவந்த மானியங்களை இரத்து செய்ய ஆலோசனை வழங்கியது உலக வங்கி. ஆனால் இன்று தத்தம் நாடுகளில் உணவு உற்பத்தியில் நெருக்கடியை எதிர் நோக்குகின்ற சூழலில் வளர்ச்சியடையும் நாடுகள் தமது உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்கின்றனர்.

எது எவ்வாறாயினும் தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டுமென்றால் கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதனை அரசாங்கமே செய்ய வேண்டும். நிலத்தைப் பண்படுத்துவதற்கு தேவையான இயந்திரங்களையும், கருவிகளையும் குறைந்த வாடகையில் வழங்குவதற்கு அரசாங்கமே ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு நீர்ப்பாசனமும் அவசியமாகிறது.

திறந்த பொருளாதாரக் கோட்பாட்டை அடிநாதமாகக் கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது என்பது கடந்த 30 ஆண்டுகளில் நிருபணமாகியுள்ளது. தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் இந்தப்பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டும். உலகமயமாதலையும் திறந்த பொருளாதாரத்தையும் நிராகரித்து எதிர்க்காது உள்ளூர் உற்பத்திப் பேசுவது வெறும் பேச்சேயாகும்.

**ஞானகரன்**

# வவுனியா செயலகக் காணிக்கிளையில் பொதுமக்கள் பெரும் திண்டாட்டம்

வவுனியா மாவட்டத்தின் காணி சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைக் கவனிக்கும் பிரதேச செயலகமும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் காணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மக்களுடன் அசட்டைத்தனமாக நடந்து வருவதாக வவுனியா வாழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா வாழ் குடிமகன் ஒருவர் வவுனியா காணிக் கிளைக்கு ஒரு விண்ணப்பம் செய்தால் அவர் உடனே செய்ய வேண்டியது காணி சம்பந்தப்பட்ட பிரச்சினை வவுனியா செயலகத்திற்கு கொடுத்தோம் என்பதை மறந்துவிட்டு நிரந்தர நித்திரை ஒன்றுக்குச் செல்ல வேண்டியது தான். ஏனெனில் அங்கு இன்று போய் நாளைவா எனும் நிலை காணப்படுவதாகவே மக்கள் விசனப்பட்டுக் கொள்கின்றனர்.

காணி சம்பந்தமாக விண்ணப்பம் செய்யும் குடிமகன் ஒருவருக்கு சரியான பதில் கூட காணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. காணி அதிகாரிகளினால் மிஞ்சிப் போனால் கூறப்படுவது எப்படியான பதில்களாக இருக்குமெனில் "உங்களுடைய வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை" "பிரதேச செயலாளரிடம் ஒப்பத்திற்காகக் கொடுத்துள்ளோம்." "கோவையை சமர்ப்பித்துள்ளோம்" என்று கூறி காலத்தை கடத்திவிடுவார்கள் இவ் அதிகாரிகள்.

வவுனியா மாவட்டக் காணி சம்பந்தமாக வரும் பொதுமக்கள் வேலை வெட்டி இல்லாமல் இருக்கிறார்கள் என்று அதிகாரிகள் நினைக்கிறார்களோ? அல்லது அவர்கள் மக்களை அடிமைகள் போல் நடத்த வேண்டும் என நினைக்கின்றனரோ? என்பது தான் மக்களாகிய எமக்கு விளங்கவேயில்லை.

அதிகாரிகள் காணி அமைச்சின் பிரகாரம் நடந்தாலே பிரச்சனை முடிந்துவிடும். ஏனெனில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களில் பத்திரங்களை எழுதிக் கொடுப்பதற்கு அல்லது ஏற்கெனவே உள்ளவாறான பிரதிகளை வழங்குவதற்கு ஏன் இவ்வளவு தாமதங்கள் என்று மட்டும் புரியவேயில்லை. பத்திரங்களுக்கு விண்ணப்பித்து இறுதி வரை பத்திரம் கிடைக்காமல் வவுனியாவில் இறந்துவிட்டவர்களும் உண்டு என்பது அதிகாரிகளுக்கும் தெரிய வேண்டும். இத்தகைய மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு முடிவு தான் என்ன? சிலவேளை ஏதும் செல்வாக்கு எதையும் எதிர்பார்க்கின்றனரா? அல்லது அதிகாரிகள் என்போரது குணாம்சமே இது தானா? அல்லது மோசடித்தனமாக நடக்க வேண்டுமென்று நடக்கின்றனரா?

காணி சம்பந்தப்பட்ட நிர்வாக, காணி அமைச்சு காணி ஆணையாளர் இவ்விடயம் சம்பந்தமாக பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. அதுமட்டுமன்றி வவுனியா பிரதேச செயலாளரின் சொந்த சொத்தாக எழுதிக் கொடுக்கப்பட்டு விட்டதா? என்பது பற்றி காணி அமைச்சு அதிகாரிகளிடம் காணி ஆணையாளரிடமும் பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் கேள்வி கேட்கின்றோம். அது மட்டுமல்லாமல் வவுனியா காணிக் கிளையைப் பகிரங்க பரிசீலனை செய்ய காணி அமைச்சு அதிகாரிகள் முன்வருவார்களா?

இவ்விடயம் சம்பந்தமாக காணி அமைச்சு அதிகாரிகள் உரிய தீர்வை பெற்றுத் தராதவிடத்து வவுனியா பிரதேச செயலகக் காணிக் கிளையின் இந்த ஒட்டு மொத்தமான அசட்டைத்தனமான நடத்தைகளுக்கு மக்கள் ஒன்று கூடி பிரதேச செயலகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் இறங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. அவ்வாறு ஒரு சூழலுக்கு பொது மக்களாகிய எம்மைத் தள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**பாதிக்கப்பட்ட பொதுமகன்**
**வவுனியா க. வேலாயுதம்**

# பிரான்ஸ் உள்ளூராட்சித் தேர்தலில் 7 தமிழர்கள் வெற்றி

கடந்த மாதம் நடுப்பகுதியில் நடைபெற்ற பிரான்சின் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் இடது சாரிகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேவேளை வலது சாரிகளுக்கு குறிப்பாக தற்போதைய ஜனாதிபதி சார்க்கோஸிக்கு சரிவு ஏற்பட்டிருப்பதை மேற்படி தேர்தல் எடுத்துக் காட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இத் தேர்தல்களில் தமிழர்கள் 14 போட்டியிட்டதாகவும் வெற்றி பெற்றவர்களில் ஈழத் தமிழர்கள் இடம் பெற்றிருப்பதாக நமது தமிழ் ஏடுகள் குதூகலம் தெரிவித்துள்ளன. பிரான்ஸ் நாட்டில் இவ்வாறு ஏழு ஈழத்தமிழர் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றமை நல்லதோர் விடயமேயாகும். அதுவும் இடதுசாரிக் கட்சிகள் சார்பாகவே இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கக் கூடியதாகும்.

ஆனால் தெரிவு செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் எந்தளவிற்கு இடதுசாரி நிலைப்பாட்டாளர்கள் என்பது தான் கேள்விக்குரியதாகும். இவர்களில் அநேகம் பேர் உள்ளத்தால் வலதுசாரிகள் வெற்றி பெறுவதற்கான தோற்றத்தால் இடதுசாரிகளாகவே இருப்பர். தமிழர் பழைமைவாதத்தின் சகல கூறுகளையும் கருத்தியல் சிந்தனை வழிகளில் முன்னெடுப்பவர்களாகவே ஈழத் தமிழர்களில் பெரும் பகுதியினர் அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களை வழிநடாத்தும் தமிழர் அரசியல் சமூக பண்பாட்டு அமைப்புகளும் தமிழர் பழைமைவாதத்தை சுமந்து நிற்பனவாகவே உள்ளன. இந்நிலையில் இத்தகைய ஈழத் தமிழர் இடது சாரிகளின் பட்டியலில் வெற்றி பெற்றுள்ளமை சந்தர்ப்ப சூழலால் மட்டுமே அன்றி இடதுசாரிக் கருத்துக்களின் அடிப்படையில் அல்ல.

பொதுவாகவே பிரான்சிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் புலம் பெயர்ந்தோருக்கு கைகொடுத்து உதவுவது அந் நாடுகளின் இடதுசாரிகள் தான். நடைமுறையில் உணர்வு பூர்வமாக உதவும் இவ் இடதுசாரிகளிடமிருந்து பல நிலைகளிலும் உதவிகள் பெறுபவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததாகும். காரணம் அத்தகைய இடதுசாரிகளிடம் தான் மனித நேயம், இனப்பாகுபாடின்மை, சமத்துவ நோக்கு, நிறவேற்றுமையின்மை போன்றவை இயல்பாகவே அமைந்திருக்கின்றன. எனவே புலம் பெயர்ந்தோர் குறிப்பாக நமது ஈழத் தமிழர் அவற்றையெல்லாம் பயன்படுத்தி சுய நன்மைகளும் ஈடேற்றங்களும் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அடிப்படையான தமது பழைமைவாத வலதுசாரிக் கொள்கைகளை கைவிடவோ மறு சிந்தனைக்கு உட்படுத்தவோ முன் வரமாட்டார்கள். அத்துடன் அங்கு இடதுசாரிகள் பற்றி பரப்பப்படும் அவதூறுகளை அப்படியே விழுங்கி வைத்திருந்து தேவைப்படும் போது கக்கிக் கொள்வார்கள். இலங்கையில் சீரழிந்து போன இடதுசாரிகளை விமர்சனம் செய்தால் அதில் தவறில்லை. ஆனால் நேர்மையான இடது சாரிகளையும் நிராகரிக்கும் போக்கே தமிழர் பழைமைவாத அரசியல் சக்திகளிடம் தொடர்ந்து இருந்து வருகிறது. அதையே பிரான்ஸ் உட்பட புலம் பெயர்ந்த நாடுகளின் தமிழர்கள் பின்பற்றுகிறார்கள். அந்நாடுகளில் இடதுசாரிச் சிந்தனைகளுடன் செயல்பட்டு வரும் ஈழத் தமிழர்களை "தமிழர் துரோகிகள்" விரோதிகள் என்று காண்பிக்கவும் அவர்கள் தவறுவதில்லை.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் ஏனைய தமது சுய ஈடேற்றம் இருப்பு என்பனவற்றுக்கும் இடதுசாரிகளை நாடிச் செல்லும் நமது ஈழத்தமிழர் தமது கருத்தால் நடைமுறைகளால் வலதுசாரிகளாகவே இருந்து வருகிறார்கள் என்பது வருத்தத்திற்குரியதாகும். எல்லாம் குறுக்கு வழிகளும் சுய நலன்களும் போலி அந்தஸ்துக்களும் பழைமை வாதப்புகளுணர்களும் இத்தகைய ஈழத்தமிழர்கள் பலரின் புலம் பெயர்வாழ்வுக்கு அடிப்படைகளாகவே இருந்து வருகின்றன. அதில் ஒன்றே பிரான்சில் ஏழு தமிழர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி என்ற போலிப் பெருமிதமாகும்.

**பாரிசன்**

## இலங்கை இந்திய வர்த்தகம்

2000ம் ஆண்டு மார்ச் மாதம் அமுலுக்கு வந்த இலங்கை- இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மார்ச் 2008ல் 8வது வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்த வர்த்தகத்தால் இந்தியாவே அதிக நன்மையடைந்துள்ளதை அவதானிக்கலாம்.

2005-2006-2007 ஆகிய வருடங்களில் இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி படிப்படியாக குறைவடைந்து வந்துள்ளது. கீழே உள்ள விபரங்களை அவதானிப்பது மேற்படி வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா பெற்று வரும் பொருளாதார வர்த்தகப் பிடியை நன்கு விளங்க முடியும்.

| ஆண்டு | இந்தியாவுக்கான ஏற்றுமதி | இலங்கைக்கான இறக்குமதி | வர்த்தக மிகுதி இந்தியாவுக்கு சார்பானது |
|---|---|---|---|
| 2000 | 5கோடி 57 இலட்சம் | 60கோடி 1இலட்சம் | -54கோடி 45இலட்சம் |
| 2001 | 7 கோடி 1இல | 60கோடி 15இல | - 53கோடி 14இலட் |
| 2002 | 16கோடி 87இல | 83கோடி 46இல | -66கோடி 59இலட் |
| 2003 | 24கோடி 11இல | 107கோடி 62இல | -83கோடி 50இலட் |
| 2004 | 38கோடி 55இல | 135கோடி 80இல | -97கோடி 25இலட் |
| 2005 | 58கோடி 91இல | 143கோடி 95இல | -88கோடி 5இலட் |
| 2006 | 48கோடி 95இல | 180கோடி 52இல | -131கோடி 57இலட் |
| 2007 | 51கோடி 49இல | 274கோடி 43 இல | -222கோடி 94இலட் |

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தோட்ட முதலாளிகளின் பொய் அறிக்கை!

உலகில் எந்த ஒரு முதலாளியும் அல்லது முதலாளித்துவ நிறுவனமும் தம்மிடம் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதிய கொடுத்தது கிடையாது. ஏனைய சலுகைகள் வசதிகளை வழங்கியதும் இல்லை. தொழிலாளர்களைப் பட்டினி வறுமை நிலையில் வைத்து கரண்டி கோடி கோடியாக லாபம் சேர்ப்பதே முதலாளித்துவ நியதியாகும். இதற்கு நமது நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரமான தேயிலை ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளித்துவ கம்பனிகள் விதிவிலக்கல்ல.

இன்றும் இலங்கையில் ஆகக் குறைந்த சம்பளம் பெறுவோராக பெருந்தோட்டத் தொழிலாளர்களே இருந்து வருகின்றனர். ஆனால் அண்மையில் பெருந்தோட்ட முதலாளிமார் வெளியிட்ட ஒரு கணக்கு அறிக்கையில் ஒரு தொழிலாளி மாதம் 18, 000 ஆயிரம் ரூபா முதல் 25,000 ஆயிரம் வரை பெறுவதாகப் பெரும் பொய் கூறியுள்ளது.

உண்மையில் கூட்டு ஒப்பந்தத்தின் படி 25 நாட்கள் வேலை செய்யும் ஒரு தொழிலாளி நாளாந்தம் 290 ரூபா பெற முடியும். ஆனால் 75 வீதமான கம்பனி நிர்வாகங்கள் 15 நாட்கள் 16 நாட்கள் மட்டுமே வேலை கொடுக்கின்றன. அதிலும் EPF/ ETF/ சந்தா உட்பட கழிக்கப்பட வேண்டியவறறைக் கழித்தால் ரூபா 5000விரத்திற்கு குறைவாகவே ஒரு தொழிலாளி சம்பளம் பெற முடியும். 60பதுகளில் 70பதுகளில் ஒரு குடும்பத் தில் உழைப்போர் 2.6 வீதமாக இருந்தது. ஆனால் இப் பொழுது இந்நிலை 1.6 வீதமாகக் குறைவடைந்து விட்டது எனப் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

மேலும் முதலாளிமார் வெளியிட்ட அறிக்கையில் கூடிய சம்பளத்தை கொடுப்பது பற்றிக் கூறியுள்ளதுடன் ஏனைய சேவைகளையும் நிர்வாகம் வழங்கி வருகின்றன என்று கூறியுள்ளது. ஆனால் உண்மையிதெனில் தற்போது தோட்டப்பாடசாலைகள் அரசாங்கம் பொறுபேற்ற பின் தோட்ட நிர்வாகம் தோட்



டப்புறக் கல்விக்கு நிதி எதுவும் ஒதுக்குவதில்லை. அவ்வாறே தோட்ட மருந்தகங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. புதிய லயன்கள் அல்லது தனிவீடுகள் சிலவற்றைக் கட்டுவதிலும் அரசாங்கமே அங்கொன்று இவ் கொன்றாகச் செய்து வருகிறதே தவிர கம்பனிகள் எதுவும் செய்வதில்லை.

அதேபோன்று மின்சாரம் தண்ணீர் விநியோகங்களிலும் கம்பனிகள் விடுபட்டு வந்துள்ளன. அவற்றை தோட்ட உட்கட்டமைப்பு என்பதன் ஊடாக அரசாங்கம் அரை குறையாகவும் தொழிற்சங்க அரசியல் லாபம் கருதியுமே செய்து வருகின்றது. ஆதலால் தோட்டக் கம்பனிகள் எந்தளவிற்கு தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்து கொள்ளை லாபம் பெறமுடியுமோ அந்தளவிற்கு லாபம் பெறுகிறார்கள். இதன் மூலம் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் வறுமை அதிகரித்து வருகின்றது. அவர்களது பொருளாதார சமூக கல்வி சுகாதாரத்துறைகள் எவ் வகையிலும் மேம்பட்டு உயர்ந்த நிலையில் இருப்பதாகக் கூறமுடியாது. முதலாளிமார் சம்மேளன அறிக்கை அப்பட்டமான பொய்யும் ஏமாற்றுமேயாகும். இது உலகின் சகல முதலாளி வர்க்கத்தினருக்கும் உரிய பொது நிலைப்பாடாகும்.

2007ம் ஆண்டு இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 100 கோடி டொலர்களைத் தாண்டியது. இது கடந்த 141 வருட காலத்தில் ஏற்பட்ட சாதனை இலக்காகக் காணப்படுகிறது. 2007ன் தேயிலை உற்பத்தி 31 கோடி 80 லட்சம் கிலோவாகும். இது 2006ம் ஆண்டைவிட 2 வீத அதிகரிப்பாகும்.

இவ்வாறு வருடா வருடம் கோடி கோடியாகச் சம்பாதிக்கும் பெருந்தோட்டக் கம்பனிகள் தமது முதலாளித்துவச் சுரண்டல் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை மிகத் தாழ்ந்த நிலையிலேயே வைத்து வருகின்றன. இதற்கு ஜனாதிபதி அரசாங்கம் அதில் அங்கம் பெறும் மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தமது ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்கியும் வருகின்றன.

# நம்பி நம்பி ஏமாறக் கூடாது! தோட்டத் தொழிலாளர்கள்

பசியால் அழும் குழந்தைக்கு பாலும் ஆகாரமும் வழங்க வேண்டும். அவ்வாறு கொடுக்க முடியாத நிலையில் அழுகையை நிறுத்த பலூன் ஊதி விளையாட்டுக் காட்டி குழந்தையை ஏமாற்றுவது மோசமான செயலாகும். அவ்வாறே மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளத்தைப் பெறுமாறு நிர்ப்பந்தித்த அரசாங்கமும் தொழிற்சங்கத் தலைமைகளும் மானிய விலையில் அரிசி, மா விநியோகிக்கப் போவதாக பலூன் விளையாட்டுக் காட்டி நிற்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவால் கடும் பாதிப்படைந்து வருவதால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரிசி மா சீனி போன்றவற்றை குறைந்த விலையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரசாரம் செய்தனர். அதனை நம்பிக் கொள்ளும் வகையில் தொழிலாளர்கள் எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு நாடகமும் நடாத்திக் காட்டப்பட்டது.

அதாவது கண்டியில அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து நூறுபேர் வரையான தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி மா சீனி பருப்பு உள்ளிட்ட உலர உணவுப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தொழிலாளர்கள் அவற்றை ஜனாதிபதியின் கைகளால் பெற்றுக் கொண்டதை அரச தொலைகாட்சி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து விளம் பரப்படுத்திக் கொண்டன. இது ஒரு வகை ஏமாற்றும் பிரசாரமும் என்பதை தோட்டத் தொழிலாளர்கள் விளங்கிக் கொள்ளாமலில்லை. இந்த அரிசிப் பொதி வழங்கலைத் தொடர்ந்து மானிய விலையில் அரிசி மா விநியோகிக்கப்படும் என டமார் அடித்துக் கூறப்பட்டது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அது பற்றிய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை.

இந்த ஏமாற்றை அரசாங்கத்தில் அமைச்சர் பதவியில் இருக்கும் மலையகத் தலைவர்களோ அல்லது ஜனாதிபதியின் ஆலோசகர்களாக இருந்து வரும் தொழிற்சங்கத் தலைவர்களோ அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களுக்கு கொழுத்த சம்பளங்கள் வசதிகள் சலுகைகள் வாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைத்து வருவதில் எவ்வித குறையும் இல்லை என்பதாகும்.

அரசாங்கமும் அதில் இணைந்திருக்கும் மலையகத் தலைமைகளும் தோட்டத் தொழிலாளர்களைத் தொடர்ந்து ஏமாற்றுவதற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு தொழிலாளர்களும் மலையக மக்களும் அரசியல் விழிப்புணர்வு மூலம் தம்மைத் தயாராக்க வேண்டும். இல்லாது விடின் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் புதிய ஏமாற்றுகளை நம்பி நம்பி வாழ்க்கை நாசங்களைத் தேடிக் கொள்ள வேண்டியது தான்.

1ம் பக்க தொடர்ச்சி

## மலையகத்தில்

எவ்வித உரிமையும் கிடையாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அல்லது நிலம் வழங்கப்படும் போது இன்னொரு பகுதி மக்களை அகதிகளாக்க முடியாது. மேலும் இம் மண்ணுக்கும் எங்களுக்கும் வெறும் சம்மந்தம் இல்லை. மாறாக இம் மண்ணுக்கும் எங்களுக்கும் ஒரு ஆத்மார்த்த தொடர்பும் உறவும் உள்ளது. இதனை அறுத்து விடவோ அல்லது இழந்து விடவோ முடியாது.

இம்மண்ணே எங்களது வாழ்விடமாகவும், வாழ்க்கையாகவும் இருக்கிறது. இதனை மறுத்து யாரும் தோட்டத் தொழிலாளர்களை பலாத்காரமாக வெளியேற்ற நாம் அனுமதிக்கப்போவதில்லை. ஆகவே ஜே.வி. பியின் இக்கருத்துக்கு நாம் எமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம். ஜே.வி.பி தோட்டங்களில் இருந்து தொழிலாளர்களை விரட்டியடிக்க எடுக்கின்ற நடவடிக்கைகளை நாம் மீண்டும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தோழர் பன்னீரின் இக் கருத்தை மறுத்து ஜே.வி.பி உறுப்பினர் பேச முற்பட்ட போது புதிய- ஜனநாயக கட்சியின் சபை உறுப்பினர் அதனை அனுமதிக்காது இங்கு ஜே.வி.பி உறுப்பினரின் பேச்சு பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவர் மீண்டும் தான் அவ்வாறு பேசவில்லை என்று மறுக்க முடியாது என்றும் கூறினார்.

இவ்விவாதத்திற்கு மத்தியில் உரை நிகழ்த்த எழுந்த ஜே.வி. பியின் இன்னொரு உறுப்பினரான ஜெயசீலன் தமது கட்சிக்காரர் அந்நோக்கத்தில் கூறவில்லை என்று கூறமுற்பட்ட போது அவரும் பொய் பேசுகின்றார் என்றும் இங்கே பதிவு இருப்பதனால் யாரும் பொய் மேலும் கூற வேண்டாம் என்றும் பு.ஜ கட்சி உறுப்பினர் உரத்துக் கூறினார். இதன் பின் ஜே.வி.பி உறுப்பினர்கள் இருவரும் அமைதியானார்கள்.

புதிய- ஜனநாயக கட்சி உறுப்பினரின் உரையை ஆதரித்து சபை உறுப்பினர் பெ. சண்முகம் உரை நிகழ்த்தினார். இ.தொ.கா உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர்.

ஜே.வி.யின உண்மையான சுயரூபத்தை அறியாத சில தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர். இதுபோன்ற நிகழ்வுகளுக்கு ஊடாக மலையக மக்கள் அனைவரும் இனவாத ஜே.வி. பினரை நிராகரிக்க முன் வரல் வேண்டும் என்பதே மேறபடி விடயம் வெளிப்படுத்தும் உண்மையாகும்.

1ம் பக்க தொடர்ச்சி

## கிழக்கு மாகணசபை

ணசபைத் தேர்தல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், அரசியல் தீர்வுக்குரிய நியாயமான யோசனைகள் எதுவும் உருப்படியாக முன்வைக்கப்படாது யுத்தத்தை மும்மரமாக்கி நிற்கும் சூழலில் கிழக்கு மாகாண சபைத் தேர் தலை அரசாங்கம் நடாத்துவது மக்கள் மீதான அரசியல் ஏமாற்றும் திசை திருப்பலுமாகும். வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வும் ஜனநாயகமும் மனித உரிமைகளும் இலலை. அதே வேளை யுத்தத்தாலும் சுனாமி அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்குரிய புனரமைப்பும் புனர்வாழ்வும் மீள் குடிய மர்வும் உரியவாறு முன் னெடுக்கப்படவில்லை. ஆட்கு இடக்கங்களின் அச்சுறுத்தல்கள் அடாவடித்தனங்கள் மத்தியி லேயே கிழக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கப் படைகளின் அடக்கு முறைகள் அங்கு தொடர்கின்றன. அத்துடன் தமிழ் முஸ்லீம் மக்களிடையேயான உறவுகள் சீர் குலைக்கப்பட்டு மோதல்கள் வலுப்படக் கூடிய சூழ லை இத் தேர்தல் தோற்றுவித்து விடுமோ என அஞ்சப்படுகிறது.

வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையிலும் தமிழ் முஸ்லீம் உறவுக்குரிய அடிப்படைகள் தோற்றுவிக்கப்படாத சூழலிலும் இத் தேர்தல் நடாத்தப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படாது வடக்கு நோக்கிய யுத்தம் முனைப்பாக்கப்பட்டு வருகிறது. இந் நிலையில கிழக்கில் நடாத்தப்படும் மாகாணசபைத் தேர்தல் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கான ஒரு நடவடிக்கையே தவிர வேறு ஏதுவும் இல்லை. இதில் பங்கு கொள்வதால் கிழக்கு மக்களுக்கோ அன்றி தமிழ் முஸ்லீம் மக்களுக்கோ பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. அதேவேளை சிங்கள மக்கள் எதிர நோக்கியுள்ள பொருளதார நெருக்கடி வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பனவற்றிலிருந்து திசைதிருப் பப்படவும் அதன் மூலம் யுத்தத்திற்கு ஒரு அங்கீகாரம் பெறவும் இத் தேர்தல அரசாங்கத்திற்குப் பயன்படப் போகின்றது என்ப தையே எமது கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

# மலையக படித்த இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரியத் தொழில் மட்டும் தானா?

மலையகத்தமிழ் தேசிய இனம் சகல நிலைகளிலும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள கடும் முயற்சிகளைச் செய்ய வேண்டியே உள்ளது. அதில் ஒன்றே படித்த இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பாகும். அரசாங்கத் தொழில் என்றால் மலையகத்தில ஆசிரியத் தொழிலே பிரதானமாக உள்ளது. அரசாங்க நிறுவனங்களில தொழில் பார்க்க ஆகக் குறைந்தது க.பொ.த. (சாதராணம்) அல்லது க.பொ.த (உயர்தரம்) தேவையானதாகும். அத்தகைய தராதரம் உள்ள மலையகப் படித்தவர்கள் இருந்து வருகிறார்கள். ஆனால் அரசாங்க நிறுவனங்களில் அவர்களுக்கு சிற்றூழியர்களாகக் கூட நியமனங்கள் வழங்க அரசாங்கம் தயராக இல்லை. அதற்குப் பேரினவாத நிலைப் பாடே அடிப்படைக் காரணமாகும். இந்த நிலை மேன் மேலும் தொடர்கிறது. ஆசிரியத் தொழிலுக்கும் அப்பால் மலையக இளைஞர் யுவதிகளுக்கு அரசாங்க நிறுவனங்களில் நியமனங்கள் வழங்கப்படுவது அவசியம். இவ் அவசியத்தை மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் கவனத்தில் கொள்வதாக இலலை. அவர்களிடமிருந்து மலையக இளைஞர் யுவதிகள் எதிர்பார்ப்பதற்கு எதுமே இலலை. எனவே இதற்கான கோரிக்கைகளும் ஒன்றிணைந்த அழுத்தங்களும் போராட்டங்களும் அவசியம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 ஏப்பிரல் 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 112
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# மனித உரிமை மீறல்கள் காட்டாட்சியின் லட்சணம்

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை மூதூரில் அரச சார்பற்ற நிறுவன செயற்பாட்டாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப் பட்டமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசார ணைகளை கண்காணித்துக் கொண்டிருந்த பிரபலமான நபர்களை கொண்ட சர்வதேச சுயாதீன ஆணைக்குழு அதன் கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை களை நடத்திய முறை தொடர்பாக அதிருப்தி தெரிவித்த மேற்படி கண்காணிப்பு நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையில் இடம்பெற்று வருகின்ற கடத்தல்கள், காணாமற்போதல்கள் படுகொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் "நீதியின் முன்" நிறுத்தப்பட வில்லை. அவற்றில் சிலவற்றுக்கு ஆணைக்குழு விசாரணை கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காணாமல் போதல்கள் பற்றிய விசாரணைகள் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மகா நாம திலக்கரட்ண தலைமையில் நடைபெற்றன. அவரின் விசாரணை அறிக்கையின் படி காணாமல் போனவர் களில் பெரும்பாலானவர்கள் திரும்பி வந்துவிட்டனர் என் றும் இலங்கையின் அரச பாதுகாப்பு படைக்கும் காணாமல் போதல்களுக்கும் கடத்தல்களுக்கும் தொடர்பில்லை என் றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் காணாமல் போதல்களும், கடத்தல்களும் படுகொலைகளும் நின்றபாடில்லை.

பிரஜைகளுக்கு வகை சொல்ல வேண்டிய அரசாங்கம் என்ற வகையில் காணாமல் போதல்கள், கடத்தல்கள், படுகொலைகளுக்கு பொறுப்பானவர்களை அரசே கண்டறிய வேண்டும். பாதுகாப்பு படையினருக்கு தொடர்பில்லை என்று கூறுவது டன் அரசாங்கத்தின் பொறுப்பு நின்றுவிடாது. அதற்கு மேலா கச் சென்று அவற்றுக்கு காரணமானவர்களைக் கண்டறிய வேண்டும். அவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும். அவை நடை பெறாது தடுக்க வேண்டும். இதுவே சட்ட ஆட்சி எனப்படுவதன் அடிப்படையாகும். கடத்தல்கள், காணாமல்போதல்கள், படுகொலைகள் என்பனவற்றுக்குப் பொறுப்பானவர்களை கண்டறிய நடைபெறும் விசாரணைகள், விசாரணைகளுக்குரிய தராதரங்களுடன் நடத்தப்பட வேண்டும். கண்துடைப்பிற்காக விசாரணைகள் நடத்தப் படக்கூடாது.

திருகோணமலையில் மாணவர்களும் மூதூரில் அரச சார்பற்ற நிறுவன செயற்பாட்டாளர்களும் படுகொலை செய்யப் பட்டமை பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்டு வரும் விசாரணைகள் நடுநிலையாகவும், தராதரமுடையதாகவும் இல்லை என்பதே சர்வதேச கண்காணிப்பாளர்களின் கருத்தாகும். அக்குழுவினரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே இங்கு வரவழைத்திருந்தார். அவர்களின் எதிர் பார்ப்பிற்கு ஏற்ப விசாரணைகள் நடைபெறவில்லை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டும்போது அவற்றின் நியாயமான தன் மையை கருத்தில் கொள்ளாமல் அவர்கள் வெளியேறும் விதத் தில் நடந்துகொள்வது "ஜனநாயக அரசின்" நாகரீகமாகாது, அவர்களின் எதிர்பார்ப்பை தலையீடு எனக் கூறப்படுமானால் "அத்தலையீடுகளை" அனுமதிக்காத வகையில் நாட்டின் ஜனநாயக செயற்பாடுகளை ஏற்கனவே முன்னெடுத்திருக்க வேண்டும். அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் இடம் பெறாது தடுத்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாது விட்டதன் விளைவையே இன்று நாடு அனுபவிக்கிறது. விசாரணைகளை கண்காணித்த சர்வதேச குழுவின் வெளியேற்றம். 'இலங்கையை' மனித உரிமை மீறல் களுக்காக சர்வதேசக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்கான அடிப்படையாக அமைந்துள்ளது.

ஆயிரக்கணக்கில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றபோது மனித உரிமை மீறல்கள் இங்கு நடைபெறவில்லை என்ற உரத்துக் கூறுவதும் ஐ.நா. சபை யின் மனித உரிமை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாததால் இங்கு மனித உரிமை மீறல்கள் இடம் பெறவில்லை என்று கூறுவதும் அர சாங்கத்தின் அம்மணத்தையே எடுத்துக் காட்டுகிறது.

அதேபோன்று ஐ.நா சபையின் மனிதஉரிமை மீறல்களை அவ தானிக்கும் பிரிவின் காரியாலயம் இலங்கையில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தால் விடுக்கப்பட்டு வருகிறது. அந்தக் கோரிக்கை எழக் காரணம் இங்கு பெரும் எண்ணிக்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வரு வதாகும்.

இலங்கை பெரும்பாலான சர்வதேச (மனித உரிமை) உடன் படிக்கைகளில் கைச்சாத்திப்பட்டுள்ளது. அதன் படி ஒழுகி நடக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளது. ஐ.நா வின் சமூக உரிமை சமவாயம் இங்கு செல்லுபடியாகுமா இல்லையா என்பதில் இழுபறியான கருத் தையே இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. இது பற்றி தீர்ப் பளிக்கும்படி ஜனாதிபதி உயர் நீதிமன் றத்தை கேட்டிருந்தார். இலங்கையில் அச்சமவாயம் பின்பற்றப்பட்டுவருவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதே உயர்நீதி மன்றம் இன்னொரு வழக்கில் சில மாதங்களுக்கு முன்பு அச்சமவாயத்தின் படி நடப்பது இலங்கையின் இறை மையை பாதிப்பதாக அமை யும் என்று கூறி இருந்தமை குறிப்பிடத் தக்கது.

"சர்வதேச சமூகம்" அதன் அக்கறைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித உரிமை மீறல்களை அடிப்படை யாகக் கொண்டு நாடுகளில் தலையீடுகின்றன. அவை அவ் வாறு தலையிடாதிருக்க வேண் டுமானால் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்வதே அவசியமனதாகும். மாறாக மனிதஉரிமை மீறல்களைச் செய்து கொண்டு சர்வதேச சமூகம் இங்கு தலையிடமுடியாது என்று கூறுவது அடிப்படையற்ற வாதமாவதுடன் காட்டாட் சியின் லட்சணமுமாகும். நாம் எவ்வாறும் நடந்து கொள்வோம் அதனை யாரும் கேள்விகளுக்கு உட்படுத்தக் கூடாது என்ற பேரினவாத அகங்காரத்தில் சென் றால் நாடு அபாயக் கட்டங்களையே சந்திக்க நேரிடும்.

**ஆசிரியர் குழு**

# யுத்தத்தின் சாராம்சம் பொருளாதார நலன்களே!

**–வெகுஜனன்**

**உலகில் பல வகைப்பட்ட யுத்தங்கள்** நடைபெற்று வந்துள்ளன. இன்றும் அவை நடந்து கொண்டிருக்கின்றன. அனைத்து யுத்தங்களையும் உற்று நோக்கின் அவற்றின் அடிப்படை பொருளாதார நலன்களும் அவற்றுக்கான அரசியல் அதிகாரமாகவே இருப்பதைக் காணலாம். இத்தகைய யுத்தங்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் வேறுபட்டிருக்குமே தவிர சாரம்சம் பொருளாதார லாபங்களாகவே இருக்கும். நாடுகள் மீதான, எல்லைகளுக்கான, ஜனநாயகத்திற்கான, இனமீட்சிக்கான, பயங்கரவாதத்திற்கு எதிரான, மனித உரிமைகளை மீட்க்கும் மனிதபிமானத்திற்கான சமாதானத்திற்கான என்றவாறு இருந்து வருவதைக் காணலாம்.

இத்தகைய் யுத்தங்களில் சொல்லப்படும் காரணங்கள் வேறானவைகளாகவும் நோக்கங்கள் பொருளாதார நலன் கொண்டதாகவுமே இருந்து வருவது தெளிவானதாகும். இலங்கையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் பேரினவாதத்தின் பெயரிலானதாகும். 'இது எங்களுடைய நாடு' 'நாங்கள் பெரும்பான்மையினர்' "இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால வரலாறு கொண்டவர்கள்" என்று கூறப்படுவதன் மூலம் அனைத்துச் சிங்கள மக்களும் உணர்ச்சி மேலீட்டிற்கும் பெருமிதத்திற்கும் ஆளாக்கப்பட்டனர். தாங்கள் நிலமற்றவர்களாக பொருள் அற்றவர்களாக வேலை வாய்ப்புகளும் வீடு கல்வி சுகாதாரம் வசதிகள் இல்லாதவர்களாக இருப்பதை மறந்து தம்மினத்து ஆளும் வர்க்கங்களின் தலைவர்கள் கூறியவற்றை நம்பிக் கொண்டனர். தம்மிடையேயான ஏற்றத்தாழ்வுகள் பாகுபாடுகள் இல்லாமைகள் எவ்வாறு நிரந்தரமாகி இருந்து வருகின்றன என்பதைச் சிங்கள மக்கள் கேள்விகளின் ஊடே உற்று நோக்க விடாதவாறு திசை திருப்பப்பட்டனர்.

இலங்கையின் இடதுசாரியினர் என்போர் 1930களில் இருந்து 1960பதுகள் வரையான காலப்பகுதியில் சிங்களத் தொழிலாளர்கள் விவசாயிகள் மத்தியில் மாற்று அரசியல் விழிப்புணர்வை வளர்த்து வந்தனர் இன்றைய சமூக அமைப்பின் மீது பல்வேறு கேள்விக் கணைகளைத் தொடுத்து வர்க்க அமைப்பும் அதன் காரணமான ஏற்றத்தாழ்வுகள் பிற இன்னல்கள் பற்றி உரத்து வாசித்து வந்தனர். ஆனால் பாராளுமன்றப் பதவிச் சுகங்கள் படிப்படியாக அவர்களைப் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுடன் இணங்கிப் போக வைத்தன. அதனால் அவர்கள் சுயம் இழந்ததுடன் செல்வாக்கும் அற்றவர்களாகினர்.

அதேவேளை இலங்கையின் நிலவுடைமை வழிவந்த உயர் வர்க்க மேட்டுக்குடி சிங்கள சொத்துடைய வர்க்கத்தினர் தமது பொருளாதார நலன்களைக் கட்டிக் காத்து மேலும் விரிவாக்கி வந்த னர். காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தமது சொத்துடைமையின் இருப்பை மேலும் வளமாக்கிக் கொள்ள வளர்ந்து வந்த பொருளாதார முறைமைகளுடன் இணங்கிச் சென்று வர்க்க வளர்ச்சி பெற்றனர். கொலனியவாதிகளின் தயவில் தமது பொருளாதார இருப்பைப் பேணிவந்த இலங்கையின் நிலவுடைமை வர்க்க சக்திகள் அவர்கள் நாட்டை விட்டு அகன்ற பின் சுதந்திரத்தின் பெயரால் தாமே ஆட்சிக் கடிவாளத்தைக் கைப்பிடித்தனர்.

முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் நிலவுடைமை

## செத்து மடிவது உழைக்கும் மக்கள் சொத்து சேர்ப்பது முதலாளி வர்க்கம்!

வழிவந்த சிங்கள உயர்வர்க்க மேட்டுக்குடி சக்திகள் தமக்கான அரசியல் கட்சிகள் மூலம் தத்தமது பொருளாதாரங்களை மேலும் வளர்த்துக் கொண்டனர். முதலாளித்துவ வளர்ச்சியானது ஏகாதிபத்தியத்தின் அரவணைப்புடன் ஏற்றம் பெற்றது. இவ்வாறான முதலாளித்துவ வளர்ச்சியில் புதிய புதிய சக்திகள் தோன்றி வளர்ந்தன. அவர்களது பொருளாதார நலன்களைப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் அரசியலதிகாரம் அவசியமானதொன்றாக விளங்கியது "அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் ஏதாவதொரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவே இருக்க முடியும்" என்ற மாக்சிசக் கோட்பாட்டிற்கு இணங்க இலங்கையில் பல்வேறு பெயர்களில் அரசியல் கட்சிகள் தோன்றின. அவை எந்தளவிற்கு பெயர்களில் இன மொழி மதப் போர்வைகளைப் போர்த்தியிருந்த போதிலும் சாராம்சத்தில் சொத்து சுகம் பெற்ற உயர் வர்க்க மேட்டுக்குடி நலன்களைப் பாதுகாப்பவையாகவே இருந்தன. இலங்கையின் ஆட்சியதிகாரத்தில் மாறிமாறி இருந்து இன்று வரை நீடிக்கின்ற இரண்டு கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமாகும். இவ்விரு கட்சியினரும் தான் இலங்கையின் ஆட்சி அதிகார அரசியலைத் தீர்மானிப்பவர்களாகவும் ஆளும் கதிரைகளில் மாறிமாறி இருந்து வருபவர்களாகவும் உள்ளனர்.

இவ் இரு கட்சியினரும் ஏதோ அதிகாரத்திற்கு வருவதற்கு மட்டும் பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. அதன் ஊடாக சிங்கள நிலவுடைமை முதலாளித்துவ வர்க்க சக்திகளின் சொத்து சுகங்களைப் பேணி விருத்தியாக்கிக் கொள்கின்றனர். அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தி நிற்கின்றனர். இரு தரப்பினரும் ஒருவரின் பொருளாதார நலனுக்கு மற்றையவர் ஒத்துழைப்பு வழங்குபவராக உள்ளனர். அதே வேளை சாதாரண உழைக்கும் சிங்கள மக்கள் இன மத மொழி என்பனவற்றின் பேரில் தமிழ் மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் எதிராகவும் திசைதிருப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதன் ஊடாக வளர்க்கப்பட்டதே இன முரண்பாடும் இன ஒடுக்குமுறையும். இவற்றுக்குப் பின்னால் மறைந்து நிற்பது சொத்து சுகம் கொண்டவர்களின் பொருளாதார நலன்கள் லாபங்கள் சொத்துக்குவிப்பு களாகும்.

கடந்த மூன்று தசாப்த காலத்தின் தமிழ் மக்கள் மீதான யுத்தம் என்பதன் ஊடாகத் தம்மைப் பாதுகாத்த சக்திகள் உள் நாட்டு முத லாளிகளும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுமாவர். யுத்தம் ஒரு லட் சத்திற்கு மேற்பட்ட தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் உயிர்களை குடித்துள்ளது. அதே யுத்தம் பல்வேறு நிலைகளிலும் முதலாளிகள் பெருவர்த்தகர்கள் வியாபாரிகளைக் கொழுக்க வைத்துள்ளது. அந்நிய ஆயுத வியாபாரிகளுக்குப் பெரும் லாபம் கிடைத்துள்ள அதேவேளை உள் நாட்டின் அதன் தரகர்கள் பெரும் பணம் சம் பாதித்துள்ளனர். இவை அனைத்தையும் ஆழ்ந்தகன்ற பார் வைக்கு உட்படுத்தும் போது எத்தனை முதலாளிகளையும் வர்த்தகப் புள்ளிகளையும் அரசியல் ராணுவ பண முதலைகளையும் யுத்தம் செல்வச் செழிப்பிற்கு ஆளாக்கியு ள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

இலங்கையின் பேரினவாதத்தின் வளர்ச்சியிலும் அது தொடுத்துள்ள ஒடுக்கு முறை யுத்தத்திலும் மிகவும் கெட்டியாகப் படித்திருக்கும் சாராம்சம் சொத்துடைமை சார்ந்த பொருளாதார நலன்களேயாகும். அதில் லாப ருசி கண்ட சிங்கள பௌத்த ஆளும் வர்க்கம் இலகுவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமாட்டாது. இந்த யுத்தத்தில் லாபமீட்டிக் கொள்ளும் தமிழ் முஸ்லீம் முதலாளிகளும் பெருவர்த்தகர்களும் உள்ளுர யுத்தம் முடிவக்கு வருவதை விரும்ப மாட்டார்கள். அத்தகையோர் பேரினவாதத்தின் பக்கத் துணையாளர்களாகவே இருப்பர்.

ஆதலால் தமிழ் மக்களுக்கு பல வழிகளிலும் அழிவுகளைத் தந்து கொண்டிருப்பதும் அடிப்படையில் சிங்கள முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளைக் கொண்டு வந்துள்ள யுத்தத்தை நிறுத்த வேண்டும். இது சிங்கள மக்களினால் உணரப்படுவது அவசியம். அப்போதே யுத்தத்தின் பின்னால் மறைந்திருக்கும் சிங்களச் சொத்துடைய ஆளும் வர்க்கத்தின் சுரண்டும் பொருளாதார நலன்கள் பற்றிய உண்மைகள் அம்பலத்திற்கு வர முடியும். இதனைச் செய்வதற்கு முதலாளித்துவப் பாராளுமன்றக் கட்சிகளால் இயலாது. உழைக்கும் மக்கள் அனைவரினதும் நலன்களுக்கான நேர்மையான தொழிலாளர் விவசாயிகளது கட்சிகளினாலேயே சாத்தியமாக்க முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அந்த தேர்தல் காலங்களில் தேர்தல் காரணங்களுக்காக ஒருவர் கூடக் கொல்லப்படவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எடுத்துக்கூறி அத்தேர்தலின் ஜனநாயகத் தன்மையை நியாயப்படுத்தியுள்ளார். கிழக்கு மாகாண உள்ளுராட்சித் தேர்தலில் அபேட்சகர்கள் அரசியல்வாதிகள் மட்டுமன்றி தேர்தல் கண்காணிப்பாளர்களும் கொலை செய்யப்படலாம் என்று பலரும் கூறியபோதும் தேர்தல் காலப்பகுதியில் நேரடியான தேர்தல் காரணங்களுக்காக கொலைகள் நடைபெறவில்லை. கொலைகள் நடைபெறாவிட்டதனால் ஜனநாயகமான தேர்தல் நடைபெற்றதாகக் கொள்ளப்படலாம் என்ற நிலைமைக்கு ஜனநாயகத்தின் நிலை தாழ்ந்து விட்டது. அத்தேர்தல்களில் பலரும் போட்டியிடுமளவிற்கும் பிரசாரம் செய்யுமளவிற்கும் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் அளவிற்கு சுதந்திரம் இருந்ததா என்பது கிழக்கு மாகாண மக்களுக்கே வெளிச்சம்.

பற்றப்பட்ட கொள்கைகளும் தவறுகளும் இன்றைய நிலைமைக்கு காரணமாகின்றனவா?

2. மேற்படி தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை நிராகரித்து பேரினவாத அரசாங்கத்துடன் கிழக்கு மாகாண அரசியல்தளத்தின் மேல்தட்டில் இருப்பவர்கள் இணைந்து செயற்படுவதனால் தமிழ்த்தேசியத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் தவறுகளை திருத்தவும் கிழக்கு மாகாணத் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை நிலைநிறுத்தவும் முடியுமா?

1. எந்தவொரு போராட்ட அமைப்பில் மட்டுமன்றி சாதாரண ஒரு வெகுஜன அமைப்பிலும் கூட முன்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் விலகிச் செல்லும் போது அல்லது விலக்கப்பட்டதனால் வெளியேறும் போது அந்த அமைப்பிற்கு ஏற்படும் பாதிப்புகள் மிகவும் சிறியதாக இராது. அவ்வாறு விலகியவர்கள் அல்லது விலக்கப்பட்டவர்கள் தனிமனித காரணங்களுக்காக விலகியோ விலக்கப்பட்டோ இருக்கும் போது அதுவரை அந்த அமைப்பில் கடைக்கப்பிடிக்கப்பட்ட கருத்தியலி

நிலைகள் மீள மீள ஏற்படலாம். ஆனால் கிழக்கு மாகாணத்திற்கு மீண்டும் மீண்டும் அழிவுகள் தொடரக்கூடாது. இது தேசியவாதத்திற்குரிய பிரச்சினையல்ல. தமிழ்த் தேசிய இனம் என்ற வரைய றைக்குள்ளடங்கும் அனைவருக்கும் உரிய பிரச்சினை ஆகும். அதுமட்டுமன்றி கிழக்கில் வாழும் முஸ்லீம் தேசிய இனத்தினது பிரச்சினையுமாகும்.

தேசியவாதத்தின் குறுகிய வரையறைகளை கடக்காவிட்டால் தமிழ்த்தேசிய அபிலாசைகளின் ஆழ, அகலத்தை, பரப்பை விரிவு படுத்தாவிட்டால் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை மேலும் பாரிய அழிவுகளுக்கும் பின்னடைவுகளுக்குமே வழிவகுக்கும்

2. தமிழ்த் தேசியவாதத்தின் தவறுகளாலேயே கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலைமைகள் உருவாகக் காரணம் என்றால் பேரினவாதத்தின் தயவுடன் அதனை சீர் செய்ய முடியுமா?

தமிழரசுக் கட்சியிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசியவாதம் பல கட்டங்களை கடந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் (பிரஜாஉரிமை சட்டமாக்கப்பட்ட காலத்திலிருந்து) தமிழ்த்தேசியவாதத்தின் தனிநபர்கள் அல்லது பிரிவினர் காலத்திற்கு காலம் பேரினவாதத்துடன் எதற்காக எவ்வாறு சமரசம் செய்தனர் என்பதும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் வரலாற்றுப் படிப்பினைகளாகக் கொள்ளப்பட வேண்டும்.

# கிழக்கு மாகாணமும் தேசியவாதத்தின் கையறு நிலையும்

**தயா**

தேர்தல் முடிந்த கையுடன் உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அவரின் அலரி மாளிகையில் சந்தித்தனர். அவர்களில் ஏறக்குறைய அனேகர் முன்னர் த.ஈ.வி.பு இயக்கத்தின் போராளிகளாக இருந்தவர்கள் என்பதும் அவர்கள் தனித் தமிழீழத்திற்காக ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்களுமாவர். தமிழ்த் தேசியம் எங்கு தொடங்கி எங்கு வந்து நிற்கின்றது என்பதையே அலரிமாளிகைச் சந்திப்பு எடுத்துக் காட்டி நிற்கிறது.

கிழக்கு மாகாணம் இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளினால் இராணுவ கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு சில மாதங்களிலேயே மேற்படி உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றது. அதில் போட்டியிட்டு வென்ற த.ஈ.வி.பு இயக்கத்தினர் மாவட்ட சபைகளுக்கு அப்பால் அதிகாரங்களைப் பகிர்வதற்கே உடன்பாடில்லாத ஜனாதிபதியைச் சந்தித்து அவருடன் நெருக்கமாகியுள்ளனர்.

அதுமட்டுமன்றி எதிர்வரும் கிழக்கு மாகாணசபையில் அரசாங்கத்தின் ஐ.ம.சு. முன்னணியின் பட்டியலில் வெற்றி லைச் சின்னத்தில் போட்டியிடவும் தற்போது த.ம.வி.பு அமைப்பு உடன்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மக்களே அதிகமான இனஒடுக்கலுக்கு உள்ளாகி வருகின்றனர். இதற்கு மாற்றாக தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் இருப்பதாகவே இதுவரையும் நடந்தேறிய (ஆயுதப் போராட்டம் உட்பட) பலவிடயங்களிலும் காட்டப்பட்டது. வடக்கு கிழக்கு இணைந்ததாக முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தில் தற்போது கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விடயத்தில் இரண்டு விளக்கங்களைப் பெறுவது அவசியமானதாகும்.

1. கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளையும் உள்ளடக்கியதாகிய முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தேசிய கருத்தியலிலும் நடைமுறைகளிலும் பின்

லும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளிலும் கோளாறுகள் இருப்பதை உதாசீனம் செய்ய முடியாது. அந்தக் கோளாறுகளால் இன்றைய கிழக்கு மாகாண சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென்றால் அதனை சீர் செய்ய தமிழ்த் தேசியம் தன்னை மீள்தகவமைத்துக் கொள்ள முடியுமா? தகவமைத்துக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளதா? அல்லது கடந்த காலத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை விரித்துச் செல்ல வேண்டுமா? அல்லது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டம் மாற்று வழிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகி உள்ளதா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளை குறுகிய தேசியவாத, பிரதேசவாத மேலாதிக்க தனிநபர்வாத நிலைப்பாடுகளிலிருந்து தேடமுடியாது. மாறாக ஜனநாயக பூர்வமான தொடர்ச்சியான நடவடிக்கைகளினாலேயே அது சாத்தியமாகும்.

சின்னஞ்சிறு விடயங்களிலும் கூட ஏற்படும் பிணக்குகளுக்கு காரணம் அதற்கு அடிப்படையாக இருந்த கருத்தியலும் நடைமுறையுமாகும் என்று உரத்துக் கூறும் தமிழ்த் தேசியவாதிகள் தமிழ்த்தேசியவாதத்தின் பிரச்சினைகளுக்கு அதன் கருத்தியலும் நடைமுறையும் தான் காரணமாக இருக்கலாமென்று ஒரு கணம் கூட சுயவிமர்சனமாக நினைக்கவும் விரும்புவதில்லை. அந்தளவிற்கு நெகிழ்வுத் தன்மையற்ற தேசியவாதமே இருந்து வருகிறது. ஆனால் தமிழ்த்தேசியவாதிகள் தங்களது பரமவைரிகளாகக் கொள்கின்ற இடதுசாரிகளையும், கம்யூனிஸ்ட்டுகளையும் விமர்சிக்கும்போது எல்லா விடயங்களிலும் கருத்தியலுக்கும் நடைமுறைக்கும் எதிரான நிலைப்பாட்டை ஈவிரக்கமின்றி எடுப்பர். கம்யூனிஸ்ட்டுகளும், இடதுசாரிகளும் கருத்தியல் நடைமுறை விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்களல்லர். தேசியவாதம் தன்னைத் தானே அவ்வாறான விமர்சனங்களுக்குட்படுத்துவதில்லை. அதனாலேயே அதற்கு எதிரான சவால்களை அது எதிர்கொள்ளும் போது அதற்கு அடிக்கடி கையறு நிலை ஏற்படுகிறது. கிழக்கு மாகாணத்தின் தற்போதய நிலை அத்தகைய கையறு நிலையாகவே இருக்கிறது. தேசியவாதத்திற்கு கையறு



எந்தவொரு தனிநபரின் கட்சிகள் இயக்கங்களது அரசியல் நடவடிக்கையும் முழுச் சமூகத்திற்கு அரசியல் பலம் சேர்ப்பதாகவும் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகள் போராட்டங்களுக்கு வலுசேர்ப்பதாகவும் இருக்க வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையில் வடக்கும் கிழக்கும் பிரிந்து நிற்பதும் உள்ளூராட்சி சபை மாகாண சபைகளுக்கும் கிழக்கில் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதும் கிழக்கு வாழ் தமிழ் மக்களையும் முஸ்லீம் மக்களையும் அரசியல் ரீதியாகப் பலப்படுத்துமா? அல்லது பலவீனப்படுத்தப்படுமா? இதுவே இன்று ஆழமாகச் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

தற்போது வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டிருப்பதும் கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றதும் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறவிருப்பதும் பேரினவாத அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலேயன்றி தமிழ் மக்களின் அபிலாஷைகளல்ல. எனவே அதனுடன் ஒத்துப் போவது கிழக்கு மக்களுக்கும் கூட அரசியல் ரீதியாகப் பலம் சேர்ப்பதாக அமையமாட்டாது. இது கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்களை ஜனநாயகம் என்ற பெயரில் பேரினவாதப் பொறிக்குள் வீழ்த்துவதாகவே இருக்கும்.

# சீனிவாசகம்– சின்னத்தங்கத்தின் மறைவும் நினைவும்

தோழர். டாக்டர் சீனிவாசகம் அவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த பொழுது தான் எனக்கு அவருடனான தொடர்பு கிடைத்தது. எனது வீட்டுக்கு அருகாமையில் தோழர். சீனிவாசகத்தின் வீடுமாகும். நான் பொதுவுடைமைக் கட்சிக்குள் வருவதற்கு அடித்தளம் இட்டுத் தந்தவரே அவர் தான்.

தோழர். சீனிவாசகம் அவர்கள் ஒரு ஆயுர்வேத சித்த வைத்தியர் ஆவார். அவர் செய்யும் வைத்தியப்பணி காசு பணத்தை எதிர்பார்த்து செய்யப்படுவது அல்ல என்பதற்கு அப்பால் அவரின் மனைவி அதற்கு எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு கொடுத்தவர் என்பதை அவரின் அண்மைய மறைவுச் செய்தி கேட்ட பொழுது நான் நினைத்துக் கொண்டேன்.

அது மட்டுமன்றி தோழர். சீனிவாசகத்தை கட்சி விடயம் சம்பந்தமாக அவரது வீட்டுக்குச் சந்திக்கச் செல்லும் வேளைகளில் எந்தவித முகச் சுளிப்பும் இன்றி இருந்து சாப்பிட்டு விட்டுச் செல்லுமாறு கூறுவார். தோழர். சீனிவாசகம் இறந்து சில காலங்களின் பின்பு சீனிவாசகத்தின் மனைவியை யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தித்த பொழுது என்னைப் பார்த்து அவர் கூறியதாவது "பாரியாரி கொள்கைக்காக இறுதிவரை போராடியவர். அவர் இறந்துவிட்டார். அவரது கொள்கையை நீங்கள் நிச்சயம் முன்னெடுப்பீர்கள் என்று நம்புகின்றோம்" என்று கூறிக்கொண்டார். அந்த நம்பிக்கை ஒரு பெண்ணிடம் இருப்பதும் புரிந்து கொள்வதும் எவ்வளவு பெரிய விடயம். அது மட்டுமன்றி அவர் தோழர் சீனிவாசகம். கட்சிப்பணிகள் செய்து கொண்டிருந்த வேளைகளில் தேவைப்படும் பணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவரது பெயரிலான அறுபத்தி ஐந்து பரப்பு வெவ்வேறு காணிகளையும் சிறிது

சிறிதாக விற்று தோழர். சீனிவாசகத்தின் பொதுப்பணிக்கும் வைத்தியப் பணிக்கும் கொடுத்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய வெகுஜன பேரணிகளிலும் முக்கிய பெண்ணாக நின்று செயற்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி அவரது மறைவு ஒரு தோழரின் உன்னத பணிகளுக்கும் மக்கள் சேவைக்கும் எவ்வளவு தூரம் ஒரு குடும்பப் பெண்ணாய் இருந்து கொண்டு ஆதரவு கொடுத்திருப்பார். எவ்வளவு இன்னல்களுக்கு மத்தியில் தனது வாழ்வுச் சக்கரத்தை நகர்த்தியிருப்பார். இது இளம் தலைமுறையில் உள்ள எமது பெண்கள் அவரிடம் இருந்து கற்க வேண்டிய பாடம் ஆகும். அது மட்டுமன்றி இறுதிவரை அவர் எமது கட்சி பற்றி அடிக்கடி அக்கறையுடன் வினவிக் கொள்வார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தின் வடமாகாண கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணியின் மாநாடு 10-03-1963 ஆம் ஆண்டு நடைபெற்ற பொழுது கட்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல விளையாட்டு போட்டிகள் நடத்திய வேளைகளில் அந்நிகழ்வுகளில் வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் இருந்து வருகை தந்த கட்சி உறுப்பினர்களுக்கு தேவையான உணவு தங்குமிடம் என்பவற்றை தனது சகோதரிகளுடன் நின்று எமக்கு செய்து தந்தவர். அப்படிப்பட்ட பெண்மணி தான் தோழர். சீனிவாசகத்தின் துணைவி என்பதும் குறிப்பிடத்தக்கது இவ்விடயம் எத்தனை பெண்களால் முடியும் என்பது

இன்றைய உலகமயமாதல் சூழலில் சிந்திக்கப்படவேண்டிய ஒன்று. அது மட்டுமல்லாமல் அவரது எளிமை, அன்பு என்பவற்றையும் இளம் பெண்கள் அவரிடம் இருந்து கற்க வேண்டிய முக்கிய பாடம் ஆகும். தோழர். சீனிவாசகத்தின் கட்சிப் பணிகளை இடை நிறுத்த மனைவியின் சொந்தபந்தங்கள் என் போர் அவரின் ஊடாக குழப்ப முயற்சிகளைச் செய்யவும் முயன்றனர்.

அத்தகைய இடையூறுகளை எல்லாம் முறியடித்து கணவரின் கட்சிப் பணிகளுடன் ஒன்றித்து நின்று செயலாற்றியவர் சீனிவாசகம் சின்னத்தங்கம் என்பது இவ் வேளை நினைவு கூரத்தக்கது.

இத்தகைய பெண்மணியின் மறைவு ஒரு சோக நிகழ்வு ஆகும். அவரது மறைவு கேட்ட பொழுது எமது கட்சியின் யாழ்ப்பாண போராட்ட வாழ்வின் பசுமையான நினைவுகளை மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றது. அந்தக் காலத்து கட்சிப்பணி, தோழமை உணர்வுகள் கூட்டு வாழ்வு, சுயசார்பு நிதி சேகரிப்பு எழுச்சிகள் போராட்டங்கள் கட்சிக் குடும்பங்களிடையேயான ஐக்கியம் போன்றன நினைவுக்கு வருகின்றன. திருமதி சின்னத்தங்கம் சீனிவாசகம் தமது கணவனுடன் சேர்ந்து. சிறப்பான குடும்ப வாழ்வையும் கட்சிப் பணிகளுக்கு ஆற்றிய பங்களிப்பும் மறக்க முடியாதவைகளாகும்.

அத்தகைய ஒருவரின் இழப்பு எனதும் தோழர்களினதும் இதயத்தை மிகவும் துயராக்கியுள்ளது. அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த அஞ்சலியையும் சிறப்பு வணக்கத்தையும் புதிய-ஜனநாயக கட்சி ஊடாகத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

**மூத்த தோழர்**
**இ.கா. சூடாமணி**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தை ஆதரிக்கும் ஜே.வி.பி யால் விலை உயர்வை எதிர்க்க முடியாது.

நமது அரசியல் நிருபர

நுகர்வோர் மாயைக்குள் தனியார் உற்பத்திகளுக்கு சந்தை தேடும் வியூகம் இருக்கிறதேயன்றி மக்களுக்கான அத்தியாவசியப பொருட்களின் நியாயமான விலைப் பரிபாலனம் இருப்பதில்லை. பூகோளமயமாதல் என்ற வெள்ளம் தலைக்கு மேல் வந்துவிட்டப்பிறகு அரசாங்கம் தலையிட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனையே வேறு வார்த்தைகளில் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறிவருகிறார். அதாவது விலைகள் உயர்வதற்கு அரசாங்கம் எதனையும் செய்ய முடியாது என்று கூறி வருகிறார். அப்படியாயின் இந்த அமைச்சர் நுகர்வோரான மக்களுக்கு ஆதரவானவரா? அல்லது வர்த்தகப் பெருச்சாளிகளுக்கு உடந்தையானவரா?

அவர்தான் அப்படி கூறுகிறார் என்றால் கீரைக்கடைக்கு எதிர்க்கடையாகச் செயற்படும் எதிர்கட்சியான ஐ.தே.கட்சியின் எதிர்ப்புகள் பெரிதாக இல்லை. ஜனநாயகத்தை நிலைநாட்ட கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது போல் ஆளும் கட்சிக்கு எதிரக்கட்சி தேவை என்ற முதலாளித்துவ ஜனநாயக வாசகங்கள் தற்போது செல்லுபடியாகவில்லை என்பதை ஐ.தே. கட்சியின் ஏனோ தானோ என்ற செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் லங்கா சமசமாஜக் கட்சியினதும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியினதும் உறுப்பினர்கள் யுத்தம் நடைபெறுவதாலேயே விலைவாசி உயர்வாதாகப் பேசுகின்றனர். ஆனால் யுத்தத்தை நிறுத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்திற்கு கொடுக்கும் நிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் சில முணுமுணுப்புகளை செய்தாலும் அரசாங்கத்தின் பேரினவாத முனைப்புகளுக்கு சப்பை கட்டுவதாக நடந்து கொள்கின்றனர். அக்கட்சிகளின் தொழிற்சங்கங்களும் கூட விலைவாசி உயர்வைக் தடுத்து நிறுத்தவோ விலைவாசி உயர்விற்கு ஏற்ற சம்பள உயர்வுகளை வழங்கும்படி வற்புறுத்திய போராட்டங்களை முன்னெடுக்கும் நிலையிலோ இல்லை.

சுகாதார ஊழியர்களும், ஆசிரியர்களும் தொழிற்சங்க வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது அவ்வேலை நிறுத்தங்களுக்கு எதிராகப் போராட்டம் செய்வது நாட்டுப்பிரசைகளின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவற்றில் தீர்ப்பளித்த நீதிமன்றம் அவர்களின் வேலை நிறுத்தம் சட்டவிரோதமென்று கூறிய சந்தரப்பங்கள உண்டு. அதனை மீறி செயற்பட்டனர் என்று சில தொழிற்சங்கத் தலைவர்கள் மீது நீதிமன்றத்தை அவமதித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்தமாதம் நுகர்வோர் பாதுகாப்பு நீதவான் நீதிமன்றக் கட்டிடத் திறப்பு விழாவில் பேசிய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களைக் கடுமையாகத் தாக்கிப்பேசியதுடன் அவர்கள் தம் முன் வரும் சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான நீதித்துறையின் அச்சுறுத்தலாகவே கொள்ளப்பட வேண்டும். அத்துடன் வேலை நிறுத்தப் போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங் களிலும் ஈடுபடுபவர்கள் ஆங்காங்கே குண்டர்களால் தாக்கப் படுகின்றனர்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் செயற்படும் இடதுசாரிகள் எனக் கொள்ளப்படுவர்கள் மக்களை அணி திரட்டி வாழ்க்கை செலவு அதிகரிப்பிற்கு எதிரான மக்களின் எதிர்ப்பை பதிவு செய்வதற்கும் திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் என்.ஜி.ஓ பணத்திற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களாக மட்டுமே இருக்கின்றனர்.

பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் செயற்படும் இடதுசாரிகளுக்கு மாறாக செயற்படுவதாக கூறிக் கொண்டிருந்த ஜே.வி.பி பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் கைப் பற்றிய பின்னர் அவர்களின் ஆர்ப்பாட்டங்களை கைவிட்டு மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தைப் பாதுகாக்கும் அளவிற்கே செயற்படுகின்றனர். பொருளாதார நெருக்கடிக்கு காரண மான அரசாங்கத்தின் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்து விழ இருந்த அரசாங்கத்தை ஜே.வி.பி யினர் பாதுகாத்தனர். அந்த வரவு செலவு திட்டத்திற்குப் பிறகு மென்மேலும் விலைவாசிகள் உயர்வடைந்துள்ளன. அந்த வரவு செலவு திட்டத்தை ஆதரித்தது மட்டுமன்றி தற் போதைய விலைவாசி உயர்வுகளைக் கண்டித்து வெறும் பெயரளவிலான ஆர்ப்பாட்டங்களை நடத்தக்கூடத் தயாராக இல்லை. அதேவேளை தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை எதிர்க்கும் ஜே.வி.பி அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு கருத்தியல் ரீதியாகவும் நடைமுறையிலும் ஒத்தாசை புரிந்து வருகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வலியுறுத்தி வந்த சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்யும் தொழிற்சங்க வாதிகளை புலிகளுக்கு ஆதரவான தொழிற்சங்கப் புலிகள் என்று பட்டம் சூட்டி அவர்களின் தொழிற்சங்க இயக்கத்திற்கு தடையாக இருந்ததுடன் சில தொழிற்சங்கத் தலைவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட காரணமாகவும் இருந்துள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் கடந்த ஒருவருடத்திற்கு மேலாகத் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர். அதேவேளை சமாதானத்திற்காக குரல் கொடுத்தவர்களை ‘சமாதானப் புலிகள்’ என்றும் என் ஜி ஓ செயற்பாட்டாளர்களை “என் ஜி ஓ புலிகள்” என்றும் ஊடகவியலாளர்களை “ஊடகப் புலிகள்” என்றும் பிரசாரம் செய்து அவர்களின் நடவடிக்கைகளை தடுத்து அவர்களுக்கு எதிரான இராணுவ புலனாய்வு நடவடிக்கை களை எடுக்கவும் அவர்களை கைது செய்யவும் தடுத்து வைக்கவும் ஜே.வி.பி அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பாக செயற்பட்டு வருகிறது. ஜே.வி.பியை இடதுசாரிகள் என் போர் இது பற்றி என்ன கூறுவார்கள். எனவே ஜே.வி.பி யின் போலியான இடதுசாரி வேடம் பழைய இடதுசாரிகளை விட மிக வேகமாக அம்பலப்பட்டுள்ளது. அவர்களின் யுத்தக் கொள்கை மக்களின் பொருளாதார சுமைகளை நியாயப்படுத்துகிறது. அதாவது யுத்தம் நடக்கும் போது விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாத படியால், அதற்கு எதிராகப் போராடுவதும் குரல் கொடுப்பதும் யுத்தத்தை எதிரப்பதும் பயங்கரவாதத்தை ஆதரிப்பதுமாகும் என்பது அதன் கொள்கை. அதனால் அவர்கள் வாயளவில் விலை வாசி உயர்வு பற்றி கதைத்தாலும் மக்களின் வாழ்க்கைச் சுமைக்கு எதிராக மக்கள் சார்பாக மக்களின் குரலாக செயறபட போவதில்லை

நாட்டின் அனைத்து மக்களையும் யுத்தத்தின் பாதிப்பிற்குள் தள்ளிவிட்டு அதனால் ஏற்படும் வாழ்க்கைச்சுமை ஜனநாயக உரிமை மீறல், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு சப்பைக் கட்டுவது மக்கள் சார்பான நிலைப்பாடே அல்ல.

இலங்கை மக்கள் தற்போது முகம் கொடுக்கும் கொடிய யுத்தம், அதனால் நாளாந்தம் உயரும் வாழ்க்கைச் செலவு என்பவற்றுக்கு எதிரான மக்கள் இயக்கம் அவசியம். இல்லாவிட்டால் சோமாலியாவின் இடத்தை வெகு விரைவில் இலங்கை பிடித்துக் கொள்ளும் நிலையே வளர்ந்து வருகிறது. எனவே நேர்மையான பரந்துபட்ட அளவிலான வெகுசனப் போராட்ட இயக்கம் அவசியமாகிறது.



# ஊதிப் பெருப்பிக்கப்படும் திபெத் கலவரம்

## தலலாமா யார்? கேட்பது என்ன?

உலகில் தூணைத் துரும்பாக்கிக் காட்டவும் அதேபோல துரும்பைத் தூண்களாக்கிக் கொள்ளவும் இன்றைய ஏகாதிபத் திய ஊடகங்களுக்கு முடியும். அவ்வாறு ஊதிப் பெருப்பித்துக் காட்டப்படுவதை எவ்வித கேள்வி நியாயமும் இன்றி பிரசாரப்படுத்தும் ஒளி ஒலி ஊடகங்களும் அச்சு ஊடகங்களும் உலகம் பூராகவும் உள்ளன. இதில் நம் நாட்டு ஊடகங்களும் சளைத்தவையல்ல. அந்த வகையில் அண்மைய நாட்களில் திபெத கலவரங்கள் எனப்படுபவற்றை ஊடகங்கள ஊதிப் பெருப்பித்து வருவதைக் காண முடிகிறது.

உலகின் முகடு எனப்படும் திபெத் சீனாவின் பரந்த நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். நிலவுடைமை சமூக ஆட்சியமைப்பில் அங்கு பண்ணையடிமைத்தனமும் கொடூர நிலவுடைமையாளர்களின் ஆட்சியுமே நிலவி வந்தது. அவர்களது ஆட்சிக்கு பௌத்த மடாலயங்கள் பக்க பலமாகவும் ஆதிக்கம் கொண்டவையாகவும் இருந்து வந்தன. இப் பௌத்த மடாலயங்களும் அவற்றின் துறவிகள் எனப்பட்டவர்களும் சகல சுக போகங்களையும் மதமார்க்கத்தின் பெயரால் அனுபவிப்போராகவே இருந்து வந்தனர். அதிலும் குறிப்பாக பிரதான பௌத்த மடலாயத் துறவிகள் மஞ்சள் ஆடை தரித்த மன்னர்கள் போன்றே ஆடம்பர வாழ்வு வந்த அதேவேளை மக்களை ஏமாற்றி அடிமைகளாக வைத்திருப்பதில் தமது பௌத்த மத செல்வாக்கைப் பயன்படுத்தினர். இத்தகைய நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தின் கீழ் திபெத் விவசாயிகளும் ஏனைய மக்களும் வறியவர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். நிலங்கள் யாவும் நிலப்பிரபுக்களுக்கும் பௌத்த மடாலயங்களுக்குமே சொந்தமாக இருந்து வந்தன. மக்கள் வறுமை நிலமின்மை கல்வி இன்மையுடன் வாழ்ந்தனர். இத்தகைய திபெத் பௌத்த மடாலயத்தின் வழிவழிவந்த தலை மைத் துறவிகளில் ஒருவரே தலலாமா ஆவார்.

இந் நிலையிலேயே சீனப்புரட்சி தோழர் மாஓவின் தலைமையில் 1949ல் வெற்றி பெற்றது. நிலவுடைமையும் முதலாளித்துவமும் தோற்கடிக்கப்பட்டது. தொழிலாளர் விவசாயிகளது புதிய அரசாங்கத்தின் கீழ் சீனாவில் உள்ள தேசிய இனங்களின் இன மொழி மத பண்பாட்டுத் தனித்துவங்களின் அடிப்படையில் சுயாட்சிப் பிரதேசங்களும் சுயாட்சி உள்ளமைப்பு பிரதேசங்களும் உருவாக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டன. அதன் மூலம் அப்பிரதேசங்களின் நிர்வாகம் அபிவிருத்தி மொழி கல்வி சுகாதாரம் பண்பாடு உள்ளிட்ட மக்கள் நல்வாழ்வு என்பன மாறுதல்களுக்கும் வளச் செழிப்புகளுக்கும் உள்ளாகின. அத்தகையதொரு பரந்த சுயாட்சிப் பிரதேசமாக இருந்து வருவதே திபெத்தாகும்.

அமெரிக்காவின் சூழ்ச்சிகரமான திட்டங்களின் பின்னணியில் உருவாக்கப்பட்ட சதிகளுக்கு நிலப்பிரபுக்களும் குறிப்பாக பௌத்த மடாலயங்களின் பிற்போக்குத் தலைமைத் துறவிகளும் பயன் படுத்தப்பட்டனர். அத்தகையவர்களில் ஒருவரே தற்போதைய சமாதானத் தூதுவராகக் காட்டப்படும் தலலாமா ஆவார்.

திபெத்தில் தொடர்ந்து இருக்க முடியாத தலலாமாவும் அவரது கூட்டத்தினருமான சுமார் ஆயிரம் பேர் வரை திபெத் எல்லையைக் கடந்து இந்தியாவிற்குள் புகுந்து தஞ்சமடைந்தனர். 1959ல் இவ்வாறு வந்தோருக்கு நேரு தலைமையிலான இந்திய அரசாங்கம் அன்று தஞ்சம் வழங்கியது. அன்று முதல் இத் தலலாமாவும் அவரது கூட்டத்தினரும் இந்தியாவில் தர்மசாலா அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வரும் போது பெருந்தொகையான தங்கம் உட்பட பெறுமதி மிக்க செல்வங்களைக் கடத்தி வந்தனர். அன்று முதல் அமெரிக்கா தலலாமாவைத் தனது சீன விரோதத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வந்துள்ளது. தலலாமாவிற்கு உலக சமாதான நோபல் பரிசு கிடைக்க வழி செய்து கொடுத்து அதன் ஊடே திபெத்திற்கான தனிநாட்டுப் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது.

இப் பிரச்சாரம் தற்போது உலகளாவிய ரீதியில் முடுக்கி விடப்பட்டுள்ளது. அண்மையில் திபெத்தில் உள்ள சிலபௌத்த துறவிகளும் அவர்களது கை கூலிகளும் திபெத் தலை நகர் லாசாவில் கலவரத்தில் ஈடுபட்டனர். சீன இனத்தவர் மீது அவர்களது வியாபார நிறுவனங்கள் மீதும் இனவெறித் தாக்குதலை நடாத்தினர். எதிர்



வரும் ஆகஸ்ட் மாதத்தில் சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற உள்ள எட்டாவது உலக ஒலிம்பிக் போட்டியை முன் வைத்தே மேற்படி திபெத் கலவரங்கள் தூண்டப்பட்டுள் என. இவ் இனவெறிக் கலவர ங்களை நடாத்திய பௌத்தத் துறவிகள் எனப்பட்ட மஞ்சள் உடையணிந்தவர்களின் சூழ்ச்சியையும் சதிகளையும் உலக ஏகாதிபத்திய ஊடகங்கள் “சுதந்திர உணர்வு” என்றும் “தனிநாட்டுக் கிளர்ச்சி” என்றும் வர்ணித்து ஊதிப் பெருப்பித்துப் பிரசாரம் நடத்தி வருகின்றன. உலகின் சில நாடுகளில் உள்ள திபெத்திய கைக் கூலிகளை ஏவி விட்டு “ஆர் ப்பாட்டம்” செய்யத் தூண்டி வருகின்றனர். இதில் அமெரிக்க பிரித்தானிய உளவு நிறுவனங்கள் திட்டமிட்டுச் செயல்படுகின் றன. லாசா நகரில் இவ் இன வெறிக் கலவரக்காரர்கள் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை 108 பேர் கொல்லப்பட்டதாக தலலாமாவும் உலக வல்லரசு ஊடகங்களும் ஒப்பாரி வைத்துப் புலம்பிக் கொட்டினர்.

ஒரு புறத்தில் ஒலிம்பிக் போட்டி இடம் பெறுவதால் சீனாவின் பக்கம் உலகக் கவனம் திரும்பியுள்ள வேளையில் திபெத் கலவரங்களை முடுக்கி அதனை ஊதிப் பெருப்பித்துக் காட்டுவதன் மூலம் சீன விரோதத்தைப் பரப்பி உலகில் சீனாவை தீய சக்தியாக்க காட்டுவதே அமெரிக்க மேற்குலக நிலைப்பாடாகும். அதற்கு கிடைத்த அடிவருடியே செல்வந்த மேட்டுக்குடிப் பௌத்த நிலப்பிரபுத்துவ துறவி எனக் கொள்ளப்படும் தலலாமாவாகும்.

நமன்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## தேச அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும்

# சுருங்கி வரும் அரசின் சமூகப் பொறுப்பு

**தேசபக்தன்**

**(New Democracy 26 டிசெம்பர் 2007 கட்டுரையின் தமிழாக்கம்)**

> **சோஷலிசத்தின் பின்னடைவும் நவதாராளவாதத்தின் எழுச்சியும் உலக மயமாதலை முன் தள்ளியது. மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் சமூக நலத்திட்டங்களை கைவிட சர்வதேச நிதி முகவர் நிறுவனங்கள் நிர்ப்பந்திக் கொண் டன.**

### அரசின் சுருங்கிவரும் வகிபாகம்

முதலாளிய அரசாகட்டும், சோஷலிஸ அரசாகட்டும் அரசினது பிரதான வகிபாகம் ஏதெனில் இருக்கிற சமூக அமைப்பைப் பாதுகாப்பதும் சமூக உறுதி நிலையை நிச்சயப்படுத்துவதுமாகும். அத்துடன் சமூகத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் ஆதிக்கஞ் செலுத்துகிற அல்லது ஆளுகிற வர்க்கத்தின் நலன்களை முன்னெடுத்துச் செல்லுகிற விதமாக அம்மாற்றங்களை நிருவகிப்பதுமாகும். அறுதியானது ஏதெனில் அதிகாரத்தில் உள்ள வர்க்கம் எது என்பதும் அரசு தனது வகிபாகத்தை எவ்வாறு வகிக்கிறது என்பதும் வர்க்கப் போராட்டம் எவ்வாறு தன்னை வெளிப்படுத்துகிறது என்பதனாலும் முடிவாகிறது.

பலவேறு வடிவங்களில் நாம் காணுகிற சமூகநலன் பேணும் முதலாளிய அரசானது ஆளும் வர்க்கத்தின் நல்லெண்ணத்தின் விளைவானதல்ல. முதலாளிய சமூகத்தில் எடுக்கப்படும் சமூக நல நடவடிக்கை ஒவ்வொன்றும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களது போராட்டங்களது நேரடியான அல்லது மறைமுகமான விளைவே. முதலாளியம் ஏகாதிபத்தியமாக மாறியதும் நிதி மூலதனத்தின் எழுச்சியும் ஆதிக்கமும் உலகமயமாதலும் மூலதனத்தின் அசைவாற்றலும் 1980 களிலிருந்து ஒரு அரசியல் சக்தியாக நவதாராளவாதம் கண்ட எழுச்சியுடன் சேர்ந்து கொண்டன. அவை முன்னேறிய முதலாளிய நாடுகளில் சமூகப் பாதுகாப்பினதும் சமூக நலனினதும் பிரதான ஆதாரமான அரசு ஆற்றிய பங்கிற்குக் குழிபறித்துள்ளன. மூன்றாம் உலகில் அவற்றின் விளைவுகள் மேலுங் கடுமையானவை. அரசின் மீது ஏகாதிபத்தியத்தின் அழுத்தங்களின் காரணமாக அரசு தனது சமூகப் பொறுப்பைக் கைவிடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாக அரசு வழங்கி வந்த சொற்ப சமூகப் பாதுகாப்பு நிவாரணம் மட்டுமன்றி அரசு பொறுப்பெடுத்திருந்த கல்வி, உடல் நலன், பொதுசனப் போக்குவரத்து, நீர் வழங்கல் ஆகிய அத்தியாவசிய சேவைகள் மெல்லச் சிதைய விடப்பட்டுள்ளன. சில சமயங்களில் அவை ஒரே வீச்சில் வெட்டிக் குறுக்கப்பட்டோ கைவிடப்பட்டோ உள்ளன.

மூன்றாமுலக நாடுகளிற் சமூக நலன் பற்றிய அரசாங்கங்களது நோக்கு அவற்றின் அரசியற் சித்தாந்தத்தாலும் உலகளாவிய போக்குகளாலும் வழி நடத்தப்பட்டுள்ளன. மூன்றாமுலக நாடுகளின் சுதந்திரத்தை அடுத்து உருவான வெகுசனச் செல்வாக்குடைய ஆட்சிகள மட்டுமன்றி நிலவுடைமை- முதலாளி வர்க்க ஆதிக்கத்திற்குட்பட்ட ஆட்சிகளுங் கூடத்தாம் ஆட்சியிற் தொடர வேண்டுமாயின் கொஞ்சமேனும் சமூகப் பாதுகாப்பையும் நாடு முழுமைக்கும் இல்லாவிடினும் சில பகுதி களிலேனும் அத்தியாவசிய சேவைகளை உறுதிப்படுத்துவது தேவை என்பதை உணர்ந்தன. கல்வியும் பொதுச் சுகாதாரமும் பெற்ற முக்கியத்துவம், பொருளியல் வளங்களின் மீதும் உடல்வலிமையும் போதியளவு எழுத்தறிவுங் கொண்ட ஒரு உழைப்பாளர் படையினது தேவை உணரப்பட்டிருப்பதன் மீதும் தங்கியிருந்தது.

கடந்த மூன்று தசாப்தங்களாக மூன்றாம் உலகில் அரசு சமூகப் பொறுப்புக்களைக் கைவிட்டு வருவது சர்வதேச நிதி முகவர் நிறுவனங்களது நெருக்குவாரங்களினாலாகும். அண்மைக் காலங்களில் இச் "சீர்திருத்தங்கள்" "மீள் கட்டமைத்தல்" என்கிற பேரிலும் புதிதாக உருவாகி வந்த முதலாளி வர்க்கத்தில் சர்வதேச மூலதனத்துக்கு நெருக்கமான பகுதியினரது நெருக்குவாரங்களினாலும் நடைபெறுகிறது. கியூபா போன்றும் அண்மைய காலந் தொட்டு வெனசுவேலா போன்றும் விலக்கான சில நாடுகளைத் தவிர்த்தால் மூன்றாம் உலக நாடுகளின் சமூக பொருளியற் கொள்கைகளால் கல்வியிலும் மருத்துவத்திலும் கடைப்பிடிக்கப்பட்ட சமத்துவக் கொள்கை மிகவும் பாதிப்படைந்தது.

இதனால், உலகமயமாக்கல், சுயாதீனமான சந்தை, சந்தைச் சக்திகள், தாராளமயம் போன்ற கருத்துக்கள் எல்லா நாடுகளின் அலுவல்களையும் நடத்துவதில் அரசின் பங்கைக் குறைப்பதற்கும் முன்முயற்சி எடுக்கப்பட்டன. அத்துடன் போட்டி என்பதும் மனிதரின் 'இயல்பான சக்திகளும்' கட்டற்ற மூலதனத்தின் வருகையுடன் இணைந்து சமூகத்தின் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்வது என்று முடிவு செய்வதற்குமாக அமைக்கப்பட்டவை என்று எவரும் எண்ணக் கூடும். அந்நிய மூலதனத்தையும் வேலை வாய்ப்புக்களையும் அதிகரிக்கும் நோக்கில் மூன்றாமுலக நாடுகளின் அரசாங்கங்கள் முற்படலாம். எனினும் அபிவிருத்திக் குறைபாட்டினதும் வேலையின்மையினதும் விளைவுகளிற் குறுக்கிடுவது குறிப்பாக விலைச் சலுகைகள் வறுமை ஒழிப்புப் போன்ற வழிகளிற் செயற்படுவது அரசிற்கு அனுமதிக்கப்படாதது.

உட்கட்டமைப்பு விருத்தியில் அரசின் பங்கு அதன் நிதிவளப் போதாமையால் குறைவாகிறது. இதற்கு ஒரு காரணம் அந்நிய முதலீட்டாளர்கட்கான வரிச் சலுகைகளாலும் வரி விடுமுறைகளாலும் வணிகத்துறையிடமிருந்து வரி விதிப்பால் அரசு பெறுகிற வருமானங் குறைவதாகும்.

சுதந்தி வர்த்தக வலயங்களும் தொழிற் பேட்டைகளும் போன்ற அமைப்புகளிற் போன்று சிறப்பான சட்டங்கள் மூலம் அந்நிய முதலீட்டாளர்கள் தொழிலாளரது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினின்று விலக்களிக்கப்படுமாறும் அரசு நெருக்குதலுக்கு உட்படுகிறது. இவ்வாறான அமைப்புகளிற் பணிபுரியும் தொழிலாளர்கட்கு அவர்களது தொழிற்சங்க உரிமை மட்டுமன்றி அவர்களது அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளுங்கூட வெவ்வேறு அளவுகளில் மறுக்கப்படுகின்றன.

சமூகப் பாதுகாப்பை வழங்கும் ஒரு அமைப்பு எனும் வகையில் அரசின் வகிபாகம், அதாவது நவதாராளவாதச் சொல்லாடலில் 'ஆயா அரசு' உலகில் பரவலாகத் தாக்குதலுக்குட்பட்டுள்ளது என்பது உண்மை. எனினும் இதில் நவதாராள வாதிகள் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளனர் என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. கல்வியும் பொதுச் சுகாதாரமும் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ளன. முதலாளிய மேலை நாடுகளில் 1980களில் பிரித்தானியாவில தொடங்கப் பெற்ற இப் போக்கு வெகுஜன எதிர்ப்பு தேர்தல் அரசியற் கணிப்புக்கள் அரசியற் கட்சிகள் உட்பட்ட பல்வேறு அமைப்புக்களது நெருக்குவாரங்கள் என்பனவற்றினால் பின்வாங்கச் செய்யப்பட்டுள்ளது. மேற்கில் உலகமயமாதலுக்கு எதிரான இயக்கம் மூன்றா முலகை அசமத்துவமான முறையில் நடத்துவதற்கு முடிவு கட்டுவதையும் ஏகாதிபத்தியப் பேராசைக்கு மேலை நாடுகளின் சமூக நலன் இரையாகாமற் காப்பதையும் தமது வேலைத்திட்டத்திற் கொண்டுள்ளது.

மூன்றாமுலக நிலைமைகள் அவ்வளவு நன்றாக இல்லை. சென்ற நூற்றாண்டின் கொலனிய எதிர்ப்பு அலை எழுச்சியின் போது இந்த நாடுகளில் அதிகாரத்தைப் பிடித்த தேசிய முதலாளி வர்க்கங்கள், சமூக அமைப்பில் அடிப்படையான மாற்றங்கள் இல்லாது ஏகாதிபத்தியத்துக்குத் தம்மால் முகங்கொடுக்க இயலாது என்பதை விரைவிலேயே அறிந்து கொண்டன. போலி இடதுசாரி கட்கும் முதலாளிய அரசியற் கட்சிகட்குமிடையிலான தொடர் தொடரான உடன்பாடுகள் தேசியப் போராட்டங் களைப் பலவீனப்படுத்தியதுடன் ஏகாதிபத்தியத்துடன் சமரசங்கட்கும் வழி செய்தன. அச் சமரசங்கள் இந்த நாடுகளின் பொருளாதாரம் மேலும் அதிகமாக ஏகாதிபத்தியத்தின் மீது தங்கியிருக்கச் செய்ததுடன் அவற்றின் நிலைமை கொலனி ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட மோசமாகின.

அந்நிய அரசாங்கங்களிடமிருந்தும் கடன்வழங்கும் முகவர்களிடமும் சர்வதேச வங்கிகளிடமுமிருந்தும் கடன் வாங்கியதால் கடன்பட்ட நாட்டின் பொருளாதாரம் வெளியிலிருந்து வந்த அழுத்தங்களால் வழிநடத்தப்பட்டதுடன் வட்டியுடன் கடனை மீளச் செலுத்துவது பொருளாதார நிகழ்ச்சி நிரலில் ஒரு பிரதான அம்சமாகியது. கடன் வழங்கியோர் அரச நிறுவனங்களை "மீள் கட்டமைக்குமாறும்" "சீர்திருத்தங்களை" மேற் கொள்ளுமாறும் வற்புறுத்தியதால் சமூக சேவைகட்கும் பிற அரச பொறுப்புக்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டிய நிதி வரிக் குறைப்பு முதலான பிற கடப்பாடுகளாற் பறிக்கப்பட்டது.

மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் பெருவாரியான தருணங்களில் சமூகப்பாதுகாப்பினது காவலனும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவோனும் என்ற தனது வகிபாகத்திற் தவறி விட்டது. மூன்றாமுலக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தாங்கள் பரிந்துரைத்த பொருளியற் தாராளமயம், தனியார்மயம், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மீள் கட்டமைத்தல் என்பன வற்றை முற்றுமுழுதாக நிறைவேற்றத் தவறிய தாலேயே ஏற்படுகின்றன என்று நவதாராளவாதிகளும் உலகமயமாக்கலின் பிற ஆதரவாளர்களும் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

பொருளியற் பிரச்சனைகளில் நவதாராளவாதிகள் உலகிற்குப் பரிந்துரைப்பது ஏதெனில் 'குறைந்தபட்ச' அரசாங்கம் அல்லது அரசாங்கமே இல்லாமையாகும். அதன் மூலம் 'சந்தைச் சக்திகள்' அனைத்தையும் தீர்மானிக்கையில் பன்னாட்டுக் கம்பனிகள் உலகை ஆளும் என்பதாகும்.

### அரசின் வகிபாகத்தை வலுப்படுத்தல்

வறுமைப்பட்டோருக்கும் சமூகக் குறைபாடுடையோருக்கும் ஆதரவாயும் அனைத்து மக்களதும் அத்தியாவசியத் தேவைகளுக்கான உத்தரவாதத்தை வழங்குகிற வகையிற் தனது வகிபாகத்தைக் குறைக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை ஆளும் வர்க்க நோக்கங்களை முன்னெடுப்பதிலும் தேசிய எல்லைகட்கு உள்ளும் வெளியிலும் எவருடைய நலன் சார்ந்தவை என்பதைப் பொறுத்துச் சமகால நிலைமைகளைப் பேணுவதிலும் அதன் பங்கு கேள்வியின்றி ஏற்கப்படுகிறது.

ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேண அதிகரித்துவருகிற அளவில் அரசு பொலிஸ் வன்முறையைப் பயன்படுத்துகிறது. அடக்குமுறை ஆட்சிகள் தூக்கி எறியப்பட்டு வெகுசன ஆதரவுள்ள அரசாங்கங்கள் நிறுவப்படுகிற நிலைமைகள் மட்டுமே விலக்கானவை. பொலிஸ் அத்துமீறல்கள் பொது மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துள்ளன. பொது இடங்களில் பொலிஸ் வன்முறைப் பிரயோகம் சட்டரீதியான சவால்களை எதிர் நோக்கியுள்ளது. எனினும் அரச ஒடுக்கு முறையின் அதிகம் புலப்படக்கூடிய கரமா கப் பொலிசின் வகிபாகம் இன்னமும் தொடர்கிறது. ஆயுத பாணிகளாக ராணுவம் பொலிஸ் பல நாடுகளிலுங் காணக் கூடியமை அரசு மக்கள் முன் எவ்வாறு தன்னைக் காட்டிக் கொள்கிறது என்பதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் ஒரு அடையாளமாகும்.

ஆயுதத் தரித்த பொலிசாரை நீண்டகாலத்திற்குப் பகிரங்கமாகக் காட்சிப் படுத்துவதற்குக் கிளர்ச்சி சமூகக் கலவரம் பயங்கரவாதம் ஆகியன வழமையான காரணங்களாகக் காட்டப்படுகின்றன. பொலிஸ் நிறுவனத்தின் ஊழல் தடுப்பில் உள்ள சந்தேகநபர்கள் மீதான மிருகதியான வன்முறை என்பனவற்றின் நடுவிலும் மக்களுக்கு நட்பான முறையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கிற அமைப்பு என்ற படிமம் மாறி வருகிறது. பொலிஸ் வன்முறை அதிகரித்து வரும் அளவில் வெளிவெளியாகத் தெரிவதுடன் பொலிஸ் தடுப்பில் உள்ளோரது சரீரத் துன்புறுத்தல் மாமூலான தாகியுள்ளது மட்டு மன்றி வழமையான பொலிஸ் நடத்தையாகவும் கருதப்படுகிறது. முன்னேறிய முதலாளிய நாடுகளிலும் மூன்றாமுலக நாடுகளிலும் பொலிஸ் மூர்க்கத்தனம் செயற்படுகிற விதம் வேறுபட்டாலும் வெளிவெளியாகவே வன்முறைசார்ந்த நடத்தையை நோக்கிய நகர்வு ஏறத்தாழச் சர்வ வியாபகமானது.

ஆளும் வர்க்கங்களது மௌன அங்கீகாரத்துடன் ஊடகங்களும் பொழுதுபோக்குத் துறையும் பொலிஸினதும் ராணுவத்தினதும் வன்முறையைப் பெருமைப்படுத்துகின்றன. ஊடகவாயிலாகத் தொடர்ச்சியாகப் பழக்கப்படுத்தப்படுவதன் விளைவாக மக்கள் அதைப் பணிவாக ஏற்க மட்டுமன்றிப் பயங்கரவாத அச்சுறுத்தல் குற்றச் செயற்காரர் ஆகியோரால் தமது உயிருக்கு அஞ்சுகிற நிலைக்கு வருகிறபோது அதை அங்கீகரிக்கவுங் கூட ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

தளையற்ற தொழில் முயற்சிகள், சந்தைச் சக்திகள், 'பூச்சிய' அரசாங்கம் என்பனவற்றைப் பரிந்துரைக்கும் நவதாராள வாதிகள் ஆயுதந்தரியாத எதிர்ப்பு, வெகுஜன எழுச்சிகள், கிளர்ச்சிகள் என்பன பற்றி அரசு மேலும் வலிய ஒரு வகிபாகம் தாங்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். பெருமளவும் முதலில் வன்முறையைப் பிரயோகிப்பது அரசாகவே இருந்த போதும் ஆளும்

தொடர்ச்சி 9ம் பக்கம்......

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# ஏகாதிபத்தியத்தின் பதிலாளராக என். ஜீ. ஓக்கள்!

## தேச அரசும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும்

வர்க்கத்தினர் அரசின் தாக்குதலுக்கெதிரான அற்பளவு வன்முறையையும் மிக வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான தசாப்தங்களில் நாடுகளிடையிலான போர்கள் சிலவே நடந்துள்ளன. ஐ.நா.வின் பேரிலும் அண்மையில் நேற்றோ அமைப்பின் மூலமும் தொடுக்கப்பட்ட போர்களைத் தவிர்த்தால் நாடுகளில் ஆயுதப்படைகள் பயன்பட்டுள்ள போது அவை எந்த வெளி எதிரியையும் விட அதிகமாக நாட்டு மக்களையே தாக்கியுள்ளன. எனினுங் குறிப்பிடத்தக்க ஒரு விலக்கு அமெரிக்கா. அண்மைய வரலாற்றில் அதுவே மிகப் பெரிய போர் செய்யும் நாடாக இருந்துள்ளதுடன் தனது எல்லைக்கு வெகு தொலைவில் உள்ள மிகப் பலவீனமான நாட்டையுந் தனது பாதுகாப்புக்கு ஒரு மிரட்டல் என்று காண்பிக்க வல்லதாய் உள்ளது.

நவதாராளவாதிகள் மட்டுமன்றி முதலாளிய அரசியற் கட்சிகள் முழுவதும் முதலாளிய அரசின் தங்களது நலன்களைக் கொண்டுள்ளவையான அனைத்து மத்திய- இடது அரசியற் கட்சிகளும் சமூக ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொலிஸினதும் ஆயுதப்படைகளினதும் பங்கை அங்கீகரிக்கின்றனர். சமூகத்தை ஒரு சிறு அளவிலேனும் மாற்றச் செயற்படும் சக்திகட்கு எதிரான அரச வன்முறையைக் கண்டிக்க அவர்கள் துணியமாட்டார்கள்.

இரண்டு வகையான நிலைமைகளின் கீழ் ஏகாதிபத்திய வாதிகள் அரசுகளை ஒடுக்குமுறையாளர் எனப் பழித்துரைக்கின்றனர். ஒரு அரசு ஏகாதிபத்திய நலன்கட்கு விரோதமான நலன்களை முன்னெடுக்கும் போது உதாரணமாக கியூபாவும் வெனிசுவேலாவும் மிகவும் வெறுக்கப்படுகின்றன. ஏனெனில் அவை தமது நாட்டு மக்களினதும் லத்தின் அமெரிக்கா முழுவதினதும் நலன்களைப் பாதுகாக்க முனைகின்றன. ஈரானிய அரசு பல வகைகளிலும் அடக்குமுறையானதாக இருந்து வருகிறது. எனினும் விரும்பப்படாத விடயம் அமெரிக்கா ஆசியாவினுள் அமெரிக்க விஸ்தரிப்புக்கு ஈரான் தடையாயிருப்பது தொடர்பானது. வேறு வகையான அரசுகளின் ஒடுக்குமுறை கொடூரமானது என்பது அறியப்பட்டும் மூடிமறைக்க இயலாதளவுக்கு அம்பலப்படுத்தப்பட்டும் இருக்கிற போது அந்த ஒடுக்குமுறை தயக்கத்துடன் பழித்துரைக்கப்படுகின்றது. அமெரிக்காவின் கூட்டாளிகளிடையே இஸ்ரேல், துருக்கி இப்போது எதியோப்பியா என்பன தமது மக்களுக்கு எதிராக அவிழ்த்துவிடும் கொடுமை பற்றி மேலை நாடுகளின் பிரதான ஊடகங்களில் மிகச் சொற்பமாகவே சொல்லப்படுகிறது. அவ்வாறே அமெரிக்காவுக்குப் பதிலாக நடத்துகிற போர்கள் பற்றியும் அதிகம் பேசப்படுவதில்லை.

உண்மை ஏதெனின் அரச இயந்திரம் என்பது வர்க்க ஒடுக்குமுறைக்கான ஒரு கருவியே என்பதை அன்று லெனின் தனது "அரசும் புரட்சியும்" நூலில் அரசு பற்றிய பிரமைகளையும் நோக்கில் எடுத்துக்காட்டிய போதிலும் அது நன்றாக இன்று விளங்குகிறது. ஏகாதிபத்தியவாதிகள் அதை மறைக்க முயலுவதுமில்லை.

பல நாடுகளில் அரசின் வகிபாகம் மருத்துவம், கல்வி, பொதுசனப் போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்புச் சேவைகளில் குறைக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி அரசிடம் சம்பளம் வாங்குவோரைக் குறைக்கும் விதமாக சிறைச்சாலைகள் உட்பட அரச திணைக்களங்கள் பலவும் முகவர் நிறுவனங்கள் மூலம் தனியார்மயமாக்கவும் பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளின் நோக்கம் 'வரி செலுத்துவோர்' மீதான சுமையைக் குறைத்துச் சந்தைச் சக்திகளின் இயக்கத்தை விரிவுபடுத்துவதென்றால் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு பகுதி தொடர்ந்தும் அதிகரித்து வருகிற விகிதத்தில் பொலிசுக்கும் ஆயுதப்படைகட்கும் செலவாவது எவ்வாறு? 1970கட்குப் பின்பாகச் சர்வதேச அளவில இடதுசாரி இயக்கம் பலவீனப்பட்டு வந்ததன் பின்னணியில் குறிப்பாக 1980களில் சோவியத் யூனியன் பலவீனப்பட்டு 1991ல் உடைந்ததன் பின்னணியிலும் தொழிற்சங்க இயக்கத்திற்கு ஒழுங்கு முறையாக குழிபறிக்கப்பட்டதன் பின்னணியிலும் இதிற் பெரும் பகுதி சாதிக்கப்பட்டது.

ஏகாதிபத்தியம் தனது ஆயுதப்படைகளை வலுப்படுத்தியுள்ளதோடு மாத்திரமன்றித் தனது நவகொலனிகளும் தன்னைச் சார்ந்துள்ள அரசுகளும் தங்களது ஆயுதப்படைகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவான நியாயங்களையும் உருவாக்கி வந்துள்ளது. ஆயுத விஸ்தரிப்பின் ஒரு பகுதி பிரதான முதலாளிய நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கியமானதும் செல்வாக்கு மிக்கதுமான ஆயுத உற்பத்தித் துறையின் வளர்ச்சியுடனும் ஆயுத வர்த்தகத்தில் ஒரு வளமான வணிகத்துறை இருந்து வருவதுடனும் சம்பந்தப்பட்டது.

குறைந்தளவு அரசாங்கத்தை வேண்டுகிற நவதாராளவாதிகள் தனியார் உடைமைக்கான உரிமையையும் உற்பத்திச்சாதனங்கள் மீதான தனியார் கட்டுப்பாட்டையும் உற்பத்தி மீதும் விநியோகத்தின் மீதும் வணிகக் கும்பல்களது ஏகபோகத்தையும் பாதுகாக்கிற பொறுப்பைச் சந்தைச் சக்திகளும் பன்னாட்டுக் கம்பனிகளும் வேண்டுவதில்லை. உண்மையில் உள்ளூர எதிர்ப்பைச் சமாளிக்கப் பெரிய கம்பனிகளது தனியார் காவல் அமைப்புக்களும் தனியார் படைகளும் கூலிப்படைகளும் அவர்களது சம்பளப்பட்டியலில் உள்ளன.

என்றாலும் இருக்கிற நிலைமையைப் பேணிக்கொள்வதும் விரிவடைவதற்கான உரிமையைக் காப்பதும் என்று வருகிறபோது அரசு கூடிய பொறுப்பை ஏற்க வேண்டுமென விரும்புகின்றனர். வரி செலுத்துவோர் போர் இயந்திரத்திற்கு மேலுங் கூடிய பங்களிக்க வேண்டுமென விரும்புகின்றனர். இவ்வாறு வர்க்க ஒடுக்குமுறைக்கான இயந்திரம் என்ற வகையிலும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பின் பாதுகாப்பும் முன்னேற்றமும் தொடர்பாகவும் அரசின் பங்கு வலுப்படுகிறது.

எனினும் அரசு இவ் வகிபாகத்தை சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் பாதுகாத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் உலகை மேலும் பாதுகாப்பான இடமாக்கல் அமெரிக்க வாழ்க்கை முறையைப் பாதுகாத்தல் என்பன போன்று அண்மைக் காலங்களில் நாம் அடிக்கடி கேள்விப்படுகிற முகாந்திரங்களின் பேரில் ஏற்றுக்கொள்கிறது.

### ஏகாதிபத்தியத்தின் பதிலாளாக என்.ஜி.ஓக்கள்

கடந்த சில தசாப்தங்களில் நடந்துள்ளது ஏதெனில் அரசியல் யாப்பினதுஞ் சட்டத்தினதும் பேரில் இருக்கிற சமூக அமைப்பைப் பாதுகாப்பதிலும் தேவையான போது அதற்காக வன்முறையைப் பிரயோகிப்பதிலும் அரசின் பங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையாகும். பல தசாப்தங்களாக மக்களுக்கு அரசு ஆற்ற வேண்டிய கடமை என்று கேள்விக்கிடமின்றி ஏற்கப்பட்டவை முக்கியமாகச் சமூக நலனும் அத்தியாவசிய சேவைகளும் ஏறத்தாழ அவற்றின் நிராகரிப்பு எனும் அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளன. இது முதலாளிய ஆக்க நல அரசு எனப்படுவதற்கு முற்றுப்புள்ளியாக அமைகிறது. சமூகத்தின் பெரியதொரு பகுதியினரது நலனையும் இருப்பையும் மிரட்டுமளவுக்குச் சமூக அக்கறைக்குரியவற்றை அரசு கவனிக்கத் தவறுகிறபோது அது சமூக நெருக்கடிக்கும் சமூகக் கிளர்ச்சிக்கும் இட்டுச் செல்லலாம். ஒரு பெரிய அழிவைத் தவிர்க்கிற அளவுக்கு அரசு குறைந்தளவிற் குறுக்கிடலாம். எனினும் மூன்றாமுலகில் இவ்வாறான குறுக்கீடு அதிகரித்து வருகிற அளவில் அரசு சாராத் தரும நிறுவனங்களின் (தருமத்துக்கான என். ஜி. ஓக்கள்) மூலம் நடைபெறுகிறது.

என்.ஜி.ஓக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏகாதிபத்திய நலன்கள் சார்ந்து நிதி பெறுகின்றன. அந்த நிதியைச் செலவிடுகிற விதத்தை முடிவு செய்வதில் முன்னேறிய முதலாளிய நாடுகளின் அரசாங்கங்கட்குப் பெரும் அதிகாரம் உண்டு. வலிமை மிக்க மத நிறுவனங்களால் ஆதரிக்கப்படுகிற தரும அமைப்புக்கள் உள்ளன. கணிசமான அளவு பொது நன்கொடை பெறுபவையும் உள்ளன. அவற்றின் வேலைத்திட்டங்கள் எவ்வாறிருப்பினும் அவற்றின் நடவடிக்கைகள் அரசின் நலன்களுடன் முரண்பாடுமாயின் தமது மனச்சாட்சிப்படி நடப்பதற்கான சுதந்திரம் அவற்றுக்கு இல்லை.




என்.ஜி. ஓக்களுக்கு நிதி வழங்கல் நிபந்தனைக்குட்பட்டதும் குறிப்பான நோக்கங்களை மனதிற் கொண்டதுமாகும். சமூகங்களிடையே என்.ஜி.ஓச் செயற்பாடுகளின் முக்கியமான விளைவுகளில் ஒன்று அச் செயற்பாடுகளால் நன்மையடைவோர் தொடர்ந்தும் என்.ஜி.ஓ. தானதருமத்தில் தங்கியிருக்க நேருவதுடன் அரசிடமிருந்து தமக்கு உரியதைக் கோராமல் வெகுசனங்கள் ஒன்று திரள்வதிலும் வெகுசன அரசியல் நடவடிக்கையிலும் நம்பிக்கை இழந்து போகின்றமையாகும். என்.ஜி.ஓ வேலைத்திட்டத்தின் முக்கியமானதொரு பகுதி மக்களை அரசியல் நீக்கஞ் செய்வதாகும். அதைவிட என்.ஜி.ஓ நிதி வழங்கல் சமூகச் செயற்பாட்டாளர்களையும் அரசியலில் விழிப்புடனும் ஊக்கத்துடனும் இயங்க வேண்டிய ஆய்வறிவாளர்களையுஞ் சீரழிக்கும் தன்மையுடையது. கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் சந்தித்த பின்னடைவுகளால் மனஞ்சோர்ந்த பல இடதுசாரி அரசியல் முனைப்புடைய ஆய்வறிவாளர்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் என்.ஜி.ஓக்களால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதுடன் இப்போது ஸ்தாபனப்படுத்தப்பட்ட இடதுசாரிகட்கு எதிரான ஊக்கமிக்க பிரசாரகர்களாகவும் உள்ளனர்.

மூன்றாமுலக அரசுகள் அத்தியாவசிய சேவைகளை வழங்கத் தவறுவதால் ஏற்படுகிற இடைவெளியை என்.ஜி.ஓக்கள் ஒழுங்குமுறையாகத் தமக்கு வாய்ப்பாக்கிக் கொண்டு சமூக சேவைகளில் குறிப்பாக இயற்கை அனர்த்தங்களின் போதும் மனிதரால் உருவாக்கப்பட்ட அவலங்களின் போதும் சமூக நலன் பேணுகிற அமைப்பு என்கிற வகையில் அரசின் இடத்தைத் தமதாக்கிக் கொள்கின்றனர். மூன்றாமுலக நாடுகள் பலவற்றில் அரசுகளின் பாரபட்சமான அணுகுமுறையும் மனித உரிமைகளின் சீர்குலைவும் இருக்கிற போது பாதிக்கப்பட்ட தரப்பினர் பிற இடங்களில் ஆதரவை நாடுவது இயல்பானது. ஒரு புறம் மூன்றாமுலக நாடுகளைப் பணியச் செய்யும் நோக்கில் அவற்றை உறுதிகுலைக்கிற பணியைச் செய்கிற ஏகாதிபத்தியம் இன்னொரு புறமாக மனிதாபிமான உதவி வழங்கல் என்ற பேரிற் குறுக்கிடுகிறது. சமத்துவமும் சமூக நீதியும் என்ற அடிப்படையில் நிலைக்கக்கூடிய தீர்வுகளை ஏகாதிபத்தியம் பாதகமான முறையிலேயே நோக்குகிறது. தீர்வொன்றைத் திணிப்பதுடன் அதன் நடைமுறைப்படுத்தலின் முகாமையை நேரடியாகவோ ஒரு ஏகாதிபத்திய முகவரியினூடாகவோ தன்வசம் வைத்திருப்பதே பொதுவான ஏகாதிபத்தியப் போக்காக உள்ளது.

மேற்கூறியவாறான அனைத்தையும் கட்டுப்படுத்துகிற ஏகாதிபத்திய அணுகுமுறைக்கு என்.ஜி.ஓக்களின் பங்களிப்பு பெறுமதி மிக்கது. என்.ஜி.ஓக்கள் மூலம் அரசின் வகிபாகத்தைக் குறுக்கித் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்களைப் போலன்றிப் பின் விளைவுகளை எதிர் நோக்கும் தேவையின்றி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நிறுத்தக் கூடியதான என்.ஜி.ஓ 'உதவி' மீது மக்களைத் தங்கியிருக்கச் செய்வது மேற்கூறிய அணுகுமுறைக்கு வசதியானது.

கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னைய சோவியத் ஒன்றிய நாடுகளிலும் இடதுசாரி சார்பான அல்லது ஏகாதிபத்திய விரோதமான அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கு என்.ஜி.ஓக்கள் ஜனநாயகத்தை ஊக்குவித்தல் என்ற பாவனையில் ஒரு அரசியற் பங்களிப்பை வழங்கினர். ஐ.நா. அல்லது நேற்றோவின் பேரில் அல்லது நேரடியாக அமெரிக்காவும் அதற்குப் பணிவான ஒரு கூட்டாளி நாடும் (உதாரணமாக ஈராக்கில் பிரித்தானியா) குறுக்கிடுவதன் விளைவான அரசியல் பொருளாதார நெருக்கடிச் சூழலில் என்.ஜி.ஓக் குறுக்கீடு "மனிதாபிமானக் குறுக்கீட்டின்" வடிவத்தைப் பெறுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களையொத்த என்.ஜி.ஓக்களும் ஏகாதிபத்தியத்தாற் பெரு நன்மை அடைகின்றன என்பதில் ஐயமில்லை. அரசின் வகிபாகத்தைக் குறுக்குகிற நோக்கில் அவற்றின் குறுக்கீடு ஜனநாயகத்திற்குக் குழிபறிக்கிறது. ஆயினும் அரச மருத்துவ சேவையோ சமூக சேவைப் பிரிவுகளோ தனியார்மயமாக்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிற வர்க்கமான முதலாளிய நாடுகளின் இடதுசாரி சார்பு அரசியற் கட்சியினரும் சில போர்க்குணமுடைய இடதுசாரிக் கட்சியினரும் அரசின் பொறுப்பைத் தமவசமாக்குகிற தனியார் நிறுவனங்களின் வேலையை என்.ஜி.ஓக்கள் செய்கிற போது அதை ஏற்றுக்கொள்வது புதினமானது.

என்.ஜி.ஓ அரசியற் செயற்பாட்டின் முக்கியமானதொரு பகுதி மனித உரிமைப் பிரச்சனைகள் பற்றியது. அரசியற் கைதிகளையும் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்ட அல்லது தலைமறைவாக்கப்பட்ட தனிமனிதர்களையும் விடுவிப்பதும் அரசியல் நெருக்குவாரங்குட்பட்ட பத்திரிகையாளர்களதும் அடக்குமுறை ஆட்சிகளால் வாழ்வும் தொழிலும் மிரட்டப்பெறுகிற பிற தனிமனிதர்களதும் நோக்கங்கட்கு ஆதரவளிப்பதும் போன்ற மனித உரிமைப் பணிகட்குப் தாராளமான என்.ஜி.ஓ நிதி உள்ளது. எவ்வாறாயினும் மனிதாபிமான நோக்கங்கட்கான என்.ஜி.ஓ ஆதரவு ஒரு முன்நிபந்தனையுடனேயே வழங்கப்படுகிறது. அதாவது பிரச்சனைகளின் அரசியல் அம்சங்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்காமல் மனித உரிமை, அடிப்படை உரிமை என்பன சார்ந்த அம்சங்கட்கே அழுத்தந் தரப்பட வேண்டும்.

என்.ஜி.ஓக்களின் வகிபாகம் கனடா நாட்டு எழுத்தாளர் ஏவ்ஸ் எங்லர் 2.9.2007 அன்று இஸட்– நெற் என்ற இணையத்தளச் சஞ்சிகையில் வெளியிட்ட "என்.ஜி. ஓக்களும் ஏகாதிபத்தியமும்" எனும் ஆழமான ஆய்வுக் கட்டுரையில் வழங்கியிருந்த ஒரு நையாண்டியான வினாத்தாளில் நேர்த்தியாகச் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. என்.ஜி.ஓக்கள் செயற்படுகிற முறைபற்றிய கொஞ்ச நஞ்ச அறிவும், என்.ஜி.ஓக்கள் எவருடைய நலன்களைச் சார்ந்து நிற்கின்றனர் என்று அறிவதற்குத் தேவையான நேர்மையும் அறிவுக்கூர்மையும் உள்ள எவருக்கும் கேட்கப்பட்ட கேள்விகட்கான விடைகள் வியப்பளிக்கமாட்டாது.

**அயல் விவகாரங்கள் - 501**

**கொண்டு போய் விடையளிக்கக் கூடிய பரீட்சை**

உதவி நிறுவனம் எதற்காகவேணும் பணியாற்றுகிற எவரும் இப்பரீட்சையிற் தேற வேண்டும். "இடது சாரித்" தகுதி பெற வேண்டுவோர் B+ அல்லது உயர்வான சித்தி பெறவேண்டும்.

பின்வருங் கேள்விகளில் மூன்றில் ஒவ்வொன்றுக்கும் விடையாக 500 சொற்கள் எழுதுக.

1. தெரிவு செய்யப்பட்ட தமது அரசாங்கம் குழிபறிப்பிற்குப் பதிலாக "ஜனநாயக ஊக்குவிப்பாற்" கவிழ்க்கப்பட்டால் மக்கள் உண்மையிலேயே கூடிய மன ஆறுதல் உடையோராயிருப்பார்களா?
2. ஒரு நாட்டுக்குப் பேரழிவு ஆயுதங்களை வழங்குவதை "உதவி" என அழைக்கலாமா அல்லது "உடந்தையாகவும் ஒத்தாசையாகவும் இருப்பது" என அழைக்கலாமா?
3. அரசாங்கங்களிடமிருந்தே தனது நிதியிற் பெறுகிற ஒரு அமைப்பு ஏன் அரசு சாரா நிறுவனம் என அழைக்கப்படுகிறது?
4. தனியார் மயமாக்கப்பட்ட மருத்துவ சேவையும் சமூக சேவைகளும் தமது செல்வந்த நாடுகளில் நிகழும் வலதுசாரிச் சதி என்கிற முற்போக்கான மனிதர்கள் ஏன் வறிய நாடுகளில் அரசாங்கம் நடத்துகிற சேவைகளின் இடத்தைப் பிடிக்கிற அமைப்புக்கட்குப் பணம் வழங்குகின்றனர்?
5. மேலை நாட்டு என்.ஜி.ஓக்கள் சில உண்மையிலேயே ஏகாதிபத்தியத்தின் ஒரு கரம் இல்லையா?

எல்லாக் கேள்விகட்கும் விடையெழுதினால் உபகாரப் புள்ளிகள் வழங்கப்படும்.

அடுத்த இதழில் தொடரும்.....

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 8

# தமிழ்த் தேசியத்தின் தொடக்கங்கள்

இலங்கைத் தேசியம் என்ற அடிப்படையில் சிங்கள அரசியல் தலைமைகள் சிந்திக்காத காரணம் அவர்கள் சிங்களத் தேசியத்தின் அல்லது பௌத்த தேசியத்தின் அடிப்படையிற் சிந்தித்தமை அல்ல. அவர்கள் சில மேல்தட்டு சமூக வர்க்கங்களது நலன்களைக் கருதியே சிங்கள இனம், சிங்கள பௌத்தம் என்கிற கோட்பாடுகளை வலியுறுத்தினர் என்பதே உண்மை. அவர்களது அக்கறைகள் யாவும் அந்த மேல் தட்டு வர்க்கங்களதும் அவ் வர்க்கங்களின் பிரதிநிதிகளாகத் தம்மை முன்னிறுத்திய பிரமுகர்களது அரசியல் அதிகார வேட்கையின் விளைவான போட்டா போட்டிகளால் நிருணயிக்கப்பட்டன. 1915 கலவரத்தின் பின்னணியில் சிங்கள சலாகம சாதியினரின் தலைவர்கள் தாங்கள் சிங்களம் பேசினாலும் தாம் சிங்களவர்கள் அல்ல என்று வலியுறுத்தியது கவனிக்கத்தக்கது. அதே சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதிக்குள் தம்மைச் சிங்கள பௌத்த அரசியலில் தீவிர நிலைப்பாடுகட்கு மாற்றிக் கொண்டனர். இது சிங்களபௌத்தம் வலுவான ஒரு அரசியல் சக்தி யாக மீள உருவெடுத்த பின்னர் நடந்தது.

தமிழ் மக்களின் அரசியல், உத்தியோகங்கள் என்பன யாழ் குடாநாட்டைச் சேர்ந்த வேளாளர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சாதியினரின் கைகளிலேயே இருந்தது. அத்துடன் பயிர்ச்செய்கைக்கான நிலம் உட்பட்ட அசையாச் சொத்து பெருமளவும் அச்சாதியினர் வசமே இருந்தது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியின் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்தியவர்கள் இச் சமூகப் பிரிவின் சொத்துடைமைக் காரராகவும் பட்டம் பதவிகளாலும் உயர் மட்டத்திலிருந்தவர்களாவர். கொழும்பு கொலனிய இலங்கையின் அரசியல் அதிகார மையமாகவும் வணிகத் தொழிற் துறைகளதும் அரசாங்க உத்தியோகங்களதும் கேந்திரமாயும் இருந்ததினால் வசதிபடைத்த ஆங்கிலம் படித்த தமிழரும் தொழில் நிமித்தம் அங்கு குடியேறினர். சிறு வியாபாரிகள் நாட்டின் பிற பகுதிகளிலும் பரவி வாழ்ந்தனர். அஞ்சல், புகைவண்டிச் சேவைகளிலும் பிரதேச அரச நிருவாக அலுவலகங்களிலும் கல்வித் துறையிலும் நடுதர வர்க்கத் தமிழர் நாட்டின் பல பகுதிகளிலும் பணியாற்றினர். குடாநாட்டுக்கு இவர்களது பொருளாதாரப் பங்களிப்பு முக்கியமானதாயிருந்தது. மலாயா சிங்கப்பூர் ஆகிய கொலனிய நாடுகளில் அரசாங்கத் தொழில் பார்த்தோர் திரும்பி வரும் வரை அங்கிருந்து வந்த பணமும் பின்னர் மீண்டவர்களது ஓய்வூதியமும் குடா நாட்டின் சில பகுதிகளது பொருளாதாரத்தின் குறிப்பிடத் தக்க ஒரு பகுதியாயிற்று. இவ்வாறு குடா நாட்டுக்கு வெளியே உத்தியோகத்தின் மூலமும் சிறு வணிகத்தின் மூலமும் பெறப்பட்ட ஊதியம் யாழ்ப்பாணத்தின் பணப்புழக்கத்திற்கு முக்கிய பங்களித்ததனால், யாழ்ப்பாணப் பொருளாதாரத்தை “மணி ஓடர்” (காசுக்கட்டளை) பொருளாதாரம் என்று கொஞ்சம் ஏளனமாகக் குறிப்பிட்டதில் நியாயம் இருந்தது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் விவசாய உற்பத்தி கடுமையான உடல் உழைப்பின் மீது தங்கியிருந்தது. இந்த உழைப்பின் பெரும் பகுதி நிலவுடைமை உற்பத்தி உறவுகளின் தொடர்ச்சியான சாதிய அடிமை- குடிமை முறையின் மீது தங்கியிருந்தது. இன்னொரு பகுதி நிலமற்ற ஏழை விவசாயிகளின் மீதும் சிறு காணிச் சொந்தக்கார விவசாயிகள் மீதும் தங்கியிருந்தது. புகையிலை வெங்காயம் போன்றன வணிக நோக்கில் பயிரிடப்பட்டன. இவற்றை விடத் உணவுக்கான தோட்டப் பயிரிச் செய்கையும் இருந்தன. மீன்பிடியும் கால் நடை வளர்ப்பும் குடாநாட்டு உணவுத் தேவைகட்குப் போதியளவுக்கு மேலாக விருத்தி பெறவில்லை. குடா நாட்டுக்கு வெளியே குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் மண்வளமும் நீர் வளமும் கூடுதலாக இருந்ததால் தன்நிறைவான ஒரு விவசாயப் பொருளாதாரமும் அதை அண்டிய மீன்பிடி போன்ற தொழில்களும் இருந்தன. கல்வி, அரசாங்க உத்தி யோகம் என்பனவற்றை நாடிச் செல்ல வேண்டிய தேவை குறைவாக இருந்தது போக அதற்கான ஒரு சமூகச் சூழ் நிலையும் உருவாக்கப்படவில்லை.

ஆங்கிலம் படித்த வசதிபடைத்த குடும்பங்க ளைச் சேர்ந்தவர்களே கொலனிய நிருவாகத்தி லும் அரசியலிலும் பங்குபற்றுகிற சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் குடா நாட்டுச் சைவ வேளாள மேட்டுக்குடிகளாகவே இருந்தனர். உத்தியோகத் துறையில் புரட்டஸ்தாந்து கிறிஸ்துவ வேளாளருக்குச் செல்வாக்கு இருந்த போதும் அரசியலில் ஆதிக்கங் செலுத்தக் கூடியளவுக்கு எண்ணிக்கை வலிமை கிறிஸ்துவர்கட்கு இருக்கவில்லை.

எனவே தமிழ்த் தலைவர்கள் என்போர் ஒரு வசதிபடைத்த பிரிவினராக மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட சாதியடையாளத்தையும் பிரதேச அடையாளத்தையும் கணிசமான அளவுக்கு ஒரு மத அடையாளத்தையுங் கொண்டிருந்தனர். இந்தச் சிறுபான்மையின் நலன்களிலேயே அன்றை தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டோரது அக்கறைகள் குவிந்திருந்தன. சிங்களப் பேரினவாதம் எழுச்சி பெறும் வரை மொழி அடையாளமோ மத அடையாளமோ அரசியலில் முக்கியமானதாக இருந்ததாகக் கூற இயலாது. சாதியும் வர்க்கமும் பட்டம் பதவிகளும் தலைமைத்து வத்திற்கான தகை மையைத் தீர்மானித்தன.

சிங்களத் தேசியவாதத்திலும் இவ்வாறான போக்குகள் இருந்தாலும் வேளாளருக்கு ஈடான கொவிகம சாதியினருடைய அதிகாரத்திற்குச் சவால் விடக் கூடிய விதமாக முதலில் கராவே (மீனவ) சாதியினரும் பின்பு (இந்தியாவிலிருந்து டச்சுக்காரர் காலத்தில் வந்த) சலாகம சாதியினரும் கள்ளிறக்கும் சமூகமான துராவ சமூகத்தினரும் வணிகம் உத்தியோகம் ஆகிய துறைகளில் கொவிகம சாதியினருக்கு ஈடு கொடுத்தது போல தமிழரிடையே நிகழவில்லை.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ்த் தலைமைகளாகத் தம்மை அடையாளப்படுத்திய பொன்னம்பலம் ராமநாதனும் அவரது ஆதரவாளர்களும் யாழ்ப்பாணச் சைவ வேளாள மேட்டுக் குடிகளின் ஆதரவின் அடிப்படையிலேயே தம்மை நிலை நிறுத்த முடிந்தது. அவர்களது தமிழ் அடையாளம் என்பது தமிழ்ப் பேசும் மக்களின் எண்ணிக்கையைச் காட்டித் தங்களுக்கு அரச அதிகாரத்தில் பங்கு கேட்கிறதில் முக்கியமாயிருந்தது. ஆனால் அதன் மூலம் கிடைக்கக் கூடிய சமூக நலன்களை முழுத் தமிழ்ப் பேசும் சமூகத்தினதும் விருத்திக்காகப் பயன்படுத்தக் கூடியளவுக்கு அவர்களது பார்வை விரிவடையவும் இல்லை. அவ்வாறு விரிவடைவது அவர்களது தனிப்பட்ட நலன்கட்கோ அவர்கள் சார்ந்த சாதி- வர்க்க நலன்கட்கோ ஏற்புடையதாக அமையவுமில்லை.

பொன்னம்பலம் ராமநாதனைத் தமிழ்த் தேசிய அரசியலின் மூலவராகவும் ஆறுமுக நாவலரை அவரது வழிகாட்டியாகவும் தமிழ்த் தேசியத்தின் தொடக்கப் புள்ளியாகவும் கொள்கிறவர்கள் ராமநாதனின் நிலைப்பாடுகள் சனநாயக மறுப்பானவையாக இருந்தது பற்றிப் பேச விரும்புவதில்லை. ராமநாதன் இலங்கை முழுவதும் பரவியிருந்த தமிழ் மக்களை ஒருமைப்படுத்துவது பற்றியோ பொதுவான தமிழ்த் தேசிய அடையாளத் தை உருவாக்குவதிலோ அக்கறை காட்டினார் என்று கூற முடியாது.

முஸ்லீம்கள் ஒரு தனித்துவமான சமூகம் என்பதையும் அவர்களில் எல்லாரும் இல்லாவிடினும் கணிசமானோர் அராபிய வம்சாவழியினர் என்பதையும் ராமநாதன் கடுமையாக மறுத்தது முஸ்லீம்களைத் தமிழரின் ஒரு பகுதியினர் என்று அரவணைப்பதற்காக அல்ல. மாறாக அவர்கட்கான தனியான பிரதிநிதித்துவத்தை மறுத்துக் கல்வியிற் பின்தங்கிய நிலையில் இருந்த அவர்களின் பேரிலும் தனது குறுகிய சமூக வட்டத்தின் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துதற்கே தான்.

முஸ்லீம்கள் தமிழையே வீட்டு மொழியாகக் கொண்டோர். அவர்களைத் தமிழருடன் ஒரு பகுதியினராக்குவதற்கான முயற்சிகள் “தமிழ்ப் பேசும் மக்கள்” என்ற பேரில் 1949ல் தமிழரசுக்கட்சியால் முன்னெடுக்கப்பட்டதற்கும் ராமநாதனின் திமிர்த்தனமான மறுப்புக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு உண்டு.

ராமநாதனின் தமிழ் அடையாளம் ஒரு புறம் முஸ்லீம்களின் தனித்துவத்தை மறுத்தது. மறுபுறம் கிழக்கு மாகாணம், வன்னி வடமேல் மாகாணத்தின் கரையை அண்டிய பகுதியில் வாழ்ந்த பலவேறு தமிழ்ப் பேசும் சமூகங்கள் பற்றிய ஆழமான அக்கறையையோ அச் சமூகங்களை எவ்வாறு ஒரு தமிழ் அடையாளத்தினுள் ஒன்றுபடுத்துவது என்ற பார்வையையோ கொண்டிருந்ததில்லை. மலையகம் பற்றி ராமநாதனுக்குக் குறிப்பிடத்தக்க அக்கறை இருந்ததாகக் கூறவும் இயலாது.

ராமநாதனும் அவரோடு ஒட்டி நின்ற தமிழ்த்தலைவர்களும் தமது வர்க்க, சாதிய பிரதேச அடையாளங் கொண்டவர்களது நலன்களைக் கூசாமல் வெளிப்படுத்த வசதியாகவே அவர்களது பழமை வாதமும் சைவ- வேளாள மரபு பேணலும் அமைந்திருந்தன. 1915 வரை சிங்களத் தேசிய வாதத்து டன் முரண் பாடின்றி முஸ்லீம்கட்கெதிராகக் கலகஞ் செய்த சிங்கள இன வாதிகளை விடுதலை செய்யுமாறு கொலனிய ஆட்சியாளர்களின் மனதை மாற்றிய ராமநாதன் 1915க்குப் பிறகு வலுப் பெற்று வந்த சிங்களப் பேரினவாதத் தலைமை தன்னையும் ஓரங்கட்டுகிற நிலைமையை 1921ல் தெளிவாக உணர்ந்த பின்பு தமிழ் இன அடிப்படையில் தனது அரசியற் கருத்துக்களை வெளிப்படையாகவே முன்வைத்தார். அவர் கண்ட சிங்கள- தமிழ் முரண்பாடு இரு சமூகங்களது மேட்டுக்குடி களிடையிலான முரண்பாடகவே இருந்தது.

ராமநாதனின் தமிழ் இன உணர்வு தமிழ்பேசும் சகல மக்களதும் நலன்சார்ந்தோ தமிழர் என்று கூறப்படுகிற மலையக வடக்கு- கிழக்குத் தமிழர் அனைவரையும் அடையாளப்படுத்தியோ வடக்கு- கிழக்கின் தமிழரை ஒன்றுபடுத்துகிற நோக்கிலோ கூட அமைந்ததில்லை. இன்னுஞ் சொல்லப் போனால் வடக்கினதோ, குடாநாட்டினதோ தமிழர் அனைவரதும் நலன்பற்றியது என்று கூட அதைகூற இயலாதளவுக்குப் பொன்னம்பலம் ராமநாதனதும் அவரது ஆதரவாளர்களதும் அரசியல் வர்க்க, சாதிய, பிரதேச நலன்களிலும் பழமைவாதச் சிந்தனையிலும் ஊறிப் போயிருந்தது.

**அன்றைய யாழ்ப்பாணப் பொருளாதாரத்தை மணிஓடர் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்டதில் நியாயம் இருந்தது. பொன்னம்பலம் இராமநாதன் சைவ வேளாள மேட்டுக்குடிகளின் சாதிய வர்க்க நலன்களையையே பிரதிபலித்து நின்றார்.**

தமிழ் அரசியல் தலைவர்களில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் குறிப்பிடத்தக்க ஒரு மனிதாபிமான முற்போக்கான சிந்தனையாளராக இருந்த பொன்னம்பலம் அருணாசலம் பல வகைகளிலும் விதிவிலக்கான ஒரு மனிதராக இருந்தார். இலங்கையின் முதன்மையான தேசியவாதி எனச் சொல்லக் கூடிய அவரும் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியாலும் பேரினவாதத் தலைமையின் வஞ்சகத்தாலும் 1921ல் விரக்தியடைந்தார். எனினும் அவரால் அவரது சகோதரது குறுகிய சமூகப் பார்வையை என்றுமே வரித்துக்கொள்ள இயலவில்லை. அவரது அரசியற் பங்களிப்பைப் பின்னர் வரவுள்ள. பகுதிகளில் கவனிப்போம்.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசிய அரசியல் என்பது மேற்தட்டு வர்க்க நலன்கள் சார்ந்தும் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியினது பாதிப்பால் அதற்கு எதிர்வினையாக உருவான ஒன்று என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம்.

வளரும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை இந்தியாவின் மாநிலமாகுமா?

இந்த நாட்டின் அரசியற் தலைமை நாட்டை படிப்படியாக அன்னிய நாடுகளின் கைகளுக்குள் தள்ளிய வண்ணமுள்ளது. தினமொன்றிற்கு போருக்கென 58 கோடி ரூபாய் செலவிடும் அரசு அன்றாட செலவுகளைச் சமாளிப்பதற்காக அன்னிய கடன்களையும், உதவிகளையும் பெற்றுக் கொண்டு வருகிறது. உதவிகளை வழங்கும் போது நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய வாதிகளைப் பொறுத்தமட்டில் இந்திய உதவிகளையும் ஊடுருவல்களையும் கண்டும் காணாத மாதிரியே நடந்த கொள்கிறது. அவர்களின் கண்ணுக்கு சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளினாலேயே இலங்கை அரசு தமிழ் மக்களை அடக்கியாள்வதற்கு வசதிகள் செய்து கொடுப்பதாகப் பிரச்சாரம் செய்கிறது. இந்தியாவின் உதவிகள் பற்றியோ இந்திய ஊடுருவல் பற்றியோ அடக்கியே வாசிக்கிறார்கள். இந்தியா தனது நாட்டின் நலன் கருதி சிக்கிம் நாட்டை ஒரு மாநிலமாக்கியதை அவர்களால் கண்டிக்க முடியவில்லை.

இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களே அதிகம் என்பது எமது கணிப்பு. இலங்கையை இந்தியாவின் ஒரு மாநிலமாக்கும் முயற்சியில் படிப்படியாக இந்தியா எடுத்து வருகிறது.

1971ல் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது இந்திய விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. 1987ல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகும் போது இந்தியப் படைகள் இங்கு வந்திறங்கின. 13வது திருத்தச் சட்டமும் இந்தியாவினாலேயே பலவந்தமாகத் திணிக்கப்பட்டது.

20 வருடங்களின் பின் 13வது திருத்தச் சட்டத்தை அமுல் நடத்த ஜனாதிபதி முன்வந்ததும் தற் செயலானதல்ல. பொலீஸ் அதிகாரம் காணிப் பங்கீடு பற்றிய விதிகளை அமுல் நடத்தாமல் இழுத்தடித்து ஏனைய ஏற்பாடுகளை அரசு அமுல் நடத்தப்போவதாகக் கூறுகிறது.

இந்தச் சூழலில் இந்தியா படிப்படியாக எமது பொருளாதாரத்தில் தனது ஆதிக்கத்தினை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது. அவற்றின் முக்கிய துறைகள் சிலவற்றை நாம் அவதானிக்கலாம்.

இலங்கையில் ஐ சீ ஐ சீ ஐ (ICICI) என்ற இந்திய வங்கி செயற்பட்டு வருகிறது. இந்தியாவின் மிகப் பெரிய தனியார் வங்கி இதுவாகும். 2007 டிசம்பரில் இந்த வங்கியின் சொத்து 9600 கோடி டொலராகும். உள்ளூர் ஸ்தாபனங்களுடன இந்த வங்கி பல ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இந்திய ஓயில் கம்பனி ஏற்கனவே திருகோணமலையில் எண்ணெய்க்குதங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. இப்போது இலங்கை மின்சாரசபைக்கு இந்திய ஓயில் கம்பனி எரிபொருள் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இலங்கை மின்சார சபையினருடன் கூட்டு ஒப்பந்த மொன்றில் இந்தியா ஈடுபட்டுள்ளது. திருகோணமலையில் 500 மெகாவாட் மின்சாரத்தை நிலக்கரியைப் பயன்படுத்தி பெறப்படவுள்ளது. இதில் இந்தியா 25 கோடி டொலர்களை முதலீடு செய்யும். நிலக்கரியை இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யவேண்டும். இந்த மின் நிலையம் அதன் நிலக்கரித் தேவையை என்றென்றும் இந்தியாவிடமிருந்தே பெற வேண்டிய நிர்ப்பந்த சூழ் நிலை. தென்இந்தியாவிலிருந்து மின்சாரத்தை மன்னார வளைகுடாவூடாக இலங்கை பெற்றுக் கொள்ளும் முயற்சி இடம் பெறுகிறது.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச இந்தியாவுக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடாத்தினார். மின்சாரம் பெறுவது தொடர்பாக மின்வலு அமைச்சர் பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல் பாதுகாப்புச் செயலாளர் பேச்சுவார்த்தைக்குச் சென்றதில் இருந்து இந்தத் திட்டத்தின் இராணுவ முக்கியத்துவம் புரிகிறது.

பாக்கு நீரிணையில் இந்தியக் கடற்படை கரையோர பாதுகாப்பு படையினரின் சுற்றிவளைப்பு புலிகளின் கடல்சார் நடவடிக்கையை கண்காணிக்கும் நோக்குடையது.

இலங்கையின இராணுவ புலனாய்வு மையத்தின அதிகாரிகளுக்கு மகாராஸ்ரம் மாநிலத்தில உள்ள பூனா நகரில் அமைந்துள்ள இந்திய புலனாய்வு மையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை புனரமைத்து செயற்படுத்தும் முயற்சியில் இந்தியாவின் பிர்லா கம்பனியினர் ஏற்கனவே கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவில கையடக்கத்தொலைபேசி வர்த்தகத்தில் மிகப் பாரிய பங்கு வகிக்கும் பாரதி ஏயர்ரெல் நிறுவனம் இலங்கையில் அதன் நடவடிக்கையில் ஈடுபடும் ஐந்தாவது கம்பனியாக விளங்குகிறது. இலங்கையில் தனது செயற்பாட்டிற்கான உத்தரவுப் பத்திரத்தை சென்ற வருட நடுப்பகுதியில் அது பெற்றுள்ளது. ஏற்கனவே இலங்கையில முற்கொடுப்பனவு பிற் கொடுப்பனவு கட்டணங்கள் இந்தியாவைவிட குறைவான தாயுள்ளதாக ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

பாரதி ஏயர்ரெல் சென்ற வருடம் நாற்பது இலட்சம் டொலர் கேள்வி கோரலில போட்டியிட்டது. இதனுடன் ஒன்பது நிறுவனங்கள் போட்டியிட்ட போதும் அதில பாரதி ஏயர்ரெல் வெற்றி பெற்றது. இந்த நிறுவனம் முதல் வருட நடவடிக்கையின் போது பதினைந்து கோடி டொலர்களை முதலீடு செய்யவுள்ளது. 2008 முற்பகுதியில் அது செயற்படவுள்ளது.

இலங்கையில கமார இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் உள்ளனர். இலங்கையில அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து பாடநூல்களை எழுதும் பொறுப்பு ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அண்மையில் முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டிற்கான பாடப்புத்தங்களை எழுதும் வேலையை இந்தியாவிடம ஒப்படைத்துள்ளதாக அறிய முடிகிறது. ஆரம்ப பாட நூல்களை எழுதுவதற்கு நம்நாட்டு ஆசிரியர்கள் தகுதியற்றவர்களாகி விட்டனரா? அது மட்டுமல்ல சில ஆசிரியர்களை இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சி வழங்கப்போகிறார்களாம். தகவல் தொழில் நுட்பம் தொடர்பாக இலங்கையைப் பயிற்றுவிக்க பெரிய அளவிலான திட்டம் தீட்டப்படுகிறது. இது தொடர்பாக பங்களூரில் இடம்பெறும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

கொழும்பில் மிக உயரமான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு இங்குள்ள இந்திய நிறுவனங்களினூடாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இலங்கை இந்திய வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இந்தியாவே அதிக நன்மை அடைகிறது. இன்று நாட்டில் இந்திய உற்பத்திப் பொருட்கள் அதிகமாகக் காணப்படுகிறது. இந்திய உற்பத்திப் பண்டங்களின் விலை குறைவானது என்பது உண்மையென்ற போதும் மொத்தத்தில யார நன்மையடைகிறார்கள் என்பதே இங்கு கவனிக்க வேண்டியது.

இவற்றையெல்லாம் உற்று நோக்கும் போது இலங்கை வேகமாக இந்தியாவின் ஒரு மாநிலமாகும் அல்லது கொலனியாகும் அபாயத்திற்குள் வீழ்ந்து வருகின்றது. பொருளாதார அரசியல் பண்பாட்டுத் தளங்களில் இந்தியா வேகமாக ஊடுருவி வருகின்றது. அரசாங்க உயர்மட்டங்களிலும் அரசியல் தலைமைகளிலும் இந்தியச் செல்வாக்கு உட்சென்று பாய்ந்து வருகிறது. பண்பாட்டுத் தளங்களில் கலை இலக்கிய மற்றும் சமய சமூக நிறுவனங்கள் ஊடுருவி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. இவற்றுக்கு நிதானமாகவும் தூர நோக்கிலும் முகம் கொடுத்து முன்னேறக் கூடிய மக்கள் எதிர்ப்பு இயக்கமே தேவையானதாகும்.

**ஞானகரன**

# முதுமையிலும் மாக்சிச நம்பிக்கை தளராத தோழர். மு. கந்தப்பிள்ளை

வடபுலத்து மாக்சிச லெனினிச இயக்க வரலாற்றில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றும் முன்னணியில இருந்து வந்துள்ளனர். இதனைச் சரியாகக் கணிப்பிட முடியாத சில நான்கு சுவர் தேசியவாதப் பேராசிரியர்கள் பலமையாளர்கள் ஆய்வாளர்கள் என்போர் தவறான கணிப்பீடுகளை கருத்துக்களாக்கி உள்ளனர். அதாவது வடபுலத்தில் மாக்சிசம் புத்திஜீவிகள் மட்டத்திற்கு அப்பால் செலல வில்லை என்று கூறி இருக்கிறார்கள். ஆனால வடபுலத்தில் மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைமையில் தொழிலாளர் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் பல நிலைப்பட்ட போராட்டங்கள் புரட்சிகரமானவையாக இடம் பெற்று வந்துள்ளமை வரலாறாகும். அவற்றின் இயங்கு சக்தியாக இருந்தவர்கள் தொழிலாளர்கள் விவசாயிகளாவர். கட்சி உறுப்பினர்களாக இருந்து பல போராட்டங்களில் கலந்து கொண்ட அத் தோழர்கள் இன்று முதுமையடைந்த நிலையில் தமது புரட்சிகர நினைவுகளுடன் மட்டுமன்றி மாக்சிசம் லெனினிசம் வெற்றி பெறும் என்ற தளராத நம்பிக்கையுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தகையவர்களில் ஒருவர் 80 வயதை அடைந்துள்ள தோழர் முருகுப்பிள்ளை கந்தப்பிள்ளை. வடபுலத்தின் வலி வடக்கு காங்கேசன்துறைக்கும் மயிலிட்டிக்கும் இடைப்பட்ட தையிட்டிக் கிராமத்தில் வடபுலத்து சாதியப்படி நிலைச் சமூகத்தில் "உயர் சாதி" எனக் கூறப்படும் சிறு நில விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் தோழர் கந்தப்பிள்ளை. ஆரம்ப நடு நிலைக் கல்வி கற்ற அவர் விவசாயத்தில் ஈடுபடலாயினர். இளமைக்காலத்தில் தன்னைச் சூழவுள்ள சமூகச் சூழலை உற்று நோக்கிய அவர் பாடுபட்டு உழைத்தும் திருப்தியான வாழ்வை விவசாயிகளும் தொழிலாளர்களும் வாழ முடியாத நிலை ஏன் என்ற கேள்விகளை எழுப்பி விடைதேட முற்பட்டார். அவரது பெற்றோருக்கு சிறு அளவிலான சொந்த நிலம் வீடு என்பன இருந்தன. அந்நிலம் வளம் உள்ள செம்மண் பிரதேசத்தைச் சேர்ந்ததாகும். அதனால் கடும் உழைப்பைக் கொடுத்து விவசாயத்தில் ஈடுபட்டும் வந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கமும் மாக்சிசத்தின் மீதும் கவனத்தைத் திருப்பிக் கொள்ள இளமைக் கால வாழ்வில் இடம் பெற்ற சம்பவங்கள் சிலவற்றை நினைவு கூர்ந்தார். ஒரு முறை தமது தோட்டத் தில் வேலை செய்து கொண்டிருந்த கூலி விவசாயிகளான இளம் பெண்கள் தாகம் மேலிட்டால் தமக்கு கிணற்றிலிருந்து நீர் எடுத்து கையில் ஊற்றிக் குடிக்கத் தரும்படி கேட்டனர். தமது தாய் அவ்வாறு கிணற்றிலிருந்து வாளியால் நீர் எடுத்து அவர்களது கைகளில படாதவாறு தாகத்திற்கு நீர் ஊற்றிய செயல் தனது சிந்தனையில் அதிர்வையும் கேள்விகளையும் எழுப்பியதாகவும் கூறுகிறார். மனிதர்கள் சாதி வர்க்கம் என பலவற்றால உயர்வு தாழ்வுகளுக்கு உள்ளாக்கப்படும் அநீதிக்கும் அவலத்திற்கும் முடிவு காணப்பட வேண்டும் என்பதை தனது சமூகப் நோக்கில எடுத்துக் கொண்டதாகவும் அதன் காரணமாகவே கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து மாக்சிச லெனினிசத்தை வரித்துக் கொண்டதாகவும் கூறியிருந்தார்.



தோழர் மு.கந்தப்பிள்ளைக்கு புரட்சிகர கௌரவம் வழங்கப்படுகின்றது. தோழர்கள் எஸ். நவட்ரணம், பா. பசுபதி அருகில் உள்ளனர்.

தோழர் கந்தப்பிள்ளை தையிட்டிக் கிராமத்தில் டாக்டர் சீனிவாசகம் தலைமையிலான கட்சி வேலைகளில் ஈடுபட்டும் வந்தார். பத்திரிகை விநியோகம் நிதி சேகரிப்பு மற்றும் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு வந்ததுடன் வெளியிடங்களில் இடம் பெறும் கூட்டங்கள் ஊர்வலங்களில் எழுச்சிகளில் வெகுஜனப் போராட்டங்களில் ஊக்கமுடன் பங்கு கொள்வதில் தவறமாட்டார்.

1957ல் அவரது கிராமமான தையிட்டியில் அமைந்துள்ள சிவகுருநாத பாடசாலையில் ஆதிக்கம் கொண்ட அநீதியான ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்தும் அன்றைய இந்து சபை முகாமைத்துவத்தை எதிர்த்தும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை மாணவர்கள் பெற்றோர் நடாத்தினர். அக் காலத்தில் இந்துப் போர்ட் இராஜரத்தினம் என்பார் மிகுந்த ஆதிக்கப் போக்குடன் பாடசாலைகளை நிர்வகித்து வந்த ஒருவர். பாடசாலைகள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பே மேற்படி சிவகுருநாத பாடசாலைப் போராட்டம் நடைபெற்றது. பெற்றோர் சங்கம் அமைத்து பொது மக்களால் முன்னெடுக்கப்பட்ட மேற் படி அநீதிக்கெதிரான பகிஷ்கரிப்புப் போராட்டம் 100 நாட்கள் வரை நீடித்தது. இறுதியில் அன்றைய கல்வி அமைச்சர டபிள்யூ தகநாயக்காவின் கவனத்திற்கு இப்போராட்டம் கொண்டு செல்லப்பட்டது. அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத் தோழர்களில் ஒருவரான தோழர சீனிவாசகம் தலைமையில் சென்ற தூதுக்குழு கல்வி அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது. அதில் அன்றைய பருத்தித் துறைப் பாராளுமன்ற கம்யூனிஸ்ட் உறுப்பினர தோழர பொன். கந்தையாவும் கலந்து கொண்டார். அதன் விளைவாக மேற்படி பாடசாலை உடனடியாகவே அரசாங்கம் பொறுப்பேற்று இந்துப் போர்டின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டது. மேற்படி போராட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியே தலைமை கொடுத்து நின்றது. தோழர கந்தப்பிள்ளை மேற்படி பாடசாலைப் போராட்டத்தை வழி நடாத்திய பெற்றோர் சங்கத்தின் பொருளாளராக இருந்து ஏனை யோருடன் இணைந்து செயல்பட்டார்.

தோழர் கந்தப்பிள்ளை அன்றும் சரி இன்றும் சரி தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் பாராளுமன்றப் பிற்போக்குத் தனங்களை மட்டுமன்றி தமிழ் இயக்கங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்களின் தவறான போக்குகளை எதிர்த்தும் வந்த ஒருவர். மக்கள் பங்கு கொள்ளும் வெகுஜனப் போராட்டங்களுக்கும் இளைஞர்கள் முன்னெடுக்கும் வீரதீரப் போராட்டங்களுக்குமிடையில் உள்ள சரிபிழைகளை சுட்டிக் காட்டி வந்த ஒருவராவர். தேசிய ரீதியான பிரச்சினைகளிலும் சர்வதேச நிலைமைகளிலும் தெளிவான கண்ணோட்டங்களை முன்வைத்து மக்கள் மத்தியில் இடையிறாத பிரசாரங்களை முன்னெடுப்பதில் அவர் முன்னின்று வந்த ஒரு தோழராவார்.

அவர் தனது முதுமைக் காலத்திலும் மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை மீதும், கட்சி மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டவராகவே இருந்து வருகிறார். 2003ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற புதிய- ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு விழாவில கௌரவிக்கப்பட்ட ஆறு மூத்த கம்யூனிஸ்ட் தோழர்களில் தோழர் கந்தப்பிள்ளையும் ஒருவராவார். மாக்சிச லெனினிசக் கட்சி இயக்கத்திலும் குடும்ப வாழ்விலும் நேர்மையும் நிதானமும் கொண்ட ஒரு தோழராக வாழ்ந்து வந்தவர் தோழர் மு. கந்தப் பிள்ளை. அவர் முதுமையடைந்த நிலையிலும் மாக்சிச லெனினிசத்தின் மீதும் புதிய- ஜனநாயக கட்சியின் மீதும் நம்பிக்கை தளராதவராகவே இருந்து வருகிறார். அவர் உடல் நலத்துடனும் உளப் பலத்துடனும் தொடர்ந்து வாழ கட்சியின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

***சி. கா. செ***

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கொசோவோ சுதந்திர நாடா?

## அமெரிக்க மேற்குலகத் தளமா?

சேர்பியாவிடமிருந்து பிரிந்து சுதந்திர நாடென 2008 பெப்ரவரி 17ம் திகதி கொசோவோ பிரகடனம் செய்தது. இது அடுப்பிலிருந்து நெருப்பிற்குள் விழுந்தது போன்ற நடவடிக்கை என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் தமிழ்த் தேசிய வாதிகளும் தமிழ் ஊடகங்களும் கொசோவோ சுதந்திரப் பிரகடனம் மூலம் தமிழ்த் தரப்பினருக்கு உத்வேகம் கிடைத்திருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இஸ்ரேலைப் போலவே கொசோவோவும் ஏகாதிபத்தியத்தின் நலனுக்காகவும், தேவைக்காகவும் உருவாக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வது தான் முக்கியமாகும். யூகோஷலவியா என்ற நாடு உடைக்கப்பட்டு ஏழு தனித்தனி நாடுகளாகக்கப்பட்டு விட்டது. இது அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் தேவைக்கு உகந்ததாக அவர்களாலேயே திட்ட மிட்டு உருவாக்கப்பட்டது. தமக்குத் தேவையாக இருக்கும் போது நாடுகளைத் துண்டாடுவதும் தமக்குப் பாதகமாக அமையுமானால் பிரிவினைவை மறுப்பதும் ஏகாதிபத்தியவாதிகளது வழமையான நடவடிக்கைகளாக இருந்து வந்துள்ளது. கொசோவோ இன்று நேட்டோ நாடுகளின் ராணுவத் தளமாகிவிட்டது. பொன்ட் ஸ்ரீல் என்ற இடத்தில் 7000 அமெரிக்கப்படையினர் உள்ளனர். இந்த இடத்தை ஐரோப்பாவின் குவான்டானோமோ தளமென சிலர் விமர்சிக்கின்றனர். ஒன்பது மைல் சுற்று வட்டத்தில் 955 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி தளம் அமைக்கப்பட்டு வருகிறது. மலைகளையும் விவசாய நிலங்களையும் மட்டப்படுத்தி 150,000 கீயூபிக் மீட்டர் மண்ணை அப்புறப்படுத்தியுள்ளனர். இந்தப் படை கொசோவோ மக்களின் பாதுகாப்புக்காகவா அல்லது அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளுக்காகவா? என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள்.

2007 நவம்பர் 17ம் திகதி இடம்பெற்ற தேர்தலில் 15 இலட்சம் வாக்காளர்களில் 43 வீதத்தினரே வாக்களித்திருந்தனர். கொசோவோவின் பிரதமர் தனது கட்சிக்கு சனத்தொகையில் 15 வீதவாக்குகளே கிடைத்திருந்த போதும் "கொசோவோவின் பிரஜைகள் உலகிற்கு ஒரு செய்தியை விடுத்துள்ளனர். கொசோவோ சுதந்திரத்திற்கு தயாராகி விட்டனர் என்பதேயாகும்" எனக் கூறியிருந்தார்.

சுதந்திரப் பிரகடனத்தின் போது பிரதமர் தாக்கிஸ் தெரிவித்த கருத்தின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்திருந்தது. "ஜனநாயக ரீதியாக எம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களாகிய நாம் கொசோவோ ஒரு சுதந்திரமான சுயாதிபத்திய நாடெனப் பிரகடனப்படுத்துகிறோம். இந்தப் பிரகடனம் எமது மக்களின் பற்றுறுதியை வெளிப்படுத்துவதுடன் ஐ.நாவின் விசேட பிரதிநிதி மார்ட்டி அதிசாரி கொசோவோவின் தீர்வு சம்பந்தமாக விதந்துரைத்தமைக்கு முழுமையாக உடன்பாடுடையது" என்று கூறி இருந்தார்.

இந்த விசேட பிரதிநிதி மார்ட்டி அதிசாரி முன்னாள் பின்லாந்தின் ஜனாதிபதி. அவரின் சிபார்சுப்படி "மேற்பார்வை" யுடன் கூடிய சுதந்திரம் கொசோவோக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரதமரின் சுதந்திரப் பிரகடனத்தின் 23 பந்திகளில் இந்த மார்ட்டி அதிசாரியின் பெயர் எட்டுத்தடவைகள் பயன்பட்டுத்தப்படுள்ளது. அப்படியாயின் யாரின் விருப்பத்தின் பெயரில் யாருடைய நலன்களுக்காக அங்குள்ள ஒரு பகுதி மக்களின் வாக்குகளைக் கொண்டு கொசோவோ பிரிக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வது அதிக சிரமம் அல்ல.

ஐ.நா. பிரதிநிதி மார்ட்டி அதிசாரியின் கொசோவோ திட்டத்தில் கூறப்பட்டுள்ளதாவது.

1. போட்டியுடன் கூடிய திறந்த பொருளாதார முறை நடைமுறைப்படுத்தப்படும்

2. நிதி தொடர்பாக ஐரோப்பிய நிதியத் சமூகம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் நிதிக் கொள்கை பின்பற்றப்படும்.

3. அரசியல் யாப்பு தயாரிக்கும் பணியில் 21 பேர் இருப்பர். அரசியல் அமைப்பு நீதிமன்றத்தின் 9 நீதிபதிகளுள் மூவர் ஐரோப்பிய நீதிமன்றத்தால் நியமிக்கப்படுவர்.

4. கோசோவோவின் நீதிச் சேவையில் 13 பேர் இருப்பர். அவர்களில் இருவர் சர்வதேச "சமூகத்தால்" நியமிக்கப்பட்டு அவர்களே நீதிபதிகளை நியமிப்பதை மேற்பார்வை செய்வர்.

5. 2500 பேர் மட்டுமே இலகு ரக ஆயுதந் தாங்கிய பாதுகாப்பு படை. இதைவிட 800 பேர் றிசேவ் அங்கத்தவர்கள்.

6. சர்வதேச சிவில் பிரதிநிதி குழுவொன்று பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஐ. ராச்சியம் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஐரோப்பிய ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும்.

7. மேற்கூறிய சர்வதேச சிவில் பிரதிநிதி குழு அதிசாரியின் திட்டம் அமுலாக்கப்படுவதை உறுதி செய்யும். இக்குழு கொசோவோ அதிகாரிகள் உருவாக்கும் சட்டங்களை இரத்துச் செய்யவும் முடியும்.



8. மேற் கூறிய சிவில் பிரதிநிதிகள் குழு கணக்காய்வாளர் நாயகம் சுங்கத் திணைக்கள இயக்குனர் நாயகம், வரித்தி ணைக்கள அதிகாரி, நிதி இயக்குனர், மத்திய வங்கியின் நிர் வாக இயக்குனர் ஆகியவர்களை நேரடியாக நியமிக்கும்.

9. புதிய அரசியல் யாப்பை சர்வதேச சிவில் பிரதிநிதிக்குழுவின் அங்கீகாரமின்றி கொசோவோ மக்கள் சபை நிறைவேற்ற முடியாது.

10. நேட்டோ தலைமையிலான சர்வதேச இராணுவப் பிரசன்னம் தற்போது கொசோவோவில் உள்ள 16000 நேட்டோ படையை உள்வாங்கும்.

இத்தகைய அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது தான் கொசோவோ. அதன் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் யார் கையில் உள்ளது என்பதை ஒரு கணம் சிந்தித்தால் அது ஒரு சுதந்திர நாடா? என்ற கேள்விக்கு விடை கிடைத்து விடும். இன்று சர்வதேச அரங்கில் எண்ணெய் ஒரு முக்கிய பொருளாகிவிட்டது. அது கறுப்புத் தங்கம் என வர்ணிக்கப்படுகிறது. ஈராக் கில் பயங்கர ஆயுதம் இருப்பதாகக் கூறியே அமெரிக்கா அங்கு தலையிட்டது. அங்கு எந்தவித நாசகார ஆயுதமும் இல்லை யென்றதும் ஏன் அமெரிக்க படைகளை வாபஸ் பெறவில்லை? இன்றும் ஈராக்கில் அமெரிக்கர்கள் இருப்பதற்கு காரணம் ஈராக்கிய எண்ணெய் வளத்தைச் சூறையாடுவதற்கேயாகும்.

கொசோவோவில் எண்ணெய் இல்லையென்ற போதும் தெற்கு ஐரோப்பாவில் கேந்திர முக்கியதுவம் வாய்ந்த இடத்தில் கொசோவோ அமைந்திருக்கிறது. அம்போ எண்ணெய்க் குழாய்த் திட்டம் 110 கோடி டொலர் பெறுமதியானது. அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட அல்பேனியன் மசிடோனியன் பல்கேரியன் ஒயில் கோப்பறேசன் எண்ணெய் குழாய் திட்டம் 2011ம் ஆண்டில் செயற்படும். இந்தக் கம்பனி அம்போ (AMBO) என்று சுருக்கமாகக் குறிக்கப் படுகிறது.

இந்த எண்ணெய்க் குழாய் மூலம் கஸ்பியன் எண்ணெய் பல்கேரிய துறை முகமான பர்கன் மூலமாக மசிடோனியாவிற்கும் அங்கிருந்து அல்பே னிய துறைமுகமான லோறாவிற்கும் செலுத்தப்பட்டபின் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் கொண்டு செல்லப்படும். இத் திட்டத்தினால் கஸ்பியன் கடலில் இயங்கும் எண்ணெய்க் கம்பனிகள் தமது எண்ணெயை றொட்டடத்திற்கும் அமெரிக்காவின் கிழக்குகரைக்கும் குறைந்த செலவில் அனுப்ப முடியும். கொள்கலன்களில் எண்ணெய் அனுப்பவதனால் தற்போது ஏற்படும் பல சிக்கல்கள் இந்த குழாய் திட்டத்தினால் தீர்க்கப்படும்.

2000 ஆண்டிலேயே அமெரிக்கா ஏற்கனவே 1996ல் மேற் கொண்ட எண்ணெய்க்குளாய் ஆய்வினை மீள வடிவமைத்து திட்டமிட்டது. 2000ம் ஆண்டு மே மாதத்தில் அமெரிக்க வர்த்தக ஏஜன்சியின் தகவலின் படி இந்தக் குழாய் மூலம் அமெரிக்க சந்தைக்கு மாதந்தோறும் 60 கோடி டொலர் பெறுமதியான எண்ணெய் கிடைக்கும். இன்றைய எண்ணெய் விலையைக் கணக்கிலெடுத்தால் இதைவிடக் கூடுதல் பெறுமதியான எண்ணெய் அமெரிக்காவிற்கு செல்லும். இந்த அம்போ- (AMBO) கம்பனிக்கும் அமெரிக்க ஆட்சியாளருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அமெரிக்க உப ஜனாதிபதி டிக்செனியின் கம்பனியான ஹலிபேர்டன் எனேஜியின் பிருத்தானிய உப கம்பனியே இந்தத் திட்டத்தில் செயற்பாட்டு அறிக்கையைத் தயாரித்தது. இந்த அம்போ கம்பனியில் முன்னாள் ஜனாதிபதி கிளிங்டனுக்கும் பங்குண்டு.

மேற்குறிப்பிட்ட ஹலிபேர்டன் கம்பனி கொசோவோவில் "பொன்ட்ஸ் ரீல்" அமெரிக்கத் தளத்தைக் கட்டும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. இது வியட்நாம் யுத்தத்தின் பின் அமெரிக்காவினால் நாட்டிற்கு வெளியே நிறுவப்படும் பெரிய யுத்த தளமாகும். 1999ல் யூகோஸ்ஸலேவியாவில் அமெரிக்கா குண்டு பொழிந்தது இந்த எண்ணெய்க் குழாய் திட்டத்தின் பாதுகாப்பு கருதியேயாகும்.

காம்ப் பொன்ட்ஸ்ரீல் அமெரிக்க தளத்தில் கொசோவோவின் மிகப்பெரிய சிறைக் கூடம் உள்ளது. இங்குள்ள கைதிகள் விசாரணையின்றியும் சட்டவிரோதமாகவும் வெளித்தொடர்பு மின்றி குவான்டனாமோ தளம் போன்று தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். மேற்கூறப்பட்டவை கொசோவோபற்றிய மறுபக்கமாகும். இவற்றை நமது தமிழ் ஊடகங்கள் கண்டு கொள்வதும் இல்லை. பிரசுரிப்பதும் இல்லை.


சேர்பிய ஒடுக்குமுறையை எதிர்த்து உருவாக்கப்பட்ட கொசோவோ விடுதலை இயக்கம் என்பது விரைவாகவே அமெரிக்காவின் செல்லப் பிள்ளையானது. சேர்பியாவின் கிறிஸ்தவ ஆட்சியை நிராகரித்த கொசோவோ முஸ்லீம் மக்கள் இன்று அமெரிக்க கிறிஸ்தவ ஆட்சியின் கீழ் வந்து விட்டனர் என்பது தான் வேடிக்கையானது. இங்கே தான் "தனிநாடு" "பிரிவினை" "விடுதலை" என்பன பற்றிய புரிதல் அவசியமாகும்.

அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாய் இயங்கும் எந்த விடுதலை இய க்கமும் மக்களுக்குரிய உண்மையான விடுதலையைப் பெற முடியா தென்பதை கொசோவோ எமக்கு உணர்த்துகிறது.

அதேபோன்று இனஒடுக்கு முறையை ஏவிக் கொள்ளும் பெருந் தேசி யவாதிகளுக்கும் கொசோவோ வின் அண்மைய படிப்பினைகள் படிக்க வேண்டிய பல பாடங்களைத் தந் துள்ளது.

-சிறி-

# படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன்



கடந்த மார்ச் ஆறாம் திகதி அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசன் ஓமந்தைக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட கனகராயன் குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது வாகனச் சாரதியும் இத் தாக்குதலில் உயிரிழந்தார்.

2004ம் ஆண்டு தெரிவசெய்யப்பட்ட தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஏற்கனவே கிழக்கின் யோசவ் பரராசசிங்கமும் வடக்கின் ந. ரவிராஜ்சும் படுகொலை செய்யப்பட்டனர். இப்பொழுது வடக்கின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான கி. சிவநேசன் கொல்லப்பட்டுள்ளார். இலங்கையில் பொதுவாகவும் வடக்கு கிழக்கில் குறிப்பாகவும் படுகொலைக் கலாச்சாரம் செழித்து வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு பங்களித்தவர்கள் சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கத்தினர் மட்டுமன்றி ஆயுதம் தூக்கிய அனைத்து தமிழர் இயக்கங்களும் தான் என்பதையும் இவ்வேளை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

கொல்லப்பட்ட கிட்டினன் சிவநேசன் வடபுலத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் கரவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் கரவெட்டியின் ஆண்ட பரம்பரையில் இருந்து வந்த ஒருவர் அல்லர். அவர் ஆளப்பட்ட பரம்பரையின் கரவெட்டி கிழக்கின் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். கரவெட்டி கிழக்கு வளர்மதிக் கிராமம் (வளர்மதி சனசமூக நிலையம்) நீண்டகால சாதிய தீண்டாமைக் கொடுமைகளால் அடக்கப்பட்டு வந்த ஒரு கிராம

தொடர்ச்சி 15ம் பக்கம்.........

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# குடாநாட்டுத் துயரங்கள்!

இன்றைய குடாநாடு விபரிக்க முடியாத பன்முக நெருக்கடிகளுக்குள் இருந்து வருகிறது. ராணுவ நிர்வாகமே சகலவற்றையும் தீர்மானிக்கின்றது. ராணுவம் எடுக்கும் முடிகளின் படியே சிவில் நிர்வாகம் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலை அங்கு நீடிக்கிறது. இந் நிலையில் அங்கு பிரச்சினைகள் எதுவும் இல்லாத இயல்பு வாழ்வு இடம் பெற்று வருவதாகக் கூற முற்பட்டால் அது ஒரு சுத்த ஏமாற்று என்றே கூறுதல் வேண்டும்.

நாட்டில் பொருட்களின் விலைகள் எட்டமுடியாத உயரத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. "நாட்டுக்கு ஒரு மழை நமக்கு இரண்டு மழை" என்ற முதுமொழி போன்றே அங்கு



பொருட்களின் விலைகள் உச்சத்தில் விற்கப்படுகின்றன. அதிக விலை, பதுக்கல், கள்ளச் சந்தை, தரமற்ற பொருட்களின் விநியோகம், உற்பத்தி- சந்தைப்படுத்தலின் சீரின்மை போன்ற பலவேறு நானாந்த நெருக்கடிகளால் மக்கள் அல்லலுற்றவண்ணம் உள்ளனர்.

விவசாயிகள் மீனவர்கள் பலவேறு ராணுவக் கெடுபிடிகளால் தமது விவசாய உற்பத்திகளையும் மீன் பிடித்தலையும் செய்ய முடியாது திண்டாடுகின்றனர். தத்தமது தொழில்களைத் தொடர முடியாமலும் கைவிட முடியாமலும் பெருமூச்சு வாழ்வே நடாத்தி வருகிறார்கள். அற்ப சொற்ப உற்பத்திக்கும் மீன் பிடித்தலுக்கும் எரிபொருள் மற்றும் பசளை கிருமிநாசினி மற்றும் உபகரணங்களை வாங்குவதில் சிரமங்களுக்கு மேல் சிரமங்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

மேலும் மாதச் சம்பளம் பெறும் அரசாங்க தனியார் துறைகளில் பணியாற்றுவோர் தமக்கு கிடைக்கும் மட்டுமட்டான சம்பளத்தை வைத்து வாழ முடியாது கடனிலும் வட்டியிலும் காலத்தைக் கழிக்க வேண்டியே உள்ளது. இந் நிலையில் குடாநாட்டு மக்கள் பல நிலைகளிலும் இல்லாமை வறுமை தட்டுப்பாடு பற்றாக்குறை கை மாறுதல் போன்றவற்றுடன் தான் வாழ்ந்து வருகிறார்கள்.

அதேவேளை குடாநாட்டின் பணப்புழக்கத்திற்கு புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து உறவுகள் அனுப்பும் பணமே முக்கிய காரணமாக இருக்கிறது. இப்பணச் சுழற்சியானது 'புலவுக்கும் அங்கே பொசியுமாம்' என்பது போன்று அன்றாடத் தொழில் செய்து வாழ்வோருக்கும் சிறு ஆதாரமாய் உள்ளது. இது நிரந்தரமும் அல்ல போதுமானதுமல்ல. அதேவேளை இப்புலப்பெயர்வால் வரும் பணம் அநாவசியமான வழிகளிலும் ஆடம்பரத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்ற விநோதங்களும் இடம் பெறுகின்றன. ஏனையவர்கள் எப்படியாவது கெட்டு நொந்து வழியற்று வாழ்ந்து விட்டுப் போகட்டும் நாம் நமது கௌரவம் அந்தஸ்து பணத்திமிர் போன்ற போலித்தனங்களை கைவிட முடியாது என்ற நிலையில் யாழ்ப்பாண மேட்டுக்குடி சிந்தனைக்கு உட்பட்டு கருமங்களைச் செய்து வருவோரையும் காணமுடிகிறது. இந்த யாழ்ப்பாணப் பழைமைவாதச் சடங்கு சம்பிரதாயம் சுயநல சிந்தனை போன்றன பணம் யாரிடம் வருகிறதோ அங்கெல்லாம் கோலோச்சவே செய்கின்றது. சூழல் தான் மனித சிந்தனையை வழிநடத்துகிறது என்பதற்கு இணங்க பணம் சொத்து தான் பெரும்பாலோனோரின் சிந்தனையை வழி நடாத்துகின்றது.

மேற கூறிய நிலை ஒரு குறிப்பிட்ட தொகையினரிடம் காணப்படும் அதேவேளை ஏகப் பெரும்பான்மையான குடாநாட்டு மக்கள் சகல வழிகளிலும் துன்பதுயரங்கள் இரத்தம் கண்ணீர் அச்சம் பீதி என்பனவற்றுடன் தான் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு உயிர் வாழும் சுதந்திரமோ நடமாடும் சுதந்திரமோ இல்லை என்றால் ஜனநாயம் எங்கே இருக்க முடியும். பொது விடயங்களுக்கே வாய்திறக்க முடியாது என்றால் அரசியல் என்றால் அது பேசுவதற்கோ செய்வதற்கோ அன்றி சாவதற்குரிய ஒன்றாகவே மக்களால் கணிக்கப்பட்டுள்ளது. ஏன் வீணாக அரசியல் சரிபிழை பேசி சாவை வரவழைக்க வேண்டும் என்ற அச்சத்திலேயே மக்கள் அரசியல் அபிப்பிராயம் பேசுவதை முற்றாகத் தவிர்த்து வருகிறார்கள். இவ் ஆபத்து ஒரு புறத்திலிருந்து மட்டும் வருவதாக அன்றி ஆயுதம் தூக்கிய அனைவராலும் நடைமுறைப்படுத்தப்படும் "அரசியல் கலாசாரமாகவே" முன்பும் இருந்தது இன்றும் தொடர்கிறது.

அத்துடன் குடாநாட்டிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு வருவதாயின் நரகவேதனை அனுபவித்தே வந்து சேர வேண்டும். திருகோணமலைக்கு கப்பலில் வந்தும் கொழும்பு இரதமலானைக்கு விமானத்தின் மூலமும் பயணம் செய்ய வேண்டும். இவ் இரு வழிகளால் மட்டுமே வெளியிடங்களுக்குப் பயணிக்க முடியும். இவ்வாறான பயணத்திற்கு பயண அனுமதி பெறுதல் என்பது அலைச்சலும் உளைச்சலும் கொண்டதாகும். கப்பல் கட்டணம் ரூபா 3500/= விமானக் கட்டணம் ஒரு வழிக்கு 10000/= இருவழிக்கு 20,000/= ஆகும். இது அப்பட்டமான பகற் கொள்ளையென்றே மக்கள் பேசிக் கொள்கின்றனர். இத்தகைய கப்பல் விமானப் பயணங்கள்



வேண்டாம் வேண்டாம் என்ற அளவுக்கு வெறுத்துக் கொள்ளும் நிலையிலேயே தொடர்கிறது. இது உடல் உள ரீதியில் வடபுலத்து மக்களை வாட்டி வதைத்து நிற்கும் பேரினவாத ஆட்சியாளர்களின் திட்டமிட்ட ஒடுக்கு முறையின் ஒரு பகுதியுமாகும்.

இவையாவற்றையும் நோக்கும் போது குடாநாடு தனிநாடா என்றே எண்ணத் தோன்றுகிறது.

அரசாங்கம் எவ்வளவு தான் பேரினவாத ஒடுக்கு முறையை குடாநாட்டு மக்கள் மீது ஏவி வந்தாலும் அவ்வாறே ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் விடுதலையின் பெயரால் ஆதிக்க அடக்குமுறைகள் புரிந்தாலும் மக்கள் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து வாழ்ந்து வரவே செய்கிறார்கள் என்பது முக்கியமான விடயமாகும். வரலாற்றை எதிர் கொள்பவர்கள் வெறும் தலைவர்கள் அல்ல மக்களே தான் என்பதற்கும் எதிர்காலத்தில் தமது விடுதலைக்குரிய சரியான அரசியல் மார்க்கத்தை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் என்பதற்கும் குடாநாட்டு மக்களின் நிலை குலையாத உறுதி முன்னுதாரணமாகவே காணப்படுகிறது.

**வடபுலத்தான்.**

# சிறுவர்கள் மீது அரசியல் நிர்ப்பந்தங்கள்

அண்மையில் ஜே.வி.பி யினர் நடாத்திய அவர்களது மாணவர் மாநாட்டின் முன்வரிசைகளில் சிறுவர்களும் சீருடை அணிந்த கீழ் வகுப்பு மாணவர்களும் இருக்கக் காணப்பட்டனர். இதனைத் தனியார் தொலைக் காட்சி ஒன்று படம் பிடித்துக் காட்டி ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. சிறுவர்களையும் பாடசாலை மாணவர்களையும் ஜே.வி.பி அரசியலுக்குள் கொண்டு வந்திருப்பது நியாயமானதா? என்பதே சர்ச்சையின் சாராம்சமாகும். இதன் மீது கல்வியாளர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் என்போரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டும் ஒளிபரப்பப்பட்டது. ஜே.வி.பி க்கு மாணவர் மாநாட்டிற்கு ஆள்போதாமையால் ஆசனங்களை நிரப்ப இவ்வாறு செய்து கொண்டதா? அல்லது சிறுவர்களுக்கு தமது பேரினவாத அரசியலைப் போதமூட்ட இவ்வாறு செய்து கொண்டதா? இவ்விடயத்தில் ஜே.வி.பி மட்டுமன்றி ஏனைய அரசியல் வாதிகளும் சிறுவர்களையும் பாடசாலை மாணவர்களையும் அரசாங்க அரசியல் நிகழ்வுகளுக்கு கொண்டு செல்வது தொடர்ந்து இடம் பெற்று வந்ததாகும்.

தமிழ் இயக்கங்களும் தாம் நடாத்தும் ஊர்வலங்கள் கூட்டங்களுக்கு சிறுவர்களையும் பாடசாலை மாணவர்களையும் கட்டாயப் படுத்தி அழைத்துச் செல்வது ஏற்கனவே நடைமுறையாக இருந்தே வந்தது. இதன் அடுத்த கட்டமே ஆயுதப் பயிற்சிக்கும் தத்தமது படைகளுக்கும் சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டமையும் இடம் பெற்று வந்தது. இதில் புலிகள் இயக்கத்தின் மீது கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது. இப்போது கருணா- பிள்ளையானின் தமிழ் மக்கள் வி. புலிகள் இயக்கம் சிறுவர்களைப் படையில் சேர்த்து வருவதாகப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. அவற்றில் உண்மைகள் இல்லாமலில்லை.

இவ்வாறான குற்றச்சாட்டை பெரும் பிரச்சாரமாக தெற்கில் முன்னெடுத்த ஜே.வி.பி இப்போது தனது அரசியலுக்கு சிறுவர்களையும் பாடசாலை மாணவர்களையும் இழுத்து வந்து நிறுத்தியுள்ளமை தான் வேடிக்கை தருவதாக உள்ளது. கல்வி அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர். ஆனால் அமைச்சர்கள் ஜனாதிபதி என்போர் வரும் பாடசாலைக்கு அப்பாலான நிகழ்ச்சிகளின் போது சிறுவர்கள் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ள வைக்கப்படுகிறார்கள். இவர்கள் எல்லோரும் "ஊருக்கல்லோ உபதேசம் உனக்கில்லையே" என்பது போன்று தான் நடந்து கொள்கிறார்கள்.

சிறுவர்களை அரசியலில் பங்கு கொள்ளவைப்பது முறையல்ல. அதிலும் நிர்ப்பந்தித்து அரசியல் நிகழ்வுகளுக்கு கூட்டிச் செல்வது தவறானதாகும். இது பகுத்தாராய்ந்து சரி பிழை என்பனவற்றைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாகவே சிறுவர்களது மூளை மீது வலிந்து அரசியல் கருத்துக்களைத் திணிப்பது தவறானதாகும். இது அரசியலில் மட்டுமன்றி மத பண்பாட்டுத்தளங்களிலும் நடைபெறுகிறது. அண்மையில் பத்துப் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்களை மொட்டையடித்து மஞ்சள் அங்கி தரிக்கச் செய்து புத்தபெருமானுக்கு அர்ப்பணம் செய்ததாகப் பத்திரிகைகளில் படங்கள் தாராளமாக வெளி வந்திருந்தன. இவை சிறுவர் துஷ்பிரயோகம் என எவரும் எடுத்துக் கொள்ளவில்லை. விடுதலைக்காக பெற்றோர் தமது பிள்ளைகளை இயக்கங்களில் சேர்த்து விடுகிறார்கள் என்றும் மாணவர்கள் சுய விருப்பின் பேரிலேயே இயக்கங்களுக்கு வருகிறார்கள் என்றுமே நமக்குச் சொல்லப்பட்டது. அது தவறு என்றால் பெற்றோர் பௌத்த மதத்தைப் பாதுகாக்கவே தமது சிறார்களை பௌத்த பீடங்களுக்கு அர்ப்பணித்திருப்பதையும் தவறு என்றே கூற வேண்டும்.

இவ்வாறு தான் மலையகத் தோட்டங்களில் இருந்து சிறுவர்கள் வீடுகள் கடைகள் உணவு விடுதிகள் போன்றவற்றுக்கு பெற்றோரால் வேலைக்கென அனுப்பிவைக்கப்படுகின்றனர். இது பொருளாதாரக் கஷ்டங்களாலும் அறியாமையாலும் பெற்றோரால் தமது பிள்ளைகளான சிறுவர்கள் மீது நடாத்தப்படும் கொடுமையாகும். இது கண்டிக்கப்பட்டு எதிர்க்கப்பட வேண்டும்.

ஆதலால் அரசியலில், ஆயுதப் போராட்டத்தில் மதத்தில் ஏனைய பண்பாட்டு நிறுவனங்களில் சிறுவர்கள் நிர்ப்பந்த அடிப்படையில் இணைக்கப்படுவது மோசமான சிறுவர் துஷ்பிரயோகமாகும். இது சிறுவர்களுக்கு எதிரான அரசியல் பண்பாட்டு சமூக அடக்குமுறையும் கொடுமையுமாகும்.

**மாறன்**

## காணாமற்போன குருதியைத் தேடி

(மைகள் அஹ்மட் மைகள்)

எங்குந் தேடிப் பார்த்து விட்டேன்
குருதியின் அறிகுறி இல்லை,
எங்கேயும் இல்லை.
தூக்கிலிடுவோனின் கைகள் தூயனவாக,
நகங்கள் தெளிவாக உள்ளன,
ஒவ்வொரு கொலைகாரனதுஞ் சட்டைக் கைகள்
துப்புரவாக உள்ளன.
கத்தி விளிம்பிலும் வாள் முனையிலும்
குருதியின் அறிகுறி இல்லை;
செம்மையின் சுவடே இல்லை.
தரை கறையற்று,
உட்கூரை வெளுப்பாக உள்ளது.

சுவடே இல்லாது காணாமற் போன குருதி
எழுதப்பட்ட வரலாற்றின் ஒரு பகுதியல்ல.
யார் எனக்கு அதனிடம் வழி காட்டுவார்?
அது பேரரசர்களின் பணியிற் சிந்தப்பட்ட குருதியல்ல,
அது கவரவிப்புக்களைப் பெற்றதல்ல,
அது எந்த வரமும் பெற்றதல்ல.
அது பலிச் சடங்குகளில் வழங்கப்பட்டதல்ல-
ஆலயமெதனும் பாவமன்னிப்புக் கிண்ணத்தில் வைக்கப்பட்டதல்ல,
அது போரெதிலுஞ் சிந்தப்பட்டதல்ல-
எவரும் வெற்றிப் பதாகைகளில் எழுதாதத் தீட்டியதல்ல.

கேட்கப்படாததால்
கேட்கப்படவேண்டி அது கதறியவாறுள்ளது.
கேட்க எவருக்கும் நேரமில்லை;
கேட்க யாருக்கும் விருப்பமில்லை.
அந்த அநாதையின் குருதி
கதறிக் கொண்டிருந்தது. ஆனாற் சாட்சிகள் இல்லை,
வழக்கேதும் தொடுக்கப்படவில்லை.
தொடக்கம் முதலாக இக் குருதி
தூசாலே ஊட்டம் பெற்றது;
பின்பு சாம்பலாயிற்று.
சுவடெதையும் விட்டுச் செல்லாது
தூசுக்கு உணவாயிற்று.

(தமிழில் : சிவசேகரம்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நேபாளத்தில் புரட்சி தொடரும்

## சென்னைக் கூட்டத்தில் தோழர் கஜ்ரேல்



**கம்யூனிசம் செத்துவிட்டது என எக்காளமிட்டுக் கொண்டிருந்த ஏகாதிபத்தியக் கும்பலை அதிர வைத்த நேபாள புரட்சியையும் மக்கள் யுத்தத்தால் அந்நாட்டில் எழுந்துள்ள புதிய அரசியல் நிலைமைகளையும் விளக்கி நேபாள பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)– யின் மையக்குழு உறுப்பினர் தோழர் கஜ்ரேல், சென்னை– எம். ஜி. ஆர். நகரில் 19.2.08 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.**

வரலாற்று சிறப்புமிக்க இந்த பொதுக்கூட்டத்தின் தோழமைக்குரிய தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு அரசியல் இயக்கங்கள்– அமைப்புகளின் தலைவர்களே! இங்கே வீரஞ்செறிந்த முறையிலே திரண்டிருக்கிற தமிழக மக்களே தமிழகத்தின் வரலாற்று புகழ்மிக்க போராடுகிற மக்களுக்கு முதற்கண் என்னுடைய சிவப்பு வணக்கத்தை வாழ்த்துக்களை உரித்தாக்க விரும்புகிறேன்.

உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னை சிறையில் மூன்றாண்டுகளுக்கு மேலாக நான் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது தமிழகத்திலே இருக்கிற அரசியல் இயக்கங்களின் தலைவர்கள் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் அனைவருக்கும் மேலாக மக்களாகிய நீங்கள் என்னை நேபாளத்திற்கு அனுப்பக் கூடாது நேபாள அரசிடம் ஒப்படைக்கக் கூடாது என்பதற்காகப் போராடினீர்கள். நான் நேபாளத்திடம் ஒப்படைக்கப்படுவதை நீங்கள் அப்படி தடுத்திராவிட்டால். அங்கு நேபாள இராணுவத்திடம் பிடிபட்ட ஐயாயிரம் பேர் என்ன கதிக்கு ஆளானார்களோ. அதே நிலைமைக்கு நானும் ஆளாகியிருப்பேன். நான் நேபாள அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் இப்போது உங்களிடம் பேசுவதற்கு இருந்திக்க மாட்டேன்.

உங்களுடைய இந்த போராட்டமும் உழைப்பும் உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடையாளம் என்று நாம் எடுத்துக் கொள்கிறோம்.

நேபாளத்திலே இருக்கிற அரசியல் சூழலைப் பொறுத்தவரை பல்வேறு அரசியல் சக்திகள்– புரட்சிகர சக்திகள் கூட நேபாளத்தின் நிலைமை எத்தகையது. அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது குறித்து குழம்பிப் போய் இருக்கிறார்கள். அமைதி வழி மாற்றத்தை நோக்கி நாங்கள் அடி எடுத்துள்ளோம். எங்களுடைய மக்கள் விடுதலை இராணுவம் 20,000 வீரர்களைக் கொண்டிருக்கிற வலிமையான இராணுவம்– ஐ.நா படைகளை விட இருமடங்கு பெரிய இராணுவம். இதைக் கண்டு அமெரிக்க ஏகாதிபத்தியமே அஞ்சக் கூடிய நிலை இங்கிருக்கிறது. அந்த இராணுவம் முகாம்களிலே அடைக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஆயுதங்கள் பெட்டகங்களிலே வைத்து பூட்டப்பட்டிருக்கின்றன. சில புரட்சியாளர்கள் நாங்கள் எங்களுடைய ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். ஆயுதங்களைக் கையளித்து விட்டோம் என்று கருதிக் கொண்டு குழப்பமடைந்திருக்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல.

பத்தாண்டு காலம் நடந்து வந்திருக்கிற மக்கள் போர் அங்கே இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழலைத் தோற்றுவித்திருக்கிறது. அந்த ஆயுதப் போராட்டம் தோற்றுவித்த அரசியல் சூழல் எத்தகையது என்றால் ஆயுதமேந்தி நாங்கள் அடையக்கூடிய நோக்கத்தை அமைதியான முறையிலே அடைகிற வாய்ப்பை அது ஏற்படுத்தியிருக்கிறது. எனவே தான் நாங்கள் ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறோம். தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோமே தவிர ஆயுதப் போராட்டத்தை ஒரேயடியாக கைவிட்டுவிடவில்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

எங்களுடைய நண்பர்களும் தோழர்களும் கவலைப்படுகிறார்கள். எங்களுடைய மக்கள் விடுதலைப் படை பாசறைகளுக்குள்ளே அடைபட்டிருக்கிறனவே ஆயுதங்கள் பெட்டகங்களிலே பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றனவே என்று அவர்கள் கவலைப்பட்டு கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். கவலைப்பட வேண்டாம். பெட்டகங்களைப் பூட்டி அதனுடைய சாவி எங்களுடைய படைத்தளபதியின் கையிலேதான் இருக்கிறது. எப்போது தேவை என்றாலும் திறந்து எடுத்துக் கொள்ள முடியும் என்று தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மறுதரப்பிலேயே வேறு சிலர் இருக்கிறார்கள். உதாரணமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் சொல்கிறது. மாவோயிஸ்டுகள் மாறிவிட வில்லை என்று மாவோயிஸ்டுகள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்று பிற்போக்காளர்கள் சொல்கிறார்கள். மாவோயிஸ்டுகள் மாறாவில்லை அவர்களை மாற்ற வேண்டும் என்று இந்திய அரசும் அப்படித்தான் சொல்கிறது. நேபாளத்திலே இருக்கிற பிற்போக்கு அமைப்புகள் சொல்கின்றன. நேபாள காங்கிரசு ஐக்கிய நேபாள மார்க்சிஸ்டு– லெனினிஸ்டு போன்ற அமைப்புகளெல்லாம் சொல்கிறார்கள். மாவோஸ்டுகள் மாறவில்லை என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் வந்திருப்பது எங்களை மாற்றிக் கொள்வதற்காக அல்ல. உங்களை மாற்றுவதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம்.

இப்போது நேபாளம் அரசமைப்புப் பேரவை தேர்தலுக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. நேபாள மாவோயிஸ்டு கட்சி இதற்கு முன்பே விரிவாக கூறியது. அரசமைப்பு பேரவைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசமைப்புப் பேரவை கூட்டப்பட்டு புதிய அரசமைப்புச் சட்டம் இயற்றப்படவேண்டும் அந்த புதிய அரசமைப்புச் சட்டத்தின் வழியாக புரட்சிகர மாற்றம் ஏற்பட வேண்டும் என்று. நாங்கள் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். இது குறித்தும் பலருக்கு சந்தேகம்– குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. புரட்சிகர அணிகள் இது குறித்து ஐயம் தெரிவித்து வருகிறார்கள்.

ஏன் தேர்தல் நடக்கிறது அத்தேர்தல் என்ன பங்கு வகிக்கிறது. தேர்தலில் நாங்கள் ஏன் பங்கேற்கப் போகிறோம் என்பன பற்றி அந்த நண்பர்கள் குழப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசமைப்புப் பேரவைக்கான தேர்தல் என்பதன் உண்மையான பொருள் விளங்கவில்லை. ஆகவேதான் அவர்கள் மற்றக் கட்சிகளோடு– தேர்தல் பங்கேற்பு கட்சிகளோடு எங்களை ஒப்பிட்டு குழப்பிக் கொள்கிறார்கள்.

நாங்கள் இந்த அரசமைப்புப் பேரவைக்கான தேர்தலில் உயிர்– மரணம் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறோம். ஏனென்றால் இந்த தேர்தலிலே புரட்சிகர சக்திகள் வெற்றி பெறுமானால் நாங்கள் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதாக ஒரு புதிய ஜனநாயக நேபாளத்தை உருவாக்குவதாக அது இருக்கும். நாங்கள் தோற்று பிற்போக்கு சக்திகள் வெற்றி பெறுவதாக இருந்தால் அவர்கள் ஒரு புதிய வடிவிலான முடியாட்சிக்குத் திரும்பி செல்கிற– பிற்போக்கு நிலைக்கு திரும்பிச் செல்கிற ஆபத்து இருக்கிறது. எனவே தான் மிகுந்த அக்கறையோடும் கடுமையான உழைப்போடும் இந்தத் தேர்தலில் வெற்றிபெற நாங்கள் உயிர்– மரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

அமெரிக்க மேல் நிலை வல்லரசு நேபாளத்தில் முடியாட்சியை ஆதரித்து கொண்டிருக்கிறது. அதனுடைய மேலாதிக்க நலன்களுக்கு அதுதான் பொருத்தமென்பதால் முடியாட்சியை ஆதரிக்கிறது. இந்தியாவிலே இருக்கிற இந்துத்துவ சக்திகள். "நேபாளத்தை பார்! அங்கே இந்து அரசு நடப்பதை பார்! அதேபோன்ற ஒரு



இந்து அரசை இந்தியாவில் நிறுவ வேண்டும்" என்பதற்கு நேபாளத்தை எடுத்துக்காட்டாக காட்டுவதற்காகவே நேப்பாளத்திலே முடியாட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே நாங்கள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு சவால் விடுகிறோம். உங்களுக்கு முடியாட்சி மீது காதல் இருக்குமானால். அந்த முடியாட்சியை உங்கள் நாட்டுக்கே கொண்டு போய் வைத்துக் கொள்ளுங்கள். தம்பிடி காசும் விலை கொடுக்காமல் முடியாட்சியை உங்கள் கையிலே ஒப்படைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நாங்கள் பா.ஜ.க. தலைவர்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். உங்களுக்கு முடியாட்சி மீது அவ்வளவு ஆசையும் காதலும் இருக்குமானால் அந்த முடியாட்சியை தில்லிக்குக் கொண்டு வந்து தில்லியிலே அரியணையில் அமர்த்திக் கொள்ளுங்கள். தில்லி அரியணையிலே முடிமன்னனை அமர்த்த மக்கள் உங்களை அனுமதிக்க மாட்டார்கள் என்றால். உங்கள் கட்சி அலுவலகத்திற்கு உள்ளே கொண்டு போய் வைத்து தினந்தோறும் வழிபாடு செய்யுங்கள்.

உலக மக்களுக்குப் பகைவனாக இருக்கிற அமெரிக்க வல்லாதிக்கம். வலிமை பொருந்திய ஒரு ஆற்றலாக இருக்கிற காரணத்தினால். அதனை ஒழித்துக்கட்ட நேபாள மக்கள் மட்டும் போதாது. உலகெங்கும் இருக்கிற மக்கள் ஒன்றுபட்டு தங்கள் பொதுப் பகைவனாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வீழ்த்த வேண்டும். ஆகவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீழ்த்துவதற்கு நேபாள– இந்திய மக்களின் ஒற்றுமை அவசியம் என்று கருதுகிறோம். நேபாள மக்களும் இந்திய மக்களும் ஒன்றுபட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவோம் என்று அறைகூவி அழைக்கிறேன்.

நாங்கள் தேர்தலிலே வெற்றி பெறக் கூடிய நிலையிலே இருக்கிறோம். தேர்தலிலே வெற்றி பெற்று புரட்சிகரமான மாற்றத்தை நாங்கள் ஏற்படுத்தப் போகிறோம் என்று கருதித் தான் பிற்போக்கு சக்திகள்– ஏகாதிபத்திய சக்திகள். விரிவாகக்கப் நேபாள பிற்போக்காளர்களை வலியுறுத்தி "தேர்தலை நடத்தாதே! தேர்தலை நடத்த விடாமல் செய்!" என்று தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நேபாளத்திலே நடைபெற இருக்கிற தேர்தலில் அந்த தேர்தல் போராட்டத்தில் மாபெரும் வெற்றி பெறுவோம் என்று உறுதியாக நம்புகிறோம். நேபாளத்தினுடைய 75 மாவட்டங்களிலும் சென்ற ஜனவரி 13– ஆம் தேதி நாங்கள் பெருந்திரள் கூட்டங்களை நடத்தினோம். அங்கே திரண்ட இலட்சக்கணக்கான மக்களைப் பார்த்து, பிற்போக்கு சக்திகள் எங்கள் வெற்றி உறுதி என்று தெரிந்து அஞ்சி நடுங்கி தேர்தலைச் சீர்குலைக்கவும் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெற விடாமல் தடுக்கவும் மீண்டும் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இரண்டு வழிகளுக்கும் தயாராக இருக்கிறோம். முதலாவதாக தேர்தலை நடத்தும்படி அரசை நெருக்கி நிர்ப்பந்திப்போம். அப்படி தேர்தல் நடத்தப்படுமானால் நாங்கள்– இடதுசாரி சக்திகள் வெற்றி பெற்று ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்றி கூட் டாட்சி குடியரசை புதியஜனநாயகக் குடியரசை நேபாளத்திலே நிறுவுவோம். ஒரு மக்கள் குடியரசை நாங்கள் நிறுவுவோம். அப்படி அவர்கள் தேர்தலை நடத்த மறுப்பார்களேயானால். சீர் குலைப்பார்களேயானால் இரண்டாவது வழி இருக்கிறது. நாங்கள் மக்களைத் திரட்டி இந்த அரசுக்கு எதிராக போராட்டங் களை நடத்த அணியமாக இருக்கிறோம்.

அவர்கள் தேர்தல் நடைபெறாவிடாமல் சீர்குலைப்பார்களானால் எந்த தேதியிலே தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டுமோ அதே நாளில் நாங்கள் மீண்டுமொரு மக்கள் எழுச்சிக்கு அறைகூவல் விடுப்போம். மீண்டுமொரு மக்கள் இயக்கத்தை நடத்தி இந்தத் தேர்தலை நடத்த விடாமல் தடுத்த சக்திகளை தூக்கியெறிவோம். அப்போது அந்த மக்கள் எழுச்சி மூலமாக வீழ்த்தப்படுவதும் வெளியேற்றப்படுவதும் முடியாட்சியாக மட்டும் இருக்காது. நேபாளத்தினுடைய பிற்போக்குச் சக்திகள் அனைவரையும் தூக்கியெறிந்து விட்டு நேபாளத்தை விடுதலை செய்து எவரெஸ்டின் உச்சியிலே புரட்சி செங்கொடியினைப் பறக்க விடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்தின் பிற்போக்காளர்கள்– ஏகாதிபத்தியவாதிகள் ஒரு வதந்தியைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். 21–ஆம் நூற்றாண்டில் இனிமேல் உலகத்தில் எந்த நாட்டிலும் புரட்சி நடைபெற முடியாது என்று அவர்கள் மக்களை ஏய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே நேபாளத்தில் புரட்சியாக இருக்காது. அது இந்திய மக்களுக்கும் உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் நம்பிக்கையூட்டுகிற புதிய புரட்சியாக இருக்கும். இந்திய மக்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வார்களேயானால் இந்திய மக்களும் நேபாள மக்களும் இந்த புரட்சிக்காக ஒன்றுபட்டு நிற்பார்களேயானால் நேபாள புரட்சியைத் தடுத்து நிறுத்துகிற சக்தி உலகத்தில் எவருக்குமில்லை என்று நான் உறுதியாகச் சொல்வேன். இந்திய– நேபாள மக்களின் ஒற்றுமையின் வாயிலாக அந்தப் புரட்சியை நாம் வெற்றி பெறச் செய்வோம்.

நான் கர்நாடகம் சென்றிருந்த போது அங்கே செய்தி ஏடுகளிலேய ஒரு செய்தியைப் படித்தேன். எங்கள் தலைவர் பிரசந்தா அவர்கள் இலங்கையிலே தமிழீழ விடுதலை இயக்கத்தைப் பற்றியும் அந்த இயக்கத்தைப் பற்றியும் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைப் பற்றியும் என்ன கூறினார் என்பது பற்றியது அது. அதனால் ஒரு குழப்பம் நிலவுவதாகத் தெரிந்து கொண்டேன். உண்மை என்னவென்றாரல் இலங்கையிலிருந்து ஒரு அமைச்சர் நேபாளத்திற்கு வந்திருந்தார். அவர் எங்களுடைய தலைமையைச் சந்தித்துப் பேசுவதற்காக வந்தார். நான் எங்கள் கட்சியின் பன்னாட்டு பிரிவின் தலைவர் என்ற போதிலும் அந்த கூட்டத்தில் நானும் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்றாலும் கூட அந்த நேரத்தில் வேறு பணி காரணமாக நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எங்கள் தலைவரை அந்த அமைச்சர் சந்தித்துப் பேசிவிட்டு வந்து வெளியே செய்தியை திரித்து தவறாக வெளியிட்டு விட்டார். இலங்கையில் ஆயுதப் போராட்டம் நடத்த தேவையில்லை என்றும் இலங்கைத் தமிழர்கள் அமைதி வழியிலே தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் எங்கள் தலைவர் கூறியதாக அவர் சொல்லிச் சென்று விட்டார். இது முழுப்பொய் முழுக்க முழுக்க தவறான செய்தி என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எங்கள் கட்சியின் கொள்கை என்னவென்றால் எந்தவொரு விடுதலை இயக்கத்தையும் நாங்கள் ஆதரிக்கிறோம். எங்கெல்லாம் தேசிய ஒடுக்குமுறை நிலவினாலும் அதை எதிர்த்து விடுதலைக்காகப் போராடுகிற உரிமை மக்களுக்கு உண்டு. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் சிங்களப் பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகிறது. ஆகவே இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் தேசிய விடுதலைக்காகப் போராட முழு உரிமை உண்டு. அவர்களது போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நேபாளத்திலேயே சின்னஞ்சிறு தேசிய இனங்கள் சில இருக்கின்றன. அந்த தேசிய இனங்கள் தங்கள் விடுதலைக்காக போராடுகின்றன. ஏனென்றால் அவை தேசிய ஒடுக்கு முறைக்

தொடர்ச்சி 15ம் பக்கம்.............

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இசை வேள்விகளில் எரிகிற அடையாளங்கள்

## இசை இளவரசர்கள் ஒரு புறம் பிராமணிய சங்கீதம் மறுபுறம் தமிழிசை சாகடிக்கப்படுகிறது

இப்போதெல்லாம் அற்ப நிகழ்ச்சிகட்கெல்லாம் ஆடம்பரமான பேர்கள் சூட்டப்படுகின்றன. இது விளம்பரயுகம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனாற் சமூகங்கள் விளம்பரங்களால் விருத்தி பெறுவதில்லை. உண்மையில் சமூகஞ் சீரழியவே அவை வழி செய்கின்றன.

அண்மையில் இரண்டு வகையான இசைத் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. ஒன்று இசை இளவரசர்கள் என்ற தலைப்பில் ஒரு தொலைக்காட்சி நிறுவனம் நடத்தியது. அதற்கான விளம்பரங்களில் அதன் வரலாற்றில் முதன்முதலாக நடக்கிற அத்தகைய போட்டி நிகழ்ச்சி என்ற விதமாகத் தொடர்ச்சியாகக் கூறப்பட்டது. உலகில் என்ன நடக்கிறது என்று தெரியாதவர்கள் "தெரிவிப்பது நாங்கள் கேட்டு முட்டாளாவது நீங்கள்" நிறுவனத்தின் இந்தப் புலுடாவையும் நம்பி ஏமாறாலாம். அது போக இந்த நிகழ்ச்சி கர்நாடக இசை மரபில் வந்த ஒன்று என்கிற விதமான மயக்கத்தை ஏற்படுத்துகிற விதமாகச் சங்கீத மும்மூர்த்திகள் எனப்படுகிற 19ம் நூற்றாண்டின் மூன்று பெரிய சாகித்தியகாரர்களது படங்களுடன் சில தகவல்களைத் தவறுகளுடன் நாளாந்தம் தொலைக்காட்சியிற் போட்டு விளம்பரப்படுத்தினார்கள்.

இந்த இசை நிகழ்ச்சிகள் மூலம் சினிமாப் பாட்டுக் கலாச்சாரமும் மட்டரகமான பொப் இசையும் ஊக்குவிக்கப்படுகிறதே ஒழிய உருப்படியான படைப்பாற்றல் உருவாக்கப்படுவதாகச் சொல்ல ஒரு ஆதாரமும் இல்லை. இந்த இசை நிகழ்ச்சிகளில் கேட்கிற இசையோ பாடல் வரிகளோ இந்த மண்ணையும் மக்களையும் பற்றியதல்ல. அப்படி இல்லாது போனாலும் பரவாயில்லை. மிக மட்டரகமான ரசனையையே வளர்த்து இளைஞர்களைச் சீரழிக்கிற திசையிலேயே முழு நிகழ்ச்சியும் அமைகிறது.

இந்தியச் சினிமா நடிக நடிகையரையும் படங்களையும் ஆடல்பாடல்களையும் பின்பற்றியே இங்குள்ள இளம் படைப்பாளிகளும் செயற்பட வேண்டும் என்கிற சிந்தனை திட்டமிட்டே ஊக்குவிக்கப்படுகிறது. இதற்குப் பக்க பலமாக நமது ஏடுகளின் சினிமாத் தகவல்களும் சினிமா பற்றிய பரபரப்புச் செய்திகளும் நடிகநடிகையரது அந்தரங்க வாழ்க்கை பற்றிய அரட்டைகளும் அமைகின்றன. இந்தச் சீரழிவை அடையாளங் காண்பது எளிது என்பதால் இதற்கான மாற்று ஒன்றைத் தேடுவதும் நடைமுறைப்படுத்துவதும் இயலுமானது. எனினும் சமூக விழிப்புணர்ச்சி ஏற்படாமல் மக்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாமல் அதை முன்னெடுப்பது சிரமம். எனினும் இயலாததல்ல. முதலில் இது தான் ஈழத் தமிழருக்கான நவீன இசைக் கலை என்ற பம்மாத்து எதிர்க்கப்பட வேண்டும்.

இன்னொரு வகையான பம்மாத்து மரபு என்கிற பேரில் நடந்தேறுகிறது. கம்பன் கழகம் என்கிற அமைப்பின் பேரில் பலவிதமான திருவிழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. அவற்றின் மூலம் வசதி படைத்தவர்கள் பலர் தம்மைச் சமூகப் பிரமுகர்களாகவும் கலைகளின் புரவலர்களாகவும் காட்டிக் கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. இந்த விதமாகச் சேகரிக்கப்படுகிற நிதியில் ஒருபகுதி தமிழகத்தில் உள்ள கர்நாடக இசைக் கலைஞர்களை முக்கியமாகப் பார்ப்பனிய நோக்கில் கர்நாடக இசையைப் பேணுகிற ஒரு கூட்டத்தினரை இலங்கைக்குக் கொண்டு வந்து இசை நிகழ்ச்சிகளை நடத்துவது.

கடந்த முப்பதாண்டுகளுள் இலங்கையின் தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையே கர்நாடக இசை, பரத நாட்டியம் என்கிற துறைகளில் அக்கறை பெரிதும் வளர்ந்துள்ளது. அரங்கேற்றங்கள் ஆடம்பரமான முறையில் பல லட்சங்கள் செலவிட்டு நடைபெறுகின்றன. பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தினரா என்று கேட்கக் கூடிய விதமான முறையில் நிகழ்ச்சிக்கு வருவோரது ஆடை அலங்காரங்கள் முதலாக நிகழ்ச்சிகளின் மேடை அமைப்பு வரை படாடோபமாக இருக்கக் காணலாம். இசையும் நடனமும் பற்றிய ஈடுபாட்டை விடப் போட்டி அந்தஸ்து மனோபாவமே முக்கியமான இயக்குஞ் சக்தியாக இருந்து வந்துள்ளது.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் கோவில்களில் திருவிழாக் காலங்களில் கச்சேரி, சின்னமேளம் பார்க்கப் போகிற அதே விதமான மனோபாவத்துடன் இன்று தமிழகத்து இசை நாட்டியக் கலை நிகழ்ச்சிகளை இலவசமாகப் பார்த்துப் போகிற நிலையில் நமது தமிழ்ச் சமூகத்தின் நடுத்தர வர்க்கம் இருந்து வருகிறது.

'நவீன' சினிமா இசையும் ஆட்டமும் எந்தளவு தூரத்திற்கு நம்முடையனவல்லவோ அதே அளவுக்கு இந்தக் கர்நாடக இசையும் பரதமும் நம்முடையனவல்ல. அதாவது தமிழர்களுடையவை அல்ல. இவை இன்னொரு சூழலில் அதிகாரமும் வசதியும் படைத்த குறிப்பிட்ட சில வர்க்கத்தினரின் நுகர்வுக்காகப் பேணப்பட்டவையும் இன்னொரு புறம் மதஞ் சார்ந்தும் கோவிற் கலாச்சாரஞ் சார்ந்தும் விருத்தி பெற்றவையும் எனலாம். இவற்றை விருத்தி செய்தவர்களிற் சிலரிடம் அதிகார எதிர்ப்பு முனைப்பும் பக்தி இயக்கஞ் சார்ந்த விடுதலைச் சிந்தனையும் இருந்த போதிலும் இவை மேட்டுக்குடிகளதும் உயர் சாதியினரதும் நுகர்வையே நோக்காகக் கொண்டு பேணப்பட்டும் வந்தன. காலப் போக்கில் நடுத் தர வர்க்கத்தைக் கவருகிற விதமான விருத்திக்கு வணிக நோக்கங்கள் உதவின. எனினும் கர்நாடக இசை மீதான வடமொழி, தெலுங்கு மொழி வழியிலான பிராமண ஆதிக்கத்தை உடைக்க உருவான தமிழிசை இயக்கத்தால் தமிழிசையின் வர்க்க அடையாளத்தை அதிகம் மாற்ற இயலவில்லை.

கிராமச் சூழலிலிருந்து புலம் பெயரிக்கப்பட்டு என்.ஜி.ஓக்களாலும் அரச நிறுவனங்களாலும் நகரங்களில் மேடையேறுகிற கிராமியக் கலைகளும் தமது இடப்பெயர்வுடன் சேர்ந்து தமது சமூக அடையாளத்தையும் சமூகப் பணியையும் இழந்துவிடுகின்றன. அவையும் பண்பாட்டு வணிகத்தின் ஒரு பகுதியாகி விடுகின்றன. எனினும் நம் முன்னே ஒரு புறம் நவீனத்துவத்தின் பேரால் ஒரு வகையான இசை, நாட்டிய மரபுகள் ஒரு கும்பல் கலாச்சாரமாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. இவற்றில் இளையோர் திரள்திரளாகப் பங்கு பற்றினாலும் இவை எந்த விதமான சமூக நோக்கும் பார்வையும் அற்று இளைய தலைமுறையினரைச் சீரழிவுப்பதையிலேயே இட்டுச் செல்ல முனைகின்றன.

இன்னொரு புறம் மரபின் பேரால் சமூகத்துடன் எந்த விதமான ஒட்டுறவும் அற்ற முறையில் ஒரு பாரம்பரிய இசையும் நடனமும் மேடைக் கவர்ச்சியுடன் சேர்த்து நமக்குப் பரிமாறப்படுகிறது. இதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த கலைஞர்களின் விருத்திக்கோ அதினும் முக்கியமாகச் சமூக உணர்வுடைய கலைப் படைப்புகளது உருவாக்கத்திற்கோ நன்மை இல்லை என்பது போக இவை பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

1950களின் பிற்பகுதி தொடங்கி 1970கள் வரை ஈழத்து இசை என்று பெருமையுடன் சொல்லக் கூடிய ஒரு இசை மரபு உருவாகி வளர்ந்து வந்தது. சமூகப் பாங்கான அதன் உள்ளடக்கம் அதன் முக்கியமான ஒரு பண்பு. சினிமாக் கலாசாரத்துடனோ வணிகமயமான பாரம்பரியக் கலைகளுடனோ போட்டியிட்டு அது வணிக முறையில் வெற்றி கண்டிராது. ஆனால் ஒரு சமூகத்தின் ஆன்மாவாக அதன் விடிவுக்கான ஒரு ஒளியாக அது விருத்தி பெற்றிருக்க இயலும். 1978க்குப் பின்பான திறந்த பொருளாதாரக் கொள்கையும் உலகமயமாக்கலும் தந்த சமூகச் சீரழிவை எதிர்த்து நிற்க வல்ல ஒரு சமூக இயக்கம் இல்லாத சூழலில் அது தமிழ்த் தேசியவாதம் வகுத்த எல்லைகளை மீறி வளர இயலாது முடங்கிப் போய்விட்டது. சமூக விடுதலை என்பது பண்பாட்டு விடுதலையுமாகும். ஒன்றில்லாமல் மற்றது இல்லை. எனவே புதிய பண்பாடு பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நம்முடையது என்று நாம் ஒன்றுக்கு உரிமை கொண்டாட அது முற்றிலும் நமது முன்னோரால் உருவாக்கப்படதாக இருக்க வேண்டியதில்லை. ஒரு கலை வடிவம் நமது சமூகத்தின் நிலையையும் அது செல்ல வேண்டிய திசையையும் நமது மக்களின் சிந்தனையின் உயர்வையும் அடையாளப் படுத்துமாயின் அதுவே நமது கலைவடிவமாகும்.

மற்றப்படி மரபின் பேராலும் நவீனத்துவத்தின் பேராலும் நடத்தப்படுகிற இசை வேள்விகளில் பயனுள்ள எதுவும் விளையப் போவதில்லை. வாடிக் கிடக்கிற நமது பண்பாட்டு அடையாளம் அந்த வேள்விகளில் எரிந்து சாம்பலாவதை நாம் பார்த்துக் கிடப்போமா?

**திருமுருகன்.**

---

**14ம் பக்கத் தொடர்ச்சி.......**

குள்ளாகியிருக்கின்றன. அந்த தேசிய இனங்களின் போராட்டத்தை எங்கள் கட்சிதான் தலைமையேற்று நடத்துகிறது. தேசிய விடுதலைக்காக நாங்கள் போராடுகிறோம். உலகெங்கும் தேசிய விடுதலை இயக்கங்களை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இறுதியாக வீரஞ்செறிந்த தமிழ் மக்களாகிய உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். நேபாளத்தினுடைய புரட்சிகர போராட்டத்தை நீங்கள் ஆதரிக்க வேண்டும். முடியாட்சியையும் ஏகாதிபத்தியத்தையும் வீழ்த்தி விட்டு ஒரு புதிய அரசை புதிய அரசமைப்பை புதிய சமூகத்தை உருவாக்குவதற்கான நேபாளத்தினுடைய இந்தப் போராட்டம் வெற்றி பெறுவதற்குத் துணை நிற்குமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் போராட்டம் வெற்றி பெறுகிறபொழுது உலகத்தின் மீது உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியிலே செங்கொடி பறக்கும். அந்தச் செங்கொடி உலகத்தின் உச்சியிலே பறக்கிற பொழுது உலகம் முழுவதும் அதை பார்க்கும். இந்தியா வெங்கும் உலகம் முழுவதும் அது புரட்சியைப் பரவச் செய்யும். உலகப் புரட்சிக்கு அது அடையாளமாக- வழிகாட்டுதலாகத் திகழும். ஆகவே எங்கள் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் ஆதரவு தாருங்கள், தாருங்கள் என்று வேண்டி முடிக்கிறேன்.

**நன்றி செவ்வணக்கம்!**

நன்றி: புதிய ஜனநாயகம்
மார்ச்சி 2008

---

**12ம் பக்கத் தொடர்ச்சி......**

மாகும். அந்த ஒடுக்குமுறையை எதிர்த்து அறுபதுகளில் வீறு பெற்று எழுந்த வடபுலத்துப் போராட்டங்களில் பங்கேற்ற கிராமங்களில் அதுவும் ஒன்றாகும். சாதிவெறியர்களின் தாக்குதல்களுக்கும் வீடெரிப்புகளுக்கும் உள்ளாகியதுடன் அவற்றை எதிர்த்துப் போராடி நின்ற கிராமமுமாகும். அவ்வேளை மு. கந்தவனம் என்ற இளம் தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கப் போராளி சாதிவெறியர்களால் கொல்லப்பட்டார். அந்தக் கிராமம் பொன் கந்தையா காலத்திலிருந்தே பொதுவுடைமைக் கட்சிக் கிராமமாக இருந்து வந்த போர் குணம் மிக்க கிராமங்களில் ஒன்றாகும்.

அத்தகைய கிராமச் சூழலில் இருந்து வந்தவரே சிவநேசன் ஆவார். அவர் தமிழ்த் தேசியவாதப் பரப்புரைகள் உச்ச நிலையில் இருந்த சூழலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் உள்வாங்கப் பட்டார். அதன் ஊடாக அவர் 2004ல் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தமிழ்க் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசியத்தை உயர்த்திப் பிடிப்போராக இருந்த போதிலும் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் வர்க்க சாதிய பிரதேச அடையாளங்கள் இருந்து வந்துள்ளன. அவர்களில் பலரிடம் தமிழர் பழைமைவாத ஆதிக்கக் கருத்தியலும் சிந்தனையுமே இன்றும் இருப்பதைக் காண முடியும். அத்தகையோரிடையே கி. சிவநேசன் வேறுபட்டவராகவும் தனித்துவம் மிக்கவராகவும் விளங்கினார் என்பது மறைப்பதற்குரிய ஒன்றல்ல. அவர் தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அதன் ஒரு கூறாக விளங்கி வரும் சாதியத் தையும் தீண்டாமையையும் எதிர்க்கும் ஒரு சாதிய எதிர்ப்பு உணர்வாளனாக விளங்கினார். மேநிலையாக்கப் பெற்ற சில தாழ்த்தப்பட்ட கனவான்கள் அம் மக்கள் பற்றி கவனிக்காது தமது சுய முன்னேற்றம் பற்றிச் சிந்தித்து செயலாற்றி வரும் இன்றைய சூழலில் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலை பற்றியும் அவர்களது வாழ்வில் மாற்றம் ஏற்படவேண்டும் எனவும் மனப்பூர்வமாக விரும்பிச் செயல்பட்டு வந்த ஒரு வராக சிவநேசன் விளங்கி னார். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட பின் தங்கிய கிராமங்களின் கல்வி பொருளாதார பண்பாட்டு விடயங்களில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வந்த ஒருவராகக் காணப்பட்டார். தனது வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பல பின் தங்கிய கிராமங்களுக்கு நிதி ஒதுக்கி முடிந்தளவு உதவி புரிந்தும் வந்தார். அவர் புலிகள் இயக்கத்தின் மீது விசுவாசம் கொண்டிருந்த தமிழர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் மனித நேயமும் மக்கள் சார்பும் குறிப் பாக தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அக்கறை கொண்ட ஒருவராக இருந்தும் வந்தார். பாராளுமன்றப் பதவிகள் பெறுவதால் தாழ்த்தப்பட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பதை அனுபவவாயிலாக உணர் ந்த ஒருவராகவும் சிவநேசன் இருந்து வந்தார். அத்துடன் தமிழ்த் தேசிய இன த்தின் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் சாதிய தீண்டாமை உள்ளிட்ட பின்தங்கிய பொருளாதார கல்வி சமூகப் பிரச்சினைகள் இன விடுதலைப் போராட்டத்தில் அழுத்தத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறு த்தி வந்த ஒருவராகவும் இருந்து வந்தார்.

அத்தகைய ஒரு சமூகப் பற்றும் மனித நேயமும் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அக்கறையும் கொண்ட மறைந்த கி. சிவநேசன் அவர்களுக்கு புதிய பூமி ஊடாக எமது அஞ்சலியையும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம்** **நண்பர்கள்**


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஏப்ரல் 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

முடியாட்சிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும எதிரான நேபாள மக்களின் புரட்சியை ஆதரித்து சென்னை எம். ஜீ.ஆர். நகரில் 19.02.08 அன்று நடந்த பொதுக்கூட்டித்தில் திரண்ட மக்கள் வெள்ளம். இக்கூட்டத்தில் நேபாள கம்யூனிஸ்டு கட்சியின் (மாவோயிஸ்ட்) மத்திய குழுத் தோழர் கஜ்ரேல் உரையாற்றுகிறார்.



# இமயத்தின் உச்சியில் செங்கொடி



மாவோஸ்ட் தலைவர் தோழர் பிரசண்டா

நேபாளத்தில் மார்ச் 10ம் திகதி அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெறுகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் முடியாட்சியை வீழ்த்தவும் மக்கள் ஜனநாயக ஆட்சியைத் தோற்றுவிக்கவும் ஆயுதப் போராட்டம் நடாத்தி வந்த நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தற்காலிகமாக ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு தேர்தலில் பங்கு கொள்கிறது. தேர்தலில் கம்யூனிஸ்டுக்கள் முற்போக்குவாதிகள் ஜனநாயக சக்திகள் வெற்றி பெற்றால் முடியாட்சி முற்றாக முடிவிற்கு கொண்டுவரப் படும். ஆனால் அமெரிக்க இந்திய பின்புலச் சூழ்ச்சியுடன் தேர்தல் முறைகேடாக நடந்து பிற்போக்கு சக்திகள் வெற்றி பெற்றால் நேபாளத்தில் மக்கள் புரட்சி தொடரும். எக்காரணம் கொண்டும் உயர்த்தப்பட்ட செங்கொடி கீழே இறக்கப்படமாட்டாது என்ற உறுதியுடனேயே மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் வீரம் செறிந்த நேபாள மக்களும் இருக்கின்றனர்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.